0849

வீர சிதம்பரனார்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS
923. 25481

வீர சிதம்பரனர்

இயற்றியவர்:

வித்வான் நா. இராமய்யா பிள்ளை அவர்கள்

தமிழாசிரியர்

யூ. ஸி. ஹைஸ்கூல், மதுரை

விவேகாநந்தா அச்சகம்

கல்வி நூற் பதிப்பகம்

தளவாய்த்தெரு, மதுரை

பதிப்புரிமை]

[விலை அணு 14

சென்னை, "காண்டீபம்" ஆசிரியர்
உயர்திரு. எஸ். எஸ். மாரிசாமி அவர்கள்
மதிப்புரை

இந்திய சரித்திரத்திலேயே மிகப் புகழ் படைத்த காலத்தில் நாமிருக்கிறோம். இப்புகழுக்கு வித்திட்ட பல பெரியார்களில் வீரர் சிதம்பரனாரும் ஒருவர். சிதம்பரம் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் தென் சீமையிலிருந்த வெள்ளையர் கூட்டம் நடு நடுங்கும். அந்நியர் ஆட்சியை வேரறக் களைய முயன்ற பல வீரர்களில் முதன்மை பெற்ற வீரராய் நின்றவர் சிதம்பரம்பிள்ளை. அமெரிக்காவுக்கு ஆடம் ஸாமுவேல், துருக்கிக்கு கமால் பாஷா, அயர்லாந்துக்கு காலின்ஸ், சீனாவுக்கு ஸன்யாட்ஸன் என்று எப்படி விடுதலைப் போராட்ட வீரர்கள் சரித்திரம் காட்டுகிறதோ அதே போல தமிழகத்துக்கு வீரரில் வீரராய் நின்றவர் சிதம்பரம்பிள்ளை என சரித்திரம் சாற்றும். சிதம்பரம் பிள்ளையின் தீரத்தையும் தியாகத்தையும் இன்றைய தமிழ் உலகும் எதிர் காலத் தமிழர்களும் மறந்து விடக் கூடாது. எக் காலத் தமிழர் உள்ளத்திலும் சிதம்பரனாரின் நினைவுச் சிலை நிலை கொள்ளுவது அவசியம். உள்ளத்தில் சிலை எழுப்ப ஓவியமோ காவியமோ தான் உதவ முடியும். இந்த உதவியை மதுரைத் தமிழறிஞர் வித்வான் கா. இராமய்யா பிள்ளை அவர்கள் செய்ய முன் வந்திருக்கிறார்கள். அவர்கள் எழுதித் தந்திருக்கும் 'வீர சிதம்பரனார்' என்னும் நூல் சிறந்ததொரு நூல் எனக் கருதுகிறேன்.

வீரர் சிதம்பரம் பிள்ளையைப் பற்றி பல நூல்கள் வெளி வந்திருக்கின்றன. அவற்றில் பெரும்பாலும் வீர சாவர்க்கார்

எழுதிய 'இந்திய விடுதலைப் போராட்ட' நூல் போலவே இருக்கின்றன. உணர்ச்சியைத் தூண்டும் ஆவேச நடையும் அலங்கார வார்த்தைகளும் மலிந்து நூலின் உயிரோட்டத்தை அமுக்கி விடுகின்றன. இத்தகைய எழுத்தும் நடையும் நாட்டிற்குத் தேவையானவை தான். போராட்டம் நடந்து கொண்டிருக்கிற வேளைகளில் இத்தகைய நூல்கள் வெளிவருவது பேருதவியாக இருக்கும். ஆனால் அமைதியும் சாந்தமும் தேவைப்படும் வேளைகளில் இவற்றைப் படிக்க 'சப்' பென்றிருக்கும். இந்த ஒரு காரணத்துக்காகத்தான் சரித்திராசிரியர்கள் எக்காலத்துக்கும் உகந்த நடையையும் முறையையும் கையாள்வார்கள். அதிலும் வாழ்க்கைக் குறிப்பு எழுதுகிறவர்கள் இதைத் துளிகூடப் பிசகாது மேற்கொள்வார்கள்.

வித்வான் இராமையா பிள்ளை அவர்களின் நடையும் முறையும் மேலே எடுத்துக் கூறிய வண்ணம் அமைந்திருக்கின்றன. முக்கியமாக மாணவ மாணவியர் உள்ளத்திலே சிதம்பரனாரின் நினைவு என்றென்றும் மறக்காதபடி எழுத்திலே ஓவியமே தீட்டியிருக்கிறார் ஆசிரியர். இந்த ஓவியத்துக்கு மிக எடுப்பான வண்ணங்களைத் தீட்டுவது போல பல புள்ளி விவரங்களையும் பல தகவல்களையும் தந்து வீர சிதம்பரனாரை அமர சிதம்பரனாராக ஆக்கிவிட்டார் ஆசிரியர். இந்நூலாசிரியரின் முயற்சி பெரும் வெற்றி பெற்றிருக்கிறது என்பதை நிச்சயமாகக் கூறுவேன். இந்நூல் ஆசிரியரையும் இதனைச் சிறப்பான முறையில் வெளியிட்ட 'வேல் வெளியீட்டின்' அதிபர் ஸ்ரீ. கி. பழனியப்பன் அவர்களையும் பாராட்டுகிறேன்.

எஸ். எஸ். மாரிசாமி

வீர சிதம்பரனார்

1. கப்பல் செலுத்தியவர்

தமிழ் என்றால் இனிமை; தமிழன் என்றால் இனிமையுடையவன்; தமிழ்நாடு என்றால் இனிமையுடைய நாடு. தமிழ் என்றால் பண்பு; தமிழன் என்றால் பண்புடையவன்; தமிழ்நாடு என்றால் பண்புடைய நாடு. தமிழ் என்றால் வீரம்; தமிழன் என்றால் வீரமுடையவன்; தமிழ்நாடு என்றால் வீரமுடைய நாடு. தமிழ் என்றால் இயற்கை; தமிழன் என்றால் இயற்கையோடு வாழ்கிறவன்; தமிழ்நாடு என்றால் தட்ப வெப்பம் சமநிலையான இயற்கை வளனோடு கூடிய நாடு.

தமிழ்நாடு வடக்கே திருப்பதி என்று வழங்கும் திருவேங்கடமலையையும் தெற்கே குமரி என்ற பெயர் கொண்டு ஓடிய நதியையும் மேற்கே கடலையும் கிழக்கே கடலையும் எல்லையாகக் கொண்டு ஒரு காலத்தில் திகழ்ந்தது என்று பனம்பாரனார் என்ற புலவர் கூறுகிறார். இப் புலவர் பெருமான் கூறும் இச் செய்தி தொல்காப்பியம் என்ற தனித்தமிழ் இலக்கண நூலின் பாயிரமாக அமைந்திருக்கும் பாவில் காணப்படும். செந்தமிழும் கலையும் ஒருங்கே யமைந்த சிலப்பதிகாரத்தில் வடக்கே திருவேங்கட மலையையும் தெற்கே தற்போதுள்ள குமரிமுனையை யும் கிழக்கும் மேற்கும் கடலையும் எல்லையாகக் கொண்டது தமிழ்நாடு என்று கூறப்பட்டுள்ளது. "திருமால் நின்ற திருவேங்கடமலையும் குமரிக்கட லும் என்று தமிழுக்கு எல்லை அறுக்கப்பட்ட

குளிர்ந்த நீர்வளமுள்ள அழகிய தமிழ்நாடு" என்று இந்தியாவின் நிதி மந்திரியாயிருந்த டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் தாமெழுதிய சிலப்பதிகார உரையில் குறிப்பிடுகிருர்கள். தற்போதுள்ள குமரிமுனைக்குத் தெற்கேயிருந்த நாடு கடலால் விழுங்கப்பட்டது.

இத் தமிழ்நாட்டில் சேர, சோழ, பாண்டியர் என்ற பேரரசர் மூவர் ஆட்சி புரிந்து வந்தனர். சேரமரபினரில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்பான் இமயமலை வரை படையெடுத்துச்சென்று வென்று அம் மலையின் மேல் தன் இலாஞ்சனையை (முத்திரையை) நாட்டினுன். அவனது இலாஞ்சனை யில். மேற்கு நாட்டுக்காரரான யவன அரசரைப் போரில் வென்று பிடித்து அவர் கையைப் பின் கட்டாகக் கட்டிவந்தான். அவரிடமிருந்த அணி கலங்களையும் வயிரங்களையும் கொண்டு வந்து தன் தலைநகர மக்களுக்கு வழங்கினுன். நெடுஞ்சேரலா தனுக்குக் கடும்பகையாகப் பக்கத்திலே சிலர் வாழ்ந்து வந்தனர். அவர் மேற்குக் கடலின் மத் தியிலிருந்த ஒரு தீவில் வாழ்ந்து, அடிக்கடி நெடுஞ் சேரலாதனுக்குத் துன்பம் கொடுத்து வந்தனர். அப் பகைவர்மேற் போர்தொடுத்து கப்பற்படை யுடன் சென்று வென்ருன். அவரது காவன் மர மான கடம்பை வெட்டியெறிந்தான். 'வலம்படுமுரசிற் சேரலாதன், முந்நீர் ஓட்டிக் கடம்பு அறுத்து' என்ற அகநானூற்று வரிகள் இதை விளக்கும். பதிற்றுப் பத்து 2-ம பத்தும் இச்செய்தியைத் தெரிவிக்கும்.

நெடுஞ்சேரலாதன் மகன் சேரன் செங்குட்டு வன் என்பவன் கண்ணகிக்குக் கல் எடுக்க இமயம்

சென்று, அங்கு எதிர்த்தாரை வென்று வந்தவன். கடலை அரணாகக் கொண்டு கடல்நடுவில் வாழ்ந்த சிலர் அவனுக்குப் பகைவராய் இருந்தனர். பகையரசர் 'கடலின் நடுவில் இருக்கிறோம்' என்று இடர் பல விளைத்தனர். பொங்கியெழும் கடலிலும் செங்குட்டுவன் படையெடுக்கத் துணிந்தான். எண்ணிறந்த மரக்கலங்களை ஒன்று சேர்த்தான். சிறந்த வேல்களை அவற்றிலே ஏற்றினான். கலங்களைக் கடலுட் செலுத்தினான். கடல்வலியை அழித்தான். பகைவர்களை ஒழித்தான். பகைவர் நிலமிருந்து அவன் நிலம் வரை இடைப்பட்ட கடலில் கப்பலே காணப்பட்டன. இதனால் அவன் 'சேரமான் கடலோட்டிய வேல் கெழு குட்டுவன்' என்ற பெயரைப் பெற்றான். இச் செய்தி அகநானூற்றாலும் பதிற்றுப்பத்து 5-ம் பத்தாலும் அறியலாகும். இவர் இருவர் காலமும் சங்ககாலம்.

இராசராசசோழன் சிங்களர் வசிக்கும் இலங்கை முதலிய தீவுகளுக்குக் கப்பற்படை செலுத்திச் சென்று வென்றான் என்று சாசனங்கள் கூறுகின்றன. செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள உக்கல் என்ற கிராமத்தின் திருமால் கோவிலில் காணப்படும் சாசனத்திலும் தஞ்சாவூரிலுள்ள இராசராசேச்சுரர் கோவிலில் காணப்படும் சாசனத்திலும் "முரட்டொழில் சிங்களர் ஈழமண்டலமும் இரட்டபாடி ஏழரை இலக்கமும் முன்னீர்ப்பழந்தீவு பன்னீராயிரமும் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட" என்று வரும் வரிகள் இச்செய்தியை வலியுறுத்தும்.

இராசேந்திரசோழன் அலைகள் நிறைந்த கடல் நடுவில் பல கப்பல்களைச் செலுத்தி இலங்கையை

அடைந்து அதன் வடபகுதியைத் தன் ஆட்சிக்கு உட்படுத்திக் கொண்டான். மற்றொரு கடற்படையெடுப்பில் மலேயா தீபகற்பத்தையும், நிக்கோபார் தீவுகளையும் சுமத்திரா முதலிய தீவுகளையும் வென்று தன் ஆட்சியைச் செலுத்தினான். இச் செய்திகளைச் சாசனங்கள் செப்பிநிற்கின்றன. தஞ்சாவூர் இராசராசேச்சுரர் கோவிலில் காணப்படும் சாசனம், "அலைகடல் நடுவுட் பலகலம்செலுத்தி" என்று கூறும். செங்கல்பட்டு ஜில்லா மணிமண்டலம் என்ற கிராமத்து இராஜகோபாலப் பெருமாள் கோவிலில் காணப்படும் சாசனத்தில், "போர்ப்படை நடாத்திக் கார்க்கடல் இலங்கையில் விறற் படைக்கலிங்கர்மன் வீரசலாமேகனைக் கடகளிற்றொடும் அகப்படுத்தி" எனவரும் வரிகள் ஆகிய இவை இச் செய்தியை வலியுறுத்தும். இவ் விருவரது காலம் மத்தியகாலம். அதாவது சங்ககாலத்திற்கும் தற்காலத்திற்கும் நடுவிலமைந்த காலம்.

சங்க காலத்திலும் மத்திய காலத்திலும் கடலில் கப்பல் செலுத்திப் பேர் மிகக்கொண்டார் சேரரும் சோழரும். அவர்கள் பேரரசர்கள். ஆனல் தற்காலத்தில் பாண்டிய நாட்டுச் சாதாரண மகனார் ஒருவர் கடலில் கப்பல் செலுத்திப் புகழ்கொண்டார். அவர் தான் சிதம்பரம் பிள்ளை.

சேரர் இருவரும் சோழர் இருவரும் பகைவரை வெற்றி கொள்ளக் கப்பல் செலுத்தினர். அதே போல சிதம்பரம் பிள்ளையும் பகைவரை வெற்றி கொள்ளக் கப்பல் செலுத்தினார். சேரரும் சோழரும் எதிரிகளை வென்றடக்கி வீரத்தைக் காட்டக் கடலுள் கப்பல் விட்டனர். சிதம்பரம்பிள்ளையும் எதிரி

களை வென்றடக்கி வீரத்தைக் காட்ட கடலுள் கப்பல் விட்டார். கடலுள் கப்பல் செலுத்த வேண்டுமானால் வீரம் வேண்டும். வீரமில்லாமல் அக் காரியத்தில் இறங்க முடியாது. வீரத்திற்கு மனவுறுதி வேண்டும். சேரரும் சோழரும் மனவுறுதி யுள்ளவர்களாய் இருந்தனர். அதுபோல சிதம்பரம் பிள்ளையும் மனவுறுதி யுள்ளவராய் இருந்தார். மனவுறுதியால் சேரரும் சோழரும் வீரமுடையவராய்த் திகழ்ந்தார்கள். அதுபோல சிதம்பரம் பிள்ளையும் மனவுறுதியால் வீரமுடையவராய்த் திகழ்ந்தார். ஆகவே அவரை வீரசிதம்பரனார் என்று கொள்வோம். அந்த வீர சிதம்பரனாரின வாழ்க்கை வரலாற்றை இனிக் காண்போம்.

---

2. சிதம்பரம் பிறந்தார், படித்தார்

தென்னாட்டார் புகழும் தாம்பிரபரணி ஓடி வளம் செய்யும் திருநெல்வேலி ஜில்லாவில் பாஞ்சாலங் குறிச்சியின் பக்கத்தில் ஓட்டப்பிடாரம் என்று ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊரில்தான் ஆங்கில அரசியலாருடன் அறப்போர் தொடுத்து நடத்திய அண்ணல் வ. உ. சிதம்பரம்பிள்ளை தோன்றினர். பரம்பரைச் சைவவேளாண் மரபில் வந்த உலகநாத பிள்ளையே தந்தையாவார். தாயின் திருநாமம் பரமாயி அம்மையார் என்பது. அவர்கள் குடும்பம் செய்த தவப்பயன்தான் சிதம்பரம்பிள்ளை அங்கு தோன்றினர். சிதம்பரம் பிள்ளை 1872-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ம் தேதி பிறந்தார்.

சிதம்பரம்பிள்ளையுடன் பிறந்தவர் ஏழுபேர். முதலாவது குழந்தை வள்ளியம்மை என்ற பெண்.

இரண்டாவது குழந்தை சிதம்பரம்பிள்ளை. மூன்றாவது ஒருபெண். அவள் இறந்து விட்டாள். நான்காவது ஒரு ஆண்குழந்தை பிறந்தான். அவன் சிதம்பரம்பிள்ளையவர்களுடன் சில நாள் பள்ளி சென்று படித்துப் பழகியிருந்துவிட்டு இறைவனடி சேர்ந்தான். ஐந்தாவது குழந்தை மீனாட்சிசுந்தரம். பெற்றெடுத்த தாய் தந்தையர் அவனை அன்புடன் வளர்த்தனர். குணக்குன்றாக அவன் வளர்ந்தான். ஆறாவது பிறந்த மாலையம்மை என்ற பெண்ணை சோமசுந்தரம் பிள்ளை என்பவருக்கு மண முடித்தார்கள். ஏழாவது கலியாணசுந்தரம் என்பவன். அவன் ஆங்கிலமும் தமிழும் அறிவோடு கற்கும் போது பெற்றோர் வருந்தப் பெரும் பிரிவெய்தினான்.

சிதம்பரனார் பிறக்கும்போது அவர் தந்தை குற்றாலத்தில் இருந்தார். நீர் வீழ்ச்சியில் நீராடப் போயிருந்தார். பிள்ளை பிறந்ததைக்கேட்டு வீட்டுக்குத் திரும்பிவந்தார். உலகநாதபிள்ளையின் தமயனார் சிதம்பரம்பிள்ளை என்ற பெயரையுடைய ஒருவர் இருந்தார். அவர் கற்கவேண்டிய நூல்களைக் கசடறக் கற்றவர். நல்ல செல்வாக்குள்ளவராய் இருந்தார். உண்மை பேசும் உத்தமராய் உறைந்தார். சாந்தம் நிறைந்த தக்கோராய்த் திகழ்ந்தார். குற்றங்களைந்து நீதியை நிலைநாட்டும் வக்கீலாய் வாழ்ந்தார். அவர் புகழ் எட்டுத்திக்கிலும் எட்டியது. ஆனால் அவருக்கு ஆண்டவன் ஆயுள் கொடுக்கவில்லை. இருபத்தெட்டாவது வயதில் அவர் இம் மண்ணுலகைவிட்டு விண்ணுலகெய்தினார். அவருடைய தாய் தந்தையர், உலகநாதபிள்ளையின் பெற்றோர், நமது பிள்ளையவர்களின் பாட்டன் பாட்டியரான வள்ளியப்பபிள்ளை-மீனாட்சியம்மை என்பவர் தமது முதல் மகன்

இருபத் தெட்டாண்டில் இறைவனடி சேர்ந்தது குறித்து ஆறாத் துயருடனிருந்தனர். தன் பெற்றோர் துயரை நீக்க ஆசைப்பட்டார் உலகநாதபிள்ளை. குற்றாலத்திலிருந்து திரும்பி வந்தவுடன் பெற்றோரை அணுகி, தனக்கு ஆண் மகவு பிறந்திருக்கிற தென்றும், அம் மகவுக்கு 'சிதம்பரம்' எனப் பெயரிட்டு துயரைப் போக்குக வென்றும் உலகநாதபிள்ளை விண்ணப்பம் செய்து நின்றார். வள்ளியப்ப பிள்ளை-மீனாட்சியம்மை, தம் மகன் வக்கீலாய்த் திகழ்ந்து பெரும் புகழ்பெற்று வாழ்ந்தவன் நினைவுக்காக அவன் பெயராகிய 'சிதம்பரம்' என்னும் சீரிய நாமத்தை மகவுக்கிட்டு மகிழ்ந்தனர்.

பிறந்த பிள்ளை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமாய் வளர்ந்தது. குழந்தையைப் பெற்றெடுத்த பெற்றோரும், பாட்டன் பாட்டியும் அதனைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தனர். ஆண் குழந்தை பிறந்ததும் அவர் குடும்பத்தில் ஆக்கம் பல பெருகின. இருபத்தெட்டாண்டில் இறந்தமகனே 'இவனாய்' வந்தான் என்று கருதி எல்லோரும் இன்பக் கடலுள் ஆழ்ந்தனர். குழந்தை தவழ்ந்து, தளர் நடை நடந்து, தந்தையுடன் இன்னடிசிலை 'இட்டுந் தொட்டும், கௌவியும் துழந்தும், மெய்பட விதிர்த்தும்' விளையாடியது.

பிள்ளைக்கு ஆறுவயது நிரம்பியதும் பள்ளிக்கு வைக்கப் பெற்றோர் ஆசைப்பட்டனர். தமிழ்நாட்டில் நடப்பதுபோல் தகுதியான சடங்குகள் நடத்தப்பட்டன. ஆசிரியர் ஒருவர்வந்து அகர முதலிய எழுத்துக்களை ஆரம்பித்துவைத்தார். பிள்ளையைப் பள்ளியில் சேர்த்துவிட்டார்கள். அந்தக் காலத்தில்

பிரசித்தி பெற்றிருந்தவை திண்ணைப் பள்ளிக் கூடங்கள்.

அவை நம் தமிழ்நாட்டிற்கேற்ற காலமுறையைக் கைக்கொண்டிருந்தன. காலை ஆறுமணிக்குப் பள்ளிக்கு மாணவர்கள் எல்லோரும் வந்துவிடவேண்டும். பிறர் உதவி எதிர்பாராதபடி வாழ்வதற்கு வேண்டிய சில முக்கிய தொழில்களைப் பழகிக் கொள்ளவேண்டும். பின்பு ஆறுகளுக்குச்சென்று காலைக்கடன் முடித்து வீடுதிரும்பவேண்டும். இது காலைவேளையில் புதிய காற்று உடலில் படுதல் நல்லது என்பதை எடுத்துக்காட்டுகிறது. சிலர் காலையில் வெளியில் உலாவி வருவதைக் காணுகின்றோம். காந்திமகான் காலை நான்குமணிக்கு எழுந்து உலவி வருவார் என்று நாம் படித்திருக்கிறோம்.

காலை எட்டு மணியிலிருந்து ஒன்பது மணிக்குள் காலை ஆகாரம் உண்ணவேண்டும். படுக்கை விட்டு எழுந்த இரண்டு மணிநேரம் கழித்துத்தான் காலை ஆகாரம் உண்ணவேண்டுமென்ற மகாத்மா காந்தி உபதேசத்தைக் கடைப்பிடித்திருந்தார்கள் போலும்! ஒன்பது அல்லது ஒன்பதரை மணிக்குப் பாடம் தொடங்கும். 12 மணிக்குப் பள்ளிக்கூடம் முடிந்துவிடும். பிற்பகல் 3 மணிக்குமேல் பள்ளி தொடங்கும். ஐந்தரை அல்லது ஆறு மணிக்குப் பள்ளிமுடிந்துவிடும். இதற்குள்ளே வாய்ப்பாடுகள், கணக்குகள், தமிழ் நூல்கள், அறிவுநூல்கள், அளவைநூல்கள் முதலியன கற்பிக்கப்படும். மனதின் மூலமாகவே பல கணக்குகளையும் தீர்த்து வாயினுல் விடைகூறும் பழக்கம் அந்தத் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் இருந்தது. இயற்கையழகைக்

கண்டு, இன்பம் மனதில் பொங்கி, அன்பு நிலையுடன் தமிழ்க் கவிகளைத் தாராளமாக வழங்கும் வழக்கம் அந்த மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. கல்வி நிறைந்து வெளியேறியவர் கருத்துள்ளவராய் வேலை செய்து பிழைத்துக்கொள்ளுவர். பெஞ்சி, நாற்காலிகள் அங்கு கிடையா. ஆனால் தரை உயர்ந்து திண்ணை போல் இருக்கும். ஆகையால் அதைத் திண்ணைப் பள்ளிக்கூடம்என்று கூறினார்கள்.

இப்படிப்பட்ட திண்ணைப் பள்ளியிலேதான் முதன்முதலில் பிள்ளையவர்கள் கல்வி பயின்றார்கள். தமிழும் கணக்கும் தக்கவகையில் தெரிந்து கொண்டார் பிள்ளை. தமிழ் மொழியில் தனி யார்வங் கொண்டு கற்று பள்ளிமாணவரில் மேலோராய்ஆசிரியர் உள்ளத்தைக் கவர்ந்து வருகிறார் சிதம்பரனார் என்று தெரிந்தது. பெரியார் பலரும் 'உன் மகன் சானறோன்' என்று தாய் பரமாயி அம்மையாரிடம் செப்பினர். ஈன்றபொழுதிலும் பெரிது மகிழ்ந்தாள் தாய். "ஈன்றபொழுதிற் பெரிது உவக்கும்தன் மகனைச் 'சான்றோன்' எனக் கேட்ட தாய்" அல்லவா!

திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர் பெயர் வீரப்பெருமாள் அண்ணாவி. குறுக்குச்சாலை என்னும் ஊருக்குப் பக்கத்திலுள்ள பாண்டியபுரம் அவரது ஊர். அவர் ஒழுக்கசீலர். தூய்மையுள்ள பெரியவர். வாய்மையே என்றும் பேசுபவர். அன்புடன் மாணவருக்கு அனைத்தையும் கற்பிக்க ஆர்வங் கொண்டவர். அவரிடம் சிதம்பரம் பிள்ளை அரிச்சுவடி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை வெண்பா முதலியவற்றைக் கசடறக்கற்றார்.

தாலூகா ஆபீஸ் கிருஷ்ணய்யர் என்பவர் ஒருவர் அங்கு இருந்தார். அவரிடம் சிதம்பரனார் ஆங்கிலம் கற்றார். கற்றவற்றைக் கருத்திலே பதித்து வந்தார். இரண்டாண்டில் கிருஷ்ணய்யருக்கு வேலை மாற்றம் கிடைத்தது. அவர் வேறு ஒரு ஊருக்குப் போய்விட்டார். ஊர்ச்சிறுவர்கள் எல்லாம் ஆங்கிலம் கற்கவேண்டுமென்றும் அதற்கு ஒரு பள்ளிக் கூடம் அந்த ஊரிலேயே நிறுவவேண்டுமென்றும் உலகநாதபிள்ளை ஆசைகொண்டார். தமிழும் ஆங்கிலமும் தக்கமுறையில் கற்று, தக்காரும் தகவிலாரும் போற்ற அறநெறியில் வாழ்ந்து, கற்றாரும் மற்றாரும் மனங்கொளக் கல்வி கற்பித்து வந்த எட்டயபுரம் அறம் வளர்த்தநாதபிள்ளையை அணுகி தன்னூர் வந்து தமிழும் ஆங்கிலமும் தகவுடன் ஊர்ச் சிறார்களுக்குச் சொல்லி வைக்க வேண்டுமென்று சிதம்பரம் பிள்ளையின் தந்தை வேண்டினார். அவரும் உடன்பட, ஊருக்கு ஓடி வந்து ஒரு இடத்தில் வெகு விரைவில் பள்ளி ஒன்றமைத்து பாங்குடன் அவரை அழைத்துவந்தார். ஊர்ச்சிறுவர் யாவரும் ஒன்று சேர்ந்து கல்வியைக் கற்றனர். இரண்டு ஆண்டுகளில் சிதம்பரம்பிள்ளை நான்கு வகுப்புகள் படித்துத் தேறிவிட்டார். பள்ளியின் வகுப்பைக் கூட்டவேண்டியிருந்தது. தட்டப்பாறை ரயில் நிலையமுள்ள ஊருக்குப் பக்கமுள்ள புதியம் புத்தூரில் தங்கியிருந்த ஆடம்ஸன் என்ற ஆங்கிலப் பாதிரியை அழைத்து வந்து பள்ளியை மேற்கொள்ளும்படி இசைவித்தார் உலகநாதபிள்ளை. அப்பாதிரி சுவாமிநாதன் என்பவரை மேல் உபாத்தியாயராய் நியமித்தார். அவர் சண்முகம் பிள்ளையைக்கொண்டு வந்து ஆசிரியராய் நியமித்தார். பிள்ளையவர்கள்

அவரிடம் கற்று அவ்வூர்ப் படிப்பை முடித்தார். அப்போது பிள்ளையவர்களுக்கு வயது பதினொன்கு.

தமிழ்க்கல்வியும் கணக்கும் சிறிது ஆங்கிலமும் கற்றபின், தம்மகனை அதிக ஆங்கிலம் கற்கச்செய்ய ஆசைகொண்டனர் பெற்றோர். அதற்காக தூத்துக்குடியிலுள்ள சேவியர் பெரும்பள்ளியிற் கொண்டுபோய்ச் சேர்த்தனர். பின்பு அப்பள்ளியை விட்டு அங்குள்ள கால்டுவெல் பெரும்பள்ளியிற் சேர்ந்து பிள்ளையவர்கள் படித்தார். இப்போதுள்ளதுபோல் அப்போது எஸ். எஸ். எல். சி. படிப்பு இல்லை. ஆனால் மெட்ரிகுலேஷன் படிப்பு இருந்தது. அதில் தேற மீண்டும் சேவியர் பெரும் பள்ளிக்கு வந்து சேர்ந்தார். அந்தப் பெரும் பள்ளியைக் கண்காணித்தவர் ரெவரெண்டு ஃபாதர் கௌசானல் என்பவர். அவர் அதிகம் விரும்பிய அண்ணாத்துரை ஐயர் என்பவரிடம் தன் மகனை உலகநாதபிள்ளை ஒப்புவித்து தக்க முறையில் கவனித்து வரும்படி ஏற்பாடு செய்தார். அவரும் அன்புடன் ஏற்றுக்கொண்டார். சிதம்பரனார் அண்ணாத்துரை ஐயரைத் தூத்துக்குடித் தந்தை என்றும் அவர் மனைவியைத் தாய் என்றும் கொண்டு மிகுந்த பயபக்தியுடன் கல்வியைக் கற்றுவந்தார். இவ்வாறு கற்று மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினர்.

மேல்படிப்புப் படித்து மேலோனாகத் திகழவேண்டுமென்பது தந்தையின் ஆசை. மகனைச் சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனல்லவா? ஆகவே மேற்படிப்பை விரும்பி அந்த நகரிலுள்ள கால்டுவெல் கல்லூரியில் தன் மகனைச் சேர்த்தார் உலகநாத

பிள்ளை. ஆனால் சிதம்பரனார் வீண் காலம் கழிக்க ஆரம்பித்து விட்டார். அது தெரிந்த தந்தை தூத்துக்குடி அடைந்து மகனைக் கூட்டிக்கொண்டு ஓட்டப்பிடாரம் வந்தார். அவ்வூரில் பிள்ளையவர் களுக்குப் பல அறவுரை பகர்ந்தார் தந்தையார். இவ்வாறு சில தினம் கழிந்தன.

படித்தபிள்ளை வீட்டில் சும்மா இருப்பது கூடாது. அழுது கொண்டிருந்தாலும் உழுது கொண்டிருககவேண்டும் என்றபடி தாலூகா ஆபீஸ் குமாஸ்தாவேலைக்குச் சிதம்பரனாரை அனுப் பினார் தந்தை. சிலநாள் வேலைபார்த்தார். சுதந்திர உணர்ச்சிகொணட சிதம்பரனார் மற்றவர் சொறபடி எத்தனை நாள் வேலைபார்க்கமுடியும். குமாஸ்தா வேலையைத தீர்த்துககட்டி மறுபடியும்வீடு வந்து இருந்தார்.

தூத்துக்குடியில் படிக்குங்காலங்களில் விடுமுறை வரும்போது சிதம்பரனார் தன சொந்தஊருக்கு வந் திருப்பார். அந்நாட்களில பாட்டனாரோடு பாரதக் கதை கேட்பார். திருவிளையாடற் புராணக்கதை களைப் பாட்டிசொல்ல மிக்க ஆர்வத்துடன் பிள்ளை யவர்கள் கேட்பார். தன் திருமேனி அழகாலும், தன் நற்குண நற்செய்கைகளாலும் மற்றவரைத தன்வச மாககும் சிறப்புடைய இராமன் கதையைக் கம்பன் சொனனபடி பாட்டனார் இரவில் பகர தேட்டமுடன் பிள்ளை கேட்டுககொண்டிருப்பார். பாட்டனார் பகதி மிகுந்தவர். பேரனை அழைத்துக்கொண்டு பிள்ளை யார்கோவிலுக்குத தினமும் போவார். பக்தி உண்டோ இல்லையோ பாட்டனருடன் போய்வரு

வது பிள்ளையவர்களுக்கு இன்பமாய் இருந்தது. மற்ற நேரங்களில் பல விளையாட்டுகளை விளையாடி வந்தார்.

சிதம்பரனார் சிறுபிள்ளையாயிருக்கும் சமயத்தில் மரமேறி விளையாடினார்; சுவர் மேலே நடந்தார்; கவண்கல் எறியப் பழகினார்; கோலியாடினார்; பச்சைக்குதிரை ஏறியாடினார்; எறிபந்துகள் எறிந்தார்; சடுகுடு விளையாடினார்; கிளித்தட்டுப்போட்டார்; தண்ணீரில் குதித்து நீந்தினார்; மூச்சுவிடாமல் ஒன்றிரண்டு எண்ணினார்; கத்திவீசக்கற்றார்; சிலம்பம் வீசக்கற்றுக்கொண்டார்; கசரத்துப் போட்டார்; பஸ்கிஎடுத்தார்; மல்யுத்தம் பழகினார். இப்படிப் பல விளையாட்டுகளைப் பயின்று பிள்ளையவர்கள் தேர்ந்தார்.

குமாஸ்தா வேலையை விட்டுச் சும்மா வீட்டிலிருக்கும் மகனை ஏதாவது ஒரு வேலையில் புகுத்தத் தகப்பனார் மனம் ஆர்வங்கொண்டது. ஆனால் எந்த வேலையிற் புகுத்துவது என்று தீர்மானிக்க முடியவில்லை. அச்சமற்ற ஆண்மகனாகத் திரிந்த பிள்ளையவர்களை ஊரார் மெச்சினார்களே தவிர நிச்சயமாகத் தகப்பனார் மனம் சாந்தியடையவில்லை. "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்ற புறநானூற்றுத் தொடர் தந்தையாரின் மனதில் வேலைசெய்து கொண்டிருந்தது. எப்படியும் மகனைச் சான்றோனாக்கி உலகோர் மதிக்கத் தகுதியாக்கி விட வேண்டுமென்று ஆசைகொண்டார். அஞ்சா மகனை எஞ்சாது எதில் தகுதியாக்கலாம் என்று எண்ணினார். தன் தமையனைப்போல நீதிமன்றங்களில் வாதமிடும் தொழிலாகிய வக்கீல் தொழிலுக்கு மகனைப் படிக்க வைக்கவேண்டுமென்று தீர்மானித்

தார். அதற்காகத் திருச்சிராப்பள்ளிக்கு அனுப்பி வைத்தார்.

நீதிக்கும் நேர்மைக்கும் பொருந்த வாதமிடும் வழக்கறிஞர் வேலைக்குக கற்றுத் தெளியச் சிதம்பரம்பிள்ளை திருச்சி நோக்கிச் சென்றார். அந்நகரில் ஆண்டார் வீதியை அடைந்து தங்கி யிருந்தார். வேண்டாரும் விரும்பும்படி பேச்சுப்பேசும் பிள்ளையவர்கள் கங்குகரையற்ற சட்டங்களைப் பொங்கிய உவகையோடு கற்ருர். திருச்சியிலிருந்த சட்ட வகுப்பிற்கு திருந்திய கருணை நிறைந்த கணபதிஐயர் ஆசிரியராய் இருந்தார். அரிகரஐயர் என்ற பெயர் பூண்ட ஆசிரியர் ஒருவர் அக்கலாசாலையில் இருந்தார். இந்த இருவரிடமும் சட்டங்களைக் கற்ருர் சிதம்பரனர். சட்டங்களைக்கற்கும் சமயம் தவிர மற்ற சமயங்களில்வாணுளை வீணுளாகக் கழிக்கத் தொடங்கினர் பிள்ளையவர்கள். இச்செய்தி தந்தை உலகநாத பிள்ளைக்குத் தெரிந்தது. ஒரு கடிதமெடுத்து தனயனுக்கு எழுதியனுப்பினர் தந்தை. "இக்கடிதம் கண்டவுடன் தாமதியாமல் ஊருக்கு வந்து சேருக; எனது உடல் நலமற்றிருக்கிறது. உன்னைக் காண எனக்கு ஆசை மிகுதி; என் ஆசையை முடித்து என் ஆருயிரை நிலை நிறுத்துவாயாக" என்று கடிதத்தில எழுதி யனுப்பி விட்டார். திருமகன் திருமுகத்தைக் கண்டார்; சீக்கிரம் புறப்பட்டார். விடியு முன் தந்தையைக் காண ஆவல் கொண்டார். அப்படியே தந்தையைப் பார்த்து தகுதி விசாரித்தார். தனயனைக் கண்டு

தந்தை ஆனந்தம் கொண்டார். உள்ளன்புகள் பறிமாறப்பட்டன. தந்தையும் மகனும் சேர்ந்து உணவுண்டு மகிழ்ச்சியுரையாடி மகிழ்ந்திருந்தனர். அங்கிருந்தே சட்டத் தேர்வுக்குச் சென்றார் சிதம்பரனார். தேர்வில் தேர்ந்துவிட்டார்.

---

3. வழக்குரைக்கும் அஞ்சாத வக்கீல்

சட்டத் தேர்வில் தேரிய பிள்ளையவர்கள் வழக்கறிஞராய் வாதமிட உரியவரானார். 1895-ம் ஆண்டு வாதமிடும் வக்கீல் தொழிலை தம் சொந்த ஊராகிய ஓட்டப்பிடாரத்திலேயே முதன்முதல் நடத்தத்தொடங்கினார். உற்றார் உறவினர் மற்றுமுள்ள நண்பர்கள் அவர் வாதமிடும் திறமையைக்கண்டனர். வாதத்தில் வெற்றியேதவிர என்றும் தோல்வி எய்தாதவர் என்று கண்டார்கள். வாதமிடும் செய்தியை அறிவால் அலசி, நாவால்நன்கு செலச் சொல்லுவார். அதாவது கேட்பவருக்கு விளங்கும் வண்ணமும் பிரியமாகக்கேட்கும் வண்ணமும் சொல்லுவார். அவரது திறமை கேவலம் சிறுகிராமத்திற்கு மாத்திரமல்லவா கிடைக்கிறது; பல கிராம மக்களுக்கும் நகர மக்களுக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டும் என்று கருதினார்கள் அவர் நண்பர்கள். அத்துடன் அரசாங்கத்திற்கும் அவர் திறமை தெரிய வேண்டும் என்று ஆசைகொண்டார்கள். ஆகவே சிதம்பரம்பிள்ளையை அடைந்து தங்கள் கருத்தைத் தெரிவித்து, தூத்துக்குடியில் தொழில் நடத்தவேண்டிக்கொண்டார்கள்.

நண்பர்கள் விருப்பப்படி தன் தொழிலை தூத்துக்குடியில் பிள்ளையவர்கள் தொடங்கினார்கள். வயதில் சிறிய வக்கீல் ஒருவர் வந்திருக்கிறார் என்று ஊர் முழுதும் ஒரே பேச்சாயிருந்தது. தூத்துக்குடிக்குத் தாண்டிய நண்பர் சிலர் புதிய வழக்குகள் சிலவற்றைக் கொண்டுவந்து விட்டனர். அந்த வழக்குகளில் பிள்ளையவர்கள் வாதமிடும் தன்மை மற்ற வக்கீல் உள்ளங்களைக் கவர்ந்தது. எதிர்நின்று வாதமிடும் வக்கீல்கள் திக்குமுக்காடிப்போவர். திடீரென்று அறிவுக்குப் பொருத்தமான, ஆச்சரியமான செய்தியைப்போட்டு வழக்காடும் வாய்ப்பு இவரிடம் அமைந்திருந்தது. அது கண்டு பொருமையடையாத வக்கீல்கள் அங்கு இல்லை என்றே கூறிவிடலாம்.

தன் பேச்சைக் கேட்டார் தன்வசமாகும் படி செய்யும் நாநலம் (நாவன்மை) பெற்றிருந்தார் சிதம்பரனர். பேசும் போது முன் பேசுவனவற்றையும் பின் பேசுவனவற்றையும் அறிந்து அம்முறையிலேயே பேசுவார், இது கேட்டாருக்கு இனிமை பயக்கும். தன் சொல்லைப் பிறிதோர்சொல் வெல்லும் சொல் இல்லை என்னும்படியே பேசுவார். மாற்றார் சொல்லால் வெல்ல முடியாத சொல்லாகவே மொழிவார். அவற்றையும் குற்றமில்லாமல் கூறுவார். வழவழ என்றிராமல் தம் கருத்தைச் சுருங்கக் கூறும் திறமை அவரிடம் அமைந்திருந்தது. சுருங்கக் கூறினும் மிகத் தெளிவாக விளங்கி விடும். சுருக்கமும் விளக்கமும் இருந்தாலும் இனிமையில்லாமல் இருக்குமோ என்று சந்தேகிக்கவேண்டாம். கேட்டாரைத் தன் வயமாக்கும் மந்திர சக்திகள் அப்பேச்சுகளில் அமைந்திருக்கும். அது மட்டுமா அவர்

பேசினால் நிச்சயம் பயன்பெறுவார். அவர் பேச்சு பயன் அடையும்படி செய்துவிடும். சிதம்பரம் பிள்ளையின் பேச்சைக்கேட்ட நுண்ணறிவுடையார், அவர் பேச்சை ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்துவிடுவர்.

இப்படி நம் பிள்ளையவர்கள் சொல்வன்மையில் வல்லவராயிருந்ததால், குறிப்பிட்ட பெரிய வழக்குகள் இவரிடமே வந்தன. இவர் கிரிமினல் தரப்பில் மிகவும் தேர்ச்சியும் பழக்கமும் உள்ளவராய் விட்டார். தேர்ச்சியும் திறமையுமிக்க பிற வக்கீல்களுக்கு இவரளவு வருமானம் வரவில்லை. அதிக வருமானமுள்ள வக்கீல் யாரென்றால், அந்தக் காலத்தில் பிள்ளையவர்களைத்தான் குறிப்பிட வேண்டும். தன் வருமானமொன்றே பிரதானம் என்று இவர் கருதவில்லை. ஏழைகளுக்குழைக்கும் ஏழை பங்காளனாகவும் இவர் வாழ்ந்துவந்தார்.

சிதம்பரம் பிள்ளை தனது கட்சிக்காரர் நியாயத்தை எடுத்துரைப்பார். பிறர் செல்வாக்கினால் வெல்லப்பட்ட பிடிவாதமுள்ள நீதிபதி சிலர் தமது வாதத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் திருக்குறளிலிருந்து சில அருமையான அறிவுரைகளை எடுத்துக் காட்டுவார். தனக்காகவும் தனது கட்சிக்காரர் நியாயத்திற்காகவும் நீதிசெலுத்தாவிட்டாலும் திருக்குறளுக்காகவாவது நேர்மைகாட்டும்படி அஞ்சாது உரைப்பார். அதையும் ஏற்றுக்கொள்ளாவிட்டால், "அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர் மக்கட் பண்பில்லாதவர்" என்று கூறி எழுந்து வந்துவிடுவார். இதைக் கண்டு எல்லோரும் 'வெலவெல'த்துப்போவார்கள்; அஞ்சாத நெஞ்சரும்

அஞ்சி அடங்குவர். தோல்வியடைந்துவிடும் என்று எண்ணிக்கொண்டு வீடு திரும்பிய பிள்ளையும் கட்சிக்காரரும் மகிழும் வண்ணம் தீர்ப்பு வெளிவரும். அம்மாதிரிச் செய்கையிலிருந்து பிள்ளையவர்கள் வழக்கென்றால் அயலார் செல்வாக்கை அறவே ஒதுக்கி விடுவர் நீதிபதிகள். ஒழுக்கமும் வாய்மையும் பிள்ளையவர்களிடம் குடிகொண்டிருந்தன. அவற்றை இவர் வாழ்நாள் முழுதும் போற்றிக் காப்பாற்றி வந்தார்.

சுற்றத்தார் ஒருவர் கட்சிக்காரன் ஒருவனைக் கூட்டிவந்தார். வழக்கு நடத்துவதென்று முடிவாயிற்று. 'பீசு'க்காகக் கட்சிக்காரன் பணம் கொடுத்தான். சுற்றத்தாரும் கட்சிக்காரனும் போய்விட்டார்கள். சுற்றத்தார் தனியே வந்தார். கட்சிக்காரனைக் கூட்டிவந்து, 'பீசு' வாங்கிக்கொடுத்ததற்கு 'கமிஷன்' கேட்டார். சிதம்பரம்பிள்ளை தன் மனைவியிடம் இதுபற்றித் தெரிவித்தார். "கமிஷன் கொடுத்துக் கேசுபிடிப்பது கேவலம். பெற்ற பணத்தைத் திருப்பிக் கேசுக்காரனிடம் கொடுத்துவிடுங்கள்" என்றார் அந்த அம்மையார். அவரும் அப்படியே செய்தார்.

போலீஸ்காரர்கள் பொய் வழக்குகளை உண்டாக்கி கூலிக்குச் சாட்சிகளையும் பிடித்து நீதிபதிகளின் முன்னிலைக்குக் கொண்டுவந்தால், அந்த வழக்குகளின் தன்மையை அறிந்து, மிகவும் வருந்தி, பிரதிவாதிகளுக்காகத் தோன்றி உதவிபுரிவார். இவ்வேளைகளில் போலீஸ் அதிகாரிகள் கடுஞ்சீற்றமடைவார்கள். அந்தச் சீற்றத்துக்கும் ஆளாக வேண்டிவரும். அதற்காகப் பிள்ளையவர்கள் அஞ்சுவதில்லை. நீதிக்கும் நேர்மைக்கும் உழைக்கும்

உத்தமர்களுக்கு அச்சமுண்டானல், அவை நிலைக்குமா? இச்சகத்துளோரெலாம் எதிர்த்து வந்த போதிலும் அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமென்பதில்லையே.! என்று இருந்தார் சிதம்பரனர்.

---

4. இல்லற வாழ்க்கை

எட்டயபுரத்தில் எட்டப்ப அரசர்களுக்குச் சட்டத்தை எடுத்துரைக்கும் வக்கீலாயிருந்தார் சிதம்பரம் பிள்ளையின் தந்தை உலகநாதபிள்ளை. அவரும் வக்கீல், மகனும் வக்கீல். மக்களுக்கு மணம் செய்து பார்க்கவேண்டுமென்பது பெற்ரோர்களின் ஆசையாக இருக்கும். அதன்படியே தூத்துக்குடியில் சிறுவயதிலேயே பெரும் புகழ் திரட்டிய சிதம்பரம் பிள்ளைக்குத் திருமணம் செய்து மகிழ அவர் தந்தையார் கருத்துக்கொண்டார். திருச்செந்தூர் சென்று தமது சுற்றத்தாராகிய சுப்பிரமணிய பிள்ளையின் மகள் வள்ளியம்மையை மணம் பேசினர். பெண்ணின் தகப்பனரும் சிறு வயதிலேயே பெரும் புகழ்பெற்ற சிதம்பரம் பிள்ளைக்குப் பெண் கொடுக்க இசைந்தார். திருமணமும் நறுமணமாய் முடிந்தது. அப்போது சிதம்பரம பிள்ளைக்கு 23 வயது. இல்லறம் தொடங்கிவிட்டார். வள்ளியம்மையும் இல்லறத்தில் மெல்ல நுழைந்தார்.

“இல்லறத்துக்குத் தக்க நற்குண நற்செய்கைகள் மனைவியிடம் இல்லாவிட்டால், அது பெருமையுடையதாகாது. அவ்வில்வாழ்க்கை செல்வத்தால் எவ்வளவு பெருமைப்பட்டதா யிருந்தாலும் சிறப்புடையதாகாது; பயன்படாது. கொண்டானிற்

சிறந்த தெய்வமில்லையாகையால் நீ அவனுடன் ஒத்து நடந்து இல்லறம் நடத்தி இன்புறவேண்டும்'' என்று தாய்தந்தையராலும் தக்காராலும் கற்பிக்கப்பட்டிருந்தாள் வள்ளியம்மை. கற்பு என்னும் கலங்கா நிலைமை மனையாளிடம் அமைந்திருக்கப் பெற்றால், அதுவே ஒருவன் பெரும் பொருள்களுள் மேம்பட்ட பொருளாகும். கற்புடைய மனைவியே அறம், பொருள், இன்பம் அடைவதற்குக் காரணமாவாள். அறையிலே பூட்டி, வாசலிலே காவல்வைத்து, மகளிரைச் சிறைகாக்கும் காப்பு காப்பாகாது. நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத்திக் காத்துக்கொள்ளும் மகளிர் காப்பே மேலான காப்பாகும். தன்னைத்தானே கற்பிற் காத்துக்கொள்ளாத மகளிர்க்குச் சிறைக்காவலாற் பயனில்லை. தன்னை மனைவியாகப்பெற்ற கணவனை வழிபட்டு வாழக்கூடிய நிலைமையை அடைந்தால், மனைவியர் பெருஞ் சிறப்புப்பெறுவார்கள். புகழை மேலும் மேலும், வளர்க்கவிரும்பிய மனையவளை இல்லாதார்க்கு, இகழ்ந்துபேசும் பகைவர் முன்பு ஆண் சிங்கம்போல நடக்கும் மிடுக்குநடை இல்லை. மனை மாட்சியை மங்கலம் என்று அறிந்தோர் கூறுவர். இவற்றையெல்லாம் மிகவும் நன்றாக அறிந்திருந்தாள் வள்ளியம்மை, திருக்குறளைச் செவ்வையாகப் படித்திருந்தாளாதலின்.

ஆகவே, இல்லறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளைக் கொண்டிருந்தாள் வள்ளியம்மை. தன் கணவன் வருவாய்க்குத் தக்க வாழ்க்கைவாழ்ந்தாள். அந்த வரும்படிக்குள் துறந்தாரை உபசரித்தாள்; விருந்தினரை உண்பித்தாள்; வறியவரிடம்

அருள்கொண்டு கொடுக்க முடிந்ததைக் கொடுத்தாள். வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களை அறிந்து சேர்த்துவைத்தாள்; சமையல் தொழிலில் திறமை காட்டினுள்; உலக நடையை அறிந்து நடந்தாள். பிள்ளையவர்களுக்குப் பின் தூங்குவாள். அவர் எழுவதற்கு முன் துயிலுணர்ந்து எழுந்திருப்பாள். தன்னைக் கற்பறத்தால் காத்து, தன் கணவரை உணவு முதலியவற்ருல் உபசரித்து, இருவர் மேலும் வளரும் புகழைப் பாதுகாத்துப் போற்றி வளர்த்து மறத்தலில்லாத மாண்புடையவளாயிருந்தாள்.

மனைக்குத்தகுந்த மனைவியை அடைந்த பிள்ளையவர்கள் பூரித்தார். இல்லாளைக் கலக்காது ஏதொன்றும் செய்யமாட்டார். அதனுல்தான் கமிஷன் கேட்ட சுற்றத்தார் செய்தியை மனைவியிடம் சொல்லி, அவள் கூறிய ஆலோசனைப்படி நடந்தார். இருவரும் மனமொத்து வாழ்ந்தனர். துறந்தவர்களையும் துவ்வாதவர்களையும், (அனுபவிக்கமுடியாத தரித்திரர்) தங்களிடம்வந்து இறந்து போனவர்களையும் பாதுகாத்து. அவர்களுக்குத் துணையாயிருந்தார்கள் மனைவியும் கணவனும். தென்புலம் வாழ்ந்தமுன்ஞேர்களையும், தெய்வங்களையும, முன்பு அறிந்தவரும் முன்பு அறியாதவரும் என இருவகைப்பட்ட விருந்தினர்களையும், சுற்றத்தார்களையும், தான் நலனுயிருந்தால்தான் எல்லா அறங்களும் செய்ய இயலுமாகையால் தம்மையும் போற்றி வாழ்ந்து வந்தனர். பணம் சம்பாதிக்கும்போது பழி பாவங்களைக் கவனித்து, நல்ல வழியிலேயே பணம் சம்பாதித்து, முன்னை மூவருக்கும் பின்னை நால்வருக்கும் செலவு செய்து தாமும் உண்டு வாழ்ந்தார்கள். இல்வாழ்க்

கையில் அன்பால் பண்பும் அறத்தால் பயனும் கொண்டார்கள். அறத்தாற்றின் இல்லறம் வாழ்ந்தார்கள். இயல்பினால் இல்வாழ்க்கை நடத்தினார்கள். மனத்தையும் பொறிகளையும் வருத்தி அடக்கவேண்டியது துறவறம்; ஐம்புல இன்பங்களை நிரம்ப அனுபவிக்கிற எளிமையுடைய இல்வாழ்க்கைச் சிறப்பைக் கண்டு, பிறன்பழி கூறாத அறன் எனப்பட்ட அந்த இல்வாழ்க்கையை அனுபவித்தனர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைத்து எண்ணப்படும் தகுதியில் இருந்தனர்.

கணவனும் மனைவியும், சாவா மருந்தெனினும் விருந்தினர் வீட்டின்புறத்தே இருக்க உண்ணமாட்டார்கள். தம்மிடம் செல்விருந்து ஓம்பி (பேணி) வருவிருந்து வைகலும் எதிர் பார்த்திருப்பார்கள். தூரத்தில் விருந்தினரைக் கண்டபொழுது இனிய முகமும், அவர் நெருங்கியபோது இனிய சொல்லும், அதன் பின்பு அவருக்கு நல்ல உபசாரமும் செய்தல் அவர்கள் வாழ்க்கையில் நிலவியிருந்தது.

முற்றுந்துறந்த ஞானி ஒருவர் அவர்கள் வீட்டைப் பற்றாகக்கொண்டிருந்தார். வள்ளியம்மையே அவருக்கு அமுதூட்டுவார். ஞானி குருடர், தாழ்த்தப்பட்ட சாதியினர். பக்கத்திலுள்ளார் இதைப் பார்த்துக் கேவலமாகப் பேசினர். பிள்ளையவர்கள் தன் மனைவியிடம் இதுபற்றி வினவினார். "ஞானிக்குச் சாதியேது. பரமன் படைப்பில் சாதியுண்டா? தமிழ்நாட்டார் சாதிகொண்டாரில்லை. திருவள்ளுவரும் சாதி கூறினாரில்லை. "பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான்" என்று திருவள்ளுவர் கூறு

கிறரே. எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒக்குமே. கட வுள் எல்லா உயிரிலும் நிலவி யிருக்கிறான். அவன் படைப்பில் வேற்றுமை காணக்கூடாது என்பது என் எண்ணம். மற்றவர் கூற்றுக்கு நாம் மயங்க வேண்டாம். நம்மனதுக்குச் சரி என்று பட்டபடி நடப்போம்'' என்று மிகப்பணிவாக அந்த அம் மையார் எடுத்துரைத்தார்.

குணக்குன்றிலே ஏறி நின்ற குலமடந்தை வள்ளியம்மை இல்வாழ்க்கை நடத்துவதைக் கண்டு பொறுமை கொண்டு, நல்லாரென்றும் பொல்லா ரென்றும்பாராத நமன் அவள் உயிரைக் கவர்ந்து சென்றான். இல்வாழ்க்கைக்கு இன்றியமையாத தன் மனைவி இறந்தது குறித்துப் பெரிதும் வருந்தி ஞர் பிள்ளையவர்கள். தேற்றுவார் தேற்றினும் ஆற்றாத்துயரடைந்தார். அவர் பட்டதுயரம் இந்த அகில உலகத்தில் எவரும் பட்டதில்லை.

துன்பமும் துயரமும் ஒருவழி நில்லா. நாட்கள் சென்றன. துக்கமும் துயரமும் சிறிது மாறின. ஆனாலும் முதன் மனைவியைப் பற்றிய எண்ணங் கள் மட்டும் நீங்கிவிடவில்லை. நன்றியறிதலைக் கைக் கொண்ட பிள்ளையவர்கள் முதன் மனைவிக்குச் செய் யும் சிறப்பாக, அவர் பிறந்த குடும்பத்தில் மீனாட்சி யம்மை என்ற பெண்மணியை மணம் புரிந்து வாழ்ந்து வந்தார்.

5. சுதேசியம்

சிதம்பரம் பிள்ளை ஒருமுறை தனது பெரிய அத்தையுடன் சென்னைக்குச் சென்றார். சென்ற அவர், விவேகாநந்த மடத்தைச் சேர்ந்த இராம கிருட்டிணனந்தர் என்ற பெரியவரைக் கண்டார். இராமகிருட்டிணனந்தர் பிள்ளையவர்களை வரவேற்று உரையாடினர். நாடெல்லாம் புகழும் நாட்டுக் கைத் தொழில்களை வளர்க்கவும், அவற்றை நடத்தவும் எத்தகைய முயற்சிகள் இதுவரை நடத்தப்பட்டிருக் கின்றன என்று பிள்ளையவர்களை விசாரித்தார் பெரியவர். "'நேற்றிருந்த மனிதன் இன்று இல்லா மற்போகின்றான்; அந்தப் பெருமையை இந்த உல கம் கொண்டிருக்கிறது' என்பது வள்ளுவர் கருத் தாகையால், நிலையற்ற உலகில் என்ன காரியம் நிகழ்த்துவது; வாழ்வும்தாழ்வும் இவ்வுலக வழக்கம். ஆகவே இதுவரை யான் ஒன்றும் செய்யவில்லை" என்று பதிலளித்தார் பிள்ளையவர்கள். "நாட்டுத் தொழில் வளர்த்தலே நன்மைதரும்; அதுவே எனது குறிக்கோள்" என்றுரைத்தார் பெரியவர். அச்சொல் சிதம்பரனர் மனதில் தைத்தது; வித் தென விழுந்தது.

அடுத்துவந்த கார்த்திகைத் திங்களில் ஜப்பான் தேசம் செல்லக்கருதிய இரு வங்காளிகள் வந்தனர். அவர்களை வரவேற்று உணவளித்தார் சிதம்பரனர். அவர்கள் சுதேசியத்தில் வங்காளம்வளர்வதை எடுத் துரைத்தார்கள். அவர்கள் வார்த்தைகள் இராம கிருட்டிணனந்தர் போட்ட வித்துக்குப்பக்குவம் செய் தனபோலிருந்தன.

கைத்தொழில் வளர் சங்கம், தருமசங்கம் என இரு சங்கங்களைத் தூத்துக்குடியில் தோற்றுவித்தார் பிள்ளையவர்கள். விவேகானந்தர் மடத்தைச் சேர்ந்த அபேதானந்தரும், பாய் பரமானந்தரும் இவற்றிற்கு உதவிபுரிந்தனர். தரும சங்கம் நெசவுச்சாலை ஒன்று நடத்தியது. கப்பல் கம்பெனி ஒன்று நடத்தப்பட்டது. சுதேசிப் பண்டகசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இவற்றையெல்லாம் பார்த்துச் சிலர் கேவலமாகப் பேசினர். இம்மூன்று சங்கங்களும் அனுபவித்த துன்பங்கள் சொல்லமுடியாது; எழுதவும் இயலாது. ஆனால், அவற்றையெல்லாம் மிகப் பொறுமையாகவும திறமையாகவும் சமாளித்தார் பிள்ளையவர்கள். துன்பம் தொடர்ந்து வரும் என்பது இந்நாட்டுத் தொடர். ஆனால் அத்துன்பம் வருங்கால் இன்பமாக்கிக்கோடல் எல்லோர்க்கும் இயலாவாம். இன்பமாகக்கொண்டவர் உயரிய பெரியவராவார். அப்பெரியாரில் ஒருவர் நம் பிள்ளையவர்கள்.

கைத்தொழில் சங்கத்தில் நெசவுச்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அதற்குப் பொருள் கொடுக்க உறுதி யளித்தனர் பலர். ஆனால் மற்றவர்கள் நெசவுச்சாலையைப் பற்றிக் கேவலமாகப் பேசினர். இந்தக் காலத்தில் இந்த நெசவுச்சாலை இலாபம் கொடுக்கும் தொழிலாகுமா? என்று பரிகாசம் பேசினர். புதிய புதிய மாதிரிகளில் அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் துணிகளின் முன் சுதேசித்துணி நிற்குமா? என்று கேள்வி கேட்டனர். எந்த வகையில் எடுத்துக் கொண்டாலும் மனதையும் கண்ணையும் கவரும் துணிவகைகளின் முன் இச்சுதேசித்துணி ஒப்பாகுமா? என்று வினவினர்.

இப்படியெல்லாம் மற்றவர் பேசும் வகைகளைக் கேட்டுப் பணம்கொடுக்க முன்வந்தவர்கள் பின்வாங்கினர். ஏதோ ஒருசிலர் பணம் கொடுத்திருந்ததையும் வெகுவேகமாக வந்து தொந்தரவுசெய்து வாங்கிக்கொண்டு சென்றனர். சிதம்பரம்பிள்ளையவர்கள் உயிர்த்தோழரும், அவர் மொழிகளை அப்படியே கேட்டு ஒப்புக்கொண்டு நடப்பவருமான குருநாதய்யர் என்பவர் கொடுத்த பணத்தைத் திருப்பி வாங்கவில்லை. ஆனல் குருநாதய்யர் தருவதாக வாக்களித்திருந்த பணத்தைத் தரவில்லை.

நெசவுச்சாலைக்கு வேண்டிய பணத்தைப் பிள்ளையவர்களே கொடுத்துவந்தார். உடையார்குளம் கோவில்பிள்ளை நாடார் என்பவர் நெசவுச்சாலை வேலையைப் பொறுப்பாகக் கவனித்து வந்தார். அவரும்வேண்டிய பணத்தைக் கொடுத்து நடத்திவந்தார். அவரிடம் சிலர் கடன்கேட்டு வாங்கித் திருப்பித்தரமுடியாமல் இருந்ததால் அவர் திடம் சிதைவுற்றது. அன்னியரின் அகங்கார அறிவு அவ்வேலையிலிருந்து பிள்ளையவர்களைப் பிரித்துவிட்டது. ஆனல் இருவர்தோன்றி நெசவுச்சாலையை நிலைக்க வைக்கப் பாடுபட்டனர். அவரில் ஒருவர் பெரிய உத்தியோகத்தைத் துறந்து நாட்டின் நன்மையே பெரிதெனக் கருதிய, தேசாபிமானத்தால் தேசத்திற்குழைத்த எஸ். கந்தசாமி பிள்ளையாவார். மற்ருெருவர், வாதி பிரதிவாதிகள் வழக்கிடும்போது வக்கீலைக் கொண்டு வாதயிடச் செய்யும் வக்கீல் குமாஸ்தா வைகுண்டம் பிள்ளையாவார். அவ்விருவரது அறிவெனும் திருவால் ஆக்கமுற்று நெசவுச்சாலை வ்ளர்ந்து நன்மையளித்தது.

அன்னிய நாட்டார், ஆண்டுவந்த நாட்டில் சுரண்டாமலிருப்பார்களா? 'அகப்பட்டதைச் சுருட்டடா ஆண்டியப்பா' என்று இடைத்ததையெல்லாம் இந்தியாவிலிருந்து வெள்ளையர் கொள்ளையடித்துக்கொண்டு சென்றனர். அதற்கு அவர்களுக்குக் கப்பலும் மற்றுமுள்ள சாதனங்களும் இருந்தன. ஆளவந்த ஆங்கிலேயர் எவ்வெவற்றை இந்தியரிடமிருந்து பறிக்கவேண்டுமோ அவற்றையெல்லாம் பறித்துவிட்டனர். இந்தியரது உரிமையையும் உடைமையையும் பறித்துக் கடலாதிக்கத்தைத் தங்கள் கையிலே வைத்துக்கொண்ட வெள்ளையரது போக்கு கண்டிக்கத் தக்கதென்று சிதம்பரனுருக்குப்பட்டது.

'பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி' என்ற கம்பெனியாருக்குச் சில கப்பல்கள் இருந்தன. அவை தூத்துக்குடிக்கும் இலங்கைத் தீவிற்கும் சாமான்களை ஏற்றுமதி இறக்குமதி செய்து வாடகை வாங்கி வந்தன. அக்கம்பெனி ஆங்கில வர்த்தகருக்குச் சொந்தமானது. ஏகாதிபத்தியக்கொள்கைகொண்ட ஆங்கில அரசாங்கத்தின் பிரதிபிம்பம் அந்தக் கம்பெனி. அந்தக் கம்பெனி அரசாங்கத்திற்குச் செல்லப்பிள்ளை. பின் கேட்கவேண்டுமா, அட்டகாசத்தை. இந்திய வியாபாரிகள் இலங்கையிலிருந்து சாமான்களை ஏற்றுமதி செய்யவோ அல்லது தூத்துக்குடியிலிருந்து சாமான்களை ஏற்றுமதி செய்யவோ கேட்டுக்கொண்டால், உடனே செய்வதில்லை. தூத்துக்குடியிலிருக்கும் சரக்கு கொழும்புக்குச் சென்றால், அதிக லாபத்துடன் விற்கும் என்று நினைத்து ஒரு கப்பல் ஏற்றுமதி செய்யத் துடியாய்த்துடிப்பார் இந்திய வியாபாரி.

உடனே கம்பெனியைக் கப்பல் ஒன்று தருமாறு வேண்டிக்கொள்வார். ஆனால், 15 தினங்கள் கழித்து கப்பல் கிடைக்கும் என்று பதில் கிடைக்கும். இதற்குள் இந்தியாவிலுள்ள அந்தச் சரக்கு ஒரு ஆங்கில வியாபாரியிடமிருந்து இலங்கைக்கு அந்த 'பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி'க் கப்பல்மூலம் சென்று விற்பனையாகி முடிந்துவிடும். கொள்ளை லாபத்தைச் சுருட்டிக் கொண்டு வெள்ளையர் கொழுத்துப் பருப்பர். பதினைந்து நாட்கள் கழித்து,'ஒரு கப்பல் ஒதுக்கப்பட்டு விட்டது; உடனே சரக்கு ஏற்றிக்கொண்டு செல்லலாம்' என்று உத்திரவு வரும், அந்த இந்திய வர்த்தகருக்கு. கப்பல் வேண்டாம் என்று வர்த்தகர் பதில் அனுப்புவார். முன் வேண்டுகோள் கடிதத்தை வைத்துக் கப்பலை ஒதுக்கிவிட்டதாகவும், கப்பல் வேண்டாமென்றால் உரிய வாடகைப் பணத்தைச் செலுத்திவிடவேண்டு மென்பதாகவும், இல்லாவிட்டால் கோர்ட்டுமூலம் வசூல் செய்யப்படும் என்பதாகவும், அதற்கு ஏற்படும் செலவுகளை எல்லாம் வர்த்தகர் பொறுக்க நேரிடும் எனபதாகவும் கடிதம் கிடைக்கும். வேறொன்றும் பேசாது வாடகையைச் செலுத்திவிட்டுத் திரும்புவார் சில வியாபாரிகள். அல்லது ஒரு கப்பல் சரக்கை ஏற்றிக்கொணடு கொழும்பு சென்று இறக்கிவைத்துக் கிட்டங்கி வாடகைகொடுத்து நஷ்டமடைவார் சிலர். இப்படி இந்திய வியாபாரிகளுக்கு அந்தக் கம்பெனி வசதியளிக்காததால், அவர்களுக்கு அந்தக் கம்பெனியின்பேரில் நல்லெண்ணம் இல்லாமல் போயிற்று.

இந்தியாவின் நில ஆதிக்கத்தைக் கொண்ட வெள்ளையர் கடல் ஆதிக்கத்தையும் கைப்பற்றி இந்திய வர்த்தகரின் பொருளாதிக்கத்தின் மேலும் கை வைப்பாராயினர். ஆட்சித்திறன் கொண்ட ஆங்கிலேயரின் ஆட்சியைக் கண்டு மனம் விம்மினர் சிதம்பரம்பிள்ளை. இந்த அல்லலை நீக்க ஆசைப் பட்டார் பிள்ளையவர்கள். அதற்காகக் காலத்தைக் கருதியிருந்தார்.

சிவபுரம் மிட்டாதார் சி. வ. நல்லபெருமாள் பிள்ளையவர்கள் ஒரு பெரிய வியாபாரி. அவர் கொழும்பில் வியாபாரம் நடத்திவந்தார். தூத்துக் குடியிலிருந்து கப்பல்மூலம் சரக்கேற்றி கொழும் புக்கும், கொழும்பிலிருந்து சரக்கேற்றி தூத்துக் குடிக்கும் கொண்டுவந்து வியாபாரம் நடத்துவது வழக்கம். அந்த வியாபாரத்துக்கு வெள்ளையர் கம்பெனிக் கப்பல் உதவியாயில்லை. உதவியாக இல் லாதது மாத்திரமில்லை இடுக்கணுகவுமிருந்தது. நல்ல சந்தர்ப்பங்களில் கப்பல் கிடையாமற் போய்விடும். இதனுல் வியாபாரம் சிற்சில சமயங்களில் பெரிதும் பாதிக்கப்படும். இத்துன்பங்களையெல்லாம் நல்ல பெருமாள் பிள்ளை நல்லமுறையில் தாங்கிக்கொண் டிருந்தார் என்று தான் சொல்லவேண்டும். அவர் பெரும் வியாபாரத்துக்கு அன்னியர் கப்பல் தொல்லையாகவிருந்தது. பலநாள் ஆலோசனைக்குப் பின் ஒரு கப்பல் வாடகைக்குக் கொண்டுவந்து தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் நடத்துவதென்ற முடிவுக்கு வந்தார். பலரையும் பங்குதார்களாகச் சேர்த்தார்.

நல்லபெருமாள் பிள்ளையிடம் தினமும் வந்து போவார் புரோக்கர் ஜே. எல். மேத்தா என்பவர்.

மேத்தா உறுதியுடையவர்; பேச்சில் எவரையும் மயக்கிக் காரியத்தைச் சாதிக்கும் தன்மையுடையவர். அவர்பேரில் நல்லபெருமாள் பிள்ளைக்கு ஒரு நம்பிக்கை இருந்தது. ஆகவேமேத்தாவைப் பம்பாய்க்கு ஒரு கப்பல் வாடகைக்குக் கொண்டுவரும்படி அனுப்பினர். கப்பல் கொண்டுவர மேத்தா பம்பாய் சென்று, இரண்டுமாதங்கள் இருந்து, ஒரு கப்பல் கம்பெனியிடம் ஒரு கப்பலுக்கு ஒப்பந்தம் செய்தார். எந்தக் காரணத்தாலோ கப்பல் கம்பெனிக்காரர் ஒப்பந்தத்தை மீறி கப்பல் ஒன்று தரமறுத்துவிட்டார்கள். மேத்தா தூத்துக்குடிக்குக் கடிதம் எழுதி அனுப்பினர். முதலில் கப்பல் கிடைத்தது என்றும் பின் கிடைத்த கப்பல் இல்லை என்றும் செய்தி எட்டியதைக்கண்ட வியாபாரிகள் வியாகூலம் அடைந்தனர். கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே என்று வருந்தினர். எல்லோரும் சேர்ந்து சிதம்பரம்பிள்ளையவர்களைக் கண்டுபேசினர். எப்படியும் கப்பல் ஒன்று தருவித்து நடத்தவேண்டுமென்ற தங்கள் கருத்தை வெளியிட்டனர் வியாபாரிகள்.

பம்பாய் கப்பல் கம்பெனிக்காரருக்குச் சிதம்பரம்பிள்ளையவர்கள் ஓயாமல் தந்தியடித்து வந்தார்கள். இரவுபகலாகத் தினமும் தந்தியடித்துக் கம்பெனிக்கு இலாபம் அதிகம் தருவதாக ஆசைகாட்டினார்கள். பணம்பத்தும் செய்யுமல்லவா? பணத்தாசையால் பிள்ளையின் கையில் அகப்பட்டுக் கொண்டார் கப்பல்கம்பெனிக்காரர். பம்பாய்க் கம்பெனிக்காரர் ஏஜண்டு ஒருவரைத் தூத்துக்குடிக்குச் சிதம்பரம் பிள்ளையவர்களிடம் அனுப்பினார்கள். ஏஜண்டு சொன்னபடி உடன்படிக்கை ஒன்று எழுதி அனுப்ப

வேண்டுமென்று கம்பெனிக்காரர் தந்திகொடுத்து விட்டார்கள். ஏஜண்டு ரயில் வண்டியில் வந்தார். அவர் தூத்துக்குடி வந்து சிதம்பரம் பிள்ளையவர்களை விசாரித்து அவரிடம் சென்றார். ஏஜண்டு வந்திருக்கும் செய்தியை எல்லா வியாபாரிகளுக்கும் சொல்லி யனுப்பினர் சிதம்பரம் பிள்ளையவர்கள். எல்லா வியாபாரிகளும் கப்பல் வாங்குவதில் அப்போது பின்னடைந்தனர். நல்லபெருமாள் பிள்ளையும் பின்வாங்கிக்கொண்டார். அந்தோ! சிதம்பரனர் நிலைமை அப்போது எப்படியிருக்கும்.

பம்பாயிலிருந்து வந்த கப்பல் கம்பெனி ஏஜண்டைத் திரும்பிப்போகச் சொல்லுவதா, முன் வைத்த காலைப் பின் எடுத்துக்கொண்ட வியாபாரிகளை இசையச் செய்வதா என்ற ஆலோசனையில் ஆழ்ந்தார் பிள்ளையவர்கள். எடுத்த காரியத்தை இடையில் விடாமல் எப்படியும் முடித்துவிட வேண்டுமென்று சிதம்பரனரின் திடங்கொண்ட உள்ளம் சொல்லிக்கொண்டே இருந்தது. ஏனென்றால் 'எண்ணித் துணிவது கருமம்; துணிந்தபின் எண்ணுவமென்பது இழுக்கு' என்ற வள்ளுவர் வாக்கு அவர் மனதை அள்ளிக்கொண்டதல்லவா! ஆகவே அடைந்த துயரை அவர் ஒரு பொருளாக நினையாது, கம்பெனி ஏஜண்டை இருக்கும்படி செய்து, அல்லும் பகலும் நில்லாமல் நிலையாமல், வியாபாரிகளை அணுகி அன்பான மொழிகள் பேசி, தென்னட்டின் வியாபாரிகளின் துன்பத்தைத் துடைக்க வேண்டுமென்று வேண்டினர். அன்பு மொழிகளுக்கு அகத்தைப் பறிகொடுக்காது, தூத்துக்குடி வியாபாரிகளின் துன்பத்தைக் கவனியாது, வம்பாய்த் திரியும் சிலரிடம் அச்சங்கொள்ளும் சில வார்த்தை

களைப் பிள்ளையவர்கள் பேசிவந்தார். அன்பும் அச்சமும் நீங்கியவர்களிடம் நெருங்கிச் செல்லாமல், அவர்களுக்கு வேண்டியவர்களிடம் அவர்களைப்பற்றி ஏசியும் பேசியும் வந்தார். சொல்வதை நம்பாத சந்தேகப்பேர்வழிகளிடம் அறிவுரை பலவற்றை அறைந்து நன்மையை எடுத்துக் காட்டிவந்தார். இப்படியாக இரவும் பகலும் கருமமே கண்ணாகக் கொண்டு உழைத்து வந்தார் சிதம்பரனார். பல வியாபாரிகள் பிள்ளையவர்களின் பேச்சிற்கு இசைந்து உடன்படிக்கை ஒன்று கப்பல் கம்பெனியாருடன் செய்துகொள்வதாக உடன்பட்டனர். பத்திரம் ஒன்று எழுதப்பட்டது. அதைப் படித்துப் பார்த்து, திருத்தி அழகுபடுத்தினர் சட்டங்கற்றபலர். முடிவில் பம்பாய் ஏஜண்டும், தூத்துக்குடி வியாபாரிகளும் அதில் கையெழுத்திட்டனர். ஏஜண்டு பம்பாயை நோக்கிச் சென்றார்.

நல்லபெருமாள் பிள்ளை இச்செய்கையில் நம்பிக்கை கொள்ளவில்லை. பம்பாய் கப்பல் கம்பெனியாருக்குத் தந்தியடித்து விட்டார். தந்தி கிடைத்த கம்பெனிக்காரர் எதையும் முடிக்க இயலாதென்று பிள்ளையவர்களுக்குத் தெரிவித்து விட்டார்கள். 'இடும்பைக்கே கொள்கலம் போலும் உடம்பு' எனக் கருதிய பிள்ளையவர்கள் இதைக் கண்டு திகைத்தாரில்லை. தந்தியில் தனது கருத்தை எடுத்துரைத்தார். பிள்ளையவர்கள் விடாப்பிடியாக எடுத்துரைத்து வந்த செய்திகள் கம்பெனியாரின் கருத்தைக் கவர்ந்தன. அதனால் கப்பலொன்று கொடுப்பதாகக் கூறி, கொழும்பில் வந்து சேரும் என்று பிள்ளையவர்களுக்குச் செய்தி தெரிவித்துவிட்டார்கள். கொழும்பிற்குச் சென்று கப்பலைக்

கைக்கொண்டு தூத்துக்குடி சென்று நன்றாக நடத்துக என்று செய்தி அனுப்பிவிட்டனர், கம்பெனியார். செய்திவந்த ஐந்தாம் நாளில் கொழும்பிற்குக் கப்பல் வந்தது. தமிழ் வியாபாரிகள் மகிழ்ந்துகப்பல் வந்ததாகச் சிதம்பரனாருக்குத் தந்தியடித்தனர். புரோக்கர் மேத்தா அங்கு போனார். கப்பல் கொண்டு வந்தவருக்குப் புரோக்கரைப் பிடிக்கவில்லை. புரோக்கர், சிதம்பரம் பிள்ளையவர்களைக் கொழும்பிற்கு அனுப்பவேண்டும் என்று தந்தி பேசினார். எல்லோரும் வேண்ட பிள்ளையவர்கள் சென்றார்கள். கப்பல்காரர் கருத்தையறிந்து, ஒரு சொல் சொல்லி, கப்பலைக் கைக்கொண்டு பெருமையோடு தூத்துக்குடியின் அருங்கரை சேர்ந்தார் பிள்ளையவர்கள்.

தூத்துக்குடி வியாபாரிகளுக்காகக் கொண்டு வந்த கப்பலில் எல்லோரும் சரக்கேற்றிக் கொழும்புக்குக் கொண்டுசென்றனர். கொழும்பிலுள்ள சரக்குகளை ஏற்றித் தூத்துக்குடிக்கு அனுப்பினர். வியாபாரிகள் கப்பல் வரவை எதிர்பார்த்திருந்து, வந்ததும் சரக்குகளை ஏற்றியனுப்புவது வழக்கமாயிருந்தது. அன்னியக்கப்பல் கம்பெனிக்காரருக்கு இதனால் வரும்படி குறைந்தது. அந்தக் கப்பல் ஏஜண்டுகள் தங்கள் கம்பெனிக்கு வருவாயில்லையே என்று வருந்தினர். உடனே தங்கள் கப்பலின் வாடகையைக் குறைத்தனர். அவர்களை எதிர்த்தவர்களைப் பணம் கொடுத்து விலைக்கு வாங்கினர். இப்படியாகப் பல வழிகளிலும் ஏஜண்டுகள் முனைந்து நின்று சுதேசிக் கப்பலை ஆழ்த்திவிட வேண்டுமென்று ஆசைப்பட்டனர். எதிர்ப்பிருந்

தும் இரண்டு மாதங்களில் இருபதினாயிரம் ரூபாய் இலாபம் கிடைத்தது. கிடைத்தும் என்ன பயன்! அன்னியர்வலையில் கப்பல் அகப்பட்டது. கொழும்பு சென்ற கப்பல் திரும்பி வராமற் போய்விட்டது.

கொழும்பிலிருந்து ஏற்றவேண்டிய சரக்குகள் குவிந்தன. கப்பல் இல்லாததால் வணிகர்கள் கடுந் துன்பம் அடைந்தனர். மறுபடியும் அன்னியர் கப்பலை அணுகினர். கேட்க வேண்டுமா கிராக்கியை! சொன்னபடியெல்லாம் பணம் கொடுத்துச் சரக்கை ஏற்றினர். பக்கிரி முகமது என்ற வியாபாரி படாத பாடுபட்டார்.

வியாபாரிகளுக்குத் துன்பம் அதிகம் ஏற்பட்டது. எல்லோரும் வருந்தினார்கள். தங்கள் போதாக்காலம் போகவில்லை என்று நினைத்தார்கள். 'மருந்தும் உண்டுகொல் யாம்கொண்ட நோய்க்கு' என மயங்கினார்கள். 'எங்கள் துன்பம் மாறுமா? எங்கள் இருளை நீக்கச் சூரியன் உதிப்பானா?' என்று ஏக்கங்கொண்டார்கள். எல்லோரும் சிதம்பரம்பிள்ளையை அணுகினார்கள். மறுபடியும் கப்பல் ஒன்று எப்படியும் வேண்டும் என்று ஒருமுகமாகக் கூறினார்கள். பிள்ளையவர்கள் எல்லாவற்றையும் பொறுமையோடு கேட்டார். பக்கிரி முகமதுராவுத்தர், "நானிலொன்று நல்குவேன்" என்று நவின்றார். மற்றவர்களும் பெருந்தொகை தருவதாக வாக்களித்தனர். எல்லோரும் கையெழுத்துப் போட்டுத் தந்தனர். கடும் வேகத்தில் கப்பல் ஒன்று கொண்டு வர வேண்டும் என்று வேண்டினர்.

கப்பல் ஒன்று வேண்டும் என்று எல்லாவிடங்களுக்கும் பிள்ளையவர்கள் தந்தி யடித்தார்கள்.

கொழும்புக்குச்சென்று வாடகைக்கு ஒரு கப்பலை அமர்த்தி வந்தார் பிள்ளை. சேர்ந்த பணத்தை யெல்லாம் அக்கப்பல் வாடகையாகத் தின்றது. கணக்கைக்கண்டு பக்கிரி முகமது ராவுத்தர் பயந்து போனார். எல்லா வியாபாரிகளும் அப்போது பின் வாங்கினர். பிள்ளையவர்கள் 'சிதைவிடத்து ஒல்கா உரவோ'ராய்த் திகழ்ந்தார். ஏனென்றால் புதையம்பிற் பட்டுப் பாடு ஊன்றும் களிறு எனக் கருதத்தக்கவரல்லவா பிள்ளையவர்கள்! அதாவது யானையின் மத்தகத்தில் அம்பால் அடித்தால், அது தளர்ந்துபோகாது, முன்னேறித் தன் பெருமையை நிலைநிறுத்தும். அதுபோல, பலதுன்பங்கள் திரண்டு வந்தவிடத்தும் கலங்காது தான்கருதிய காரியத்தை முடித்துவிட முயற்சிப்பார்கள் ஊக்கமுள்ளவர்கள். ஊக்கமே தனது ஆக்கமெனக் கருதிய பிள்ளையவர்கள் வியாபாரிகள் பின்வாங்கியதைக் கண்டு கலங்காது, தான் எடுத்துக்கொண்ட காரியத்தை எப்படியும் வெற்றியுடன் முடித்துவிட உறுதிகொண்டார்.

கொழும்புக் கப்பல் தின்றதுபோக மீதியுள்ள பணத்தைக்கொண்டு கப்பல் சங்கம் ஒன்று ரிஜிஸ்தர் செய்துவிட வேண்டுமென்றும், சங்கம் ரிஜிஸ்தர் செய்யப்பட்டதைக் காட்டி பங்குகள் சேர்க்க வேண்டுமென்றும், அவ்வாறுசேர்த்து கப்பல்நடத்த வேண்டுமென்றும் பிள்ளையவர்கள் கருதினர். சிதம்பரம் பிள்ளையவர்கள் இக்கருத்துடன் சில பெரிய வியாபாரிகளைக் கண்டுபேசினர். ஏற்று மதி இறக்குமதி செய்யும் அந்த வியாபாரிகள் சிதம்பரம் பிள்ளையவர்கள் கொள்கைக்கு உடம் பட்டனர். தேசநலத்தில் நாட்டங்கொண்ட பெரி

யோர்களிடமும் சென்று தனது கருத்தை விளக்கினார்பிள்ளை. எல்லோரும் அவர் கருத்துக்கு ஆதரவு தந்தனர். ஆதரவளித்தவர்களும் உடம்பட்டவர்களும் பொருள் நல்கினர். சுதேசிக் கப்பல் சங்கம் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது. எல்லாக் காரியங்களையும் இனிது நடத்துவதற்குப் பொருள் போதாது என்று கருதினார்பிள்ளை. அன்னியக் கப்பல் கம்பெனியின் அல்லல்களுக்கு ஆளான வியாபாரிகளுக்கு ஆறுதலளிக்கும் இக்கம்பெனி என்று எல்லோரும் பேசிக்கொண்டனர். இந்தியரைக் கட்டியாண்ட ஆங்கிலேயர் இந்தக் கம்பெனிக்கு முட்டுக்கட்டை போட்டனர். எப்படியும் கடலில் கப்பலோட்டி விடுவது என்று பிள்ளையவர்கள் உறுதிகொண்டு விட்டார்.

கப்பல் கம்பெனிக்குப் பங்குதார்களாகப் பலரிடம் பணம்கொண்டார் பிள்ளையவர்கள். கொழும்புக்குச்சென்று பல வியாபாரிகளைக் கண்டு பங்குதார்களாகச் சேரும்படி கேட்டுக் கொண்டார். பிள்ளையவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி அங்குள்ளார் பலர் பங்குதார்களாகச் சேர்ந்தனர். மேலும், தமிழ்நாடு முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து கப்பல் கம்பெனிக்குப் பங்குகள் சேர்த்தார். வடநாடு சென்றும் பொருள் திரட்டப் புறப்பட்டுவிட்டார் பிள்ளையவர்கள்.

தனது சுக போகங்களை விரும்பாது, தான் கருதிய காரியத்தை முடிப்பதையே கண்ணுங் கருத்துமாகக் கொண்டு, அல்லும் பகலும் அனவரதமும் கல்லுமுருகக் கடிது உழைத்தார் சிதம்பரனார். தன்னைச் சுற்றியலைந்தார், நட்டாரது துன்பம்

துயரங்களைத் தீர்த்து இன்பமாக்கிவைக்க விழைந்தார் பிள்ளை. அவர்கள் துன்பப் பாரத்தைப் போக்கி, அதனைத் தான் தாங்கி நிற்கும் தன்மையுடையவரானார்.

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்து ஊன்றும் தூண்.

என்ற திருக்குறளுக்கு இலக்கானார் சிதம்பரனார். ஆகவே எல்லாப்பயனும் எய்த அவருக்கு இறைவன் அருள்செய்தான்.

இந்திய மக்களுக்கு விடுதலை உணர்ச்சியை ஊட்டித் தட்டியெழுப்பியவர் இருவர். நாட்டு மக்களுக்குச் சேவை செய்தவர் பலரிருந்தாலும், உணர்ச்சி வேகங்கொண்டு தம் இன்ப துன்பங்களைக் கருதாது, மிகத் தீவிரமாக உழைத்தவர் இருவர்தான். அந்த இருவரையும் தீவிரவாதிகள் என்று இந்தியமக்கள் சொன்னார்கள். கணக்கற்ற அல்லல்களுக்கு அவ்விருவரும ஆளாயினர். கடுமையான சிறைத்தண்டனையில் வாடிக்கிடந்தனர். எண்ணத்தாலும் எண்ணமுடியாத இன்னல்கள் அவர்களைச் சூழ, அவற்றை அஞ்சாத நெஞ்சுடன் ஏற்று, கொஞ்சமும் தன்னலமற்று, அன்னிய அரசாங்க ஆட்சியை இந்திய மண்ணிலிருந்து போக்க, எல்லாத் தியாகங்களையும் செய்து வீரப்புகழ்கொண்டவர் அந்த இருவர் தான. அந்த இருவரில் ஒருவர் வடநாட்டுத் திலகர்; மற்றொருவர் தென்னாட்டுச் சிதம்பரம் பிள்ளை.

வடநாட்டில் பலவிடங்களில் சென்று பணம் திரட்டினார் சிதம்பரனார். ஆங்கிலேயரின் அநியாய

ஆட்சியிலிருந்து மீட்சிகொள்ள மக்கள் துடியாய்த் துடித்தனர். பிள்ளையவர்களின் விண்ணப்பத்திற்கிணங்கிச் சுதேசிக் கப்பல் கம்பெனிக்குப் பங்குதாரர்களாய்ச் சேர்ந்தனர், அந்நாட்டு மக்கள்.

ஆங்கிலேயர்கள் ஆதிக்க வெறிபிடித்த சூட்சிக்காரர்கள்என்றும் இந்தியர் பணத்தைச் சுரண்டவே இங்கு வந்தனர் என்றும் மிகக் காரசாரமாகத் தன் 'கேசரி' என்ற மராட்டிப் பத்திரிகையிலும், 'மராட்டா' என்ற ஆங்கிலப் பத்திரிகையிலும் எழுதி, மகாராஷ்டிர மக்களை விழிப்புறச் செய்தார் திலகர். அந்த வீரத் திலகரிடம் பிள்ளையவர்கள் சென்று தன் கருத்தை விளம்பினர். திலகர் பெருமான் பிள்ளையவர்களுக்கு வேண்டிய ஆதரவு செய்தார். பம்பாய் சென்று கப்பல் வாங்கவேண்டிய உதவியும் செய்தார்.

சிதம்பரனர் பம்பாயிலிருக்கும்போது, ஊரிலுள்ள அவரது ஒரே புதல்வன் நோய்வாய்ப்பட்டும் மனைவியார் பூரண கர்ப்பிணியாயும் இருப்பதாகச் செய்தி தெரிவித்து, ஒருமுறை ஊர் வந்து பார்த்துத் திரும்ப வேண்டுமென்று நண்பர்கள் கேட்டுக்கொண்டார்கள். அஞ்சா நெஞ்சம் படைத்த பிள்ளையவர்கள் இத்துன்பங்கள் வந்தபோது சிரித்துவிட்டார். "இடுக்கண் வருங்கால் நகுக" என்பது வள்ளுவர் வாக்கல்லவா! "மனைவியையும் மகனையும் கடவுள் காக்கட்டும். எல்லாம் வல்ல இறைவன் எனக்கு ஏன் இதைச் செய்யமாட்டான். கருமம் முடிந்ததும் திரும்பி வருவேன். கலங்காதிருக்க எனக்கு ஆசி

கூறுங்கள். பிறர்க்கென முயலும் பெருங்கடமை பாக்கி இருக்கிறது. முடிந்ததும் கப்பலுடன் வருவேன்” என்று பதில் எழுதினார்.

செய்த முடிவு பொய்யாகாமல் கப்பலும் கையுமாகப் பிள்ளையவர்கள் தூத்துக்குடித் துறை முகத்திலே வந்திறங்கினர். பார்த்த தமிழ் மக்கள் பரவசமடைந்தார்கள். கேட்ட தமிழ்ப் பெரியார்கள் கிளர்ந்தெழுந்தார்கள். கப்பலின் பெயர் 'லாவோ' என்பர். 'காலிபர்' என்ற பெயருடைய மற்றொரு கப்பலை பிரான்சு தேசம் சென்று திரு. எஸ். வேத மூர்த்தி முதலியார் வாங்கிவந்தாரென்றும் கூறுவர்.

சுதேசிக் கப்பல் கம்பெனி வலுப்பெற்றது. தாங்கள் ஆதரவளித்த கம்பெனிக்கே ஏற்றுமதிக் கும் இறக்குமதிக்கும் சரக்குக் கொடுத்தனர் வியா பாரிகள். பொல்லாக் கள்ளத்தனமுள்ள ப்ரதேசிக் கம்பெனியார் சில ஆசை வார்த்தைகள் காட்டினு லும், அவற்றில் வீழாமல் சுதேசிக் கப்பல் கம் பெனியையே ஆதரித்தனர். அன்னிய வெள்ளைய ரின் ஆசைவார்த்தையில் சிலர் சிக்கினர். ஆனாலும் சிதம்பரனாரின் தெளிந்த, கவர்ச்சியான உரைகளைக் கேட்டு, கள்ளத்தனத்தால் கொள்ளையடிக்கும் வெள் ளையர் கொடுமையைத் தெரிந்து மீண்டனர். அது முதல் தாமும் சுதேசிக்கப்பல் கம்பனியை ஆதரித்த துடன் மற்றவர்களையும் ஆதரிக்கத் தூண்டினர் அந்த வர்த்தகர்கள். தூத்துக்குடியிலிருந்து கொழும்புக் கும், கொழும்பிலிருந்து தூத்துக்குடிக்கும் செல்லும் பிரயாணிகள் சுதேசிக் கப்பலிலேயே பிரயாணம் செய்ய ஆரம்பித்தனர்.

இவ்வாறு செல்வாக்கு நாளுக்குநாள் வளர்ந்து வந்ததைக் கண்டு ஆங்கிலேயர் ஆத்திரங் கொண்டனர். தங்கள் கப்பலுக்குக் கட்டணத்தைக் குறைத்தனர். வர்த்தகர்களிடம் தரகர்களை யனுப்பிக் கெஞ்சிப் பார்த்தனர். தங்கள் கப்பலில் தான் சாமான்களெல்லாம் போகின்றன; அவர்கள் சாமான் போகிறது; இவர்கள் சாமான் போகிறது என்று பொய் சொல்லிப் பார்த்தனர். ஏதொன்றுக்கும் இந்திய வியாபாரிகள் அசைவதாகத் தெரியவில்லை.

இரயில் நிலையத்திற்கு ஆள் அனுப்பி பிரயாணிகள் மனதைக் கலைத்துத் தங்கள் கப்பலில் ஏறிப் போகும்படி செய்து பார்த்தனர். அதுவும் நடக்கவில்லை. இந்தச் சூது வாதெல்லாம் மக்களுக்குத் தெரியும்படி சுதேசிக் கப்பல் கம்பெனியாரும் ஆட்களை வைத்து வெளிப்படுத்தினர்.

ஆங்கிலேயர் போட்டி போட்டுப் பார்த்தனர்; தமிழர் வாட்டமடைய வில்லை. வெள்ளையர் கட்டணத்தைக் குறைத்துப் பார்த்தனர்; தமிழர் வெட்டியாய்க் கப்பலை ஓட்டவில்லை. பரதேசியார் பொய் சொல்லிப் பார்த்தனர்; தமிழர் கையே ஓங்கிற்று. இதைக் கண்டு கலங்கிய ஆங்கிலேயர் தங்கள் கப்பலில் பிரயாணம் செய்வதற்கு யாதொரு கட்டணமும் கட்டத் தேவையில்லை என்று அறிக்கை வெளியிட்டார்கள். இந்தச் செப்படி வித்தையால் மக்கள் மனம் மாற வில்லை. ஆங்கிலேயர்கள் வஞ்சகம் செய்கிறார்கள் என்று விரைவில் மக்கள் அறிந்து கொண்டார்கள்.

மக்களின் மன உறுதியைக் கண்ட வெள்ளையர்கள் சிதம்பரனாரிடம் சென்று ஒரு லட்சம் ரூபாய்

தருவதாகவும் நடத்தும் கப்பல் கம்பனியை விட்டு விடும்படியாகவும் கேட்டுப் பார்த்தனர். "நாட்டைக் காட்டிக் கொடுக்கும் நயவஞ்சகன் நானன்று. கேட்டைவிளைவிக்கும் புத்தி எனக்கு வராது. பாண்டிய நாடு பார் புகழப்பட்டது, தமிழன் தனிப் புகழ் கொண்டவன், மானமே பெரிதென மாறுமலிருப் பவன்" என்று கூறி அவர்களை அனுப்பி விட்டார்.

---

6. அல்லற் படலம்

கப்பல் கம்பெனி நன்ருய் நடந்து வந்தது. பங்குதார்களில் சிலர் பொருமை கொண்டனர். "நாமெல்லாம் பணம் கொடுத்துப் பங்குதாராகச் சேர்ந்திருக்கிறேம். சிதம்பரம்பிள்ளை ஒருவர் காரியங்களை நடத்துகிருர். அவருக்குத்தானே எல்லாப் புகழும்போய்ச் சேருகிறது. நாம புகழடைய முடியவில்லையே" என்ற பொருமைதான் அது. ஆகவே சிலர் கூடி சிதம்பரம் பிள்ளையவர்களை 'அங்கேபோ இங்கேபோ' என்று சொன்ஞர்கள். பிள்ளையவர்களும் அப்படியே சென்று வந்தார். சிறிது நாளில் அவர்களின் பொருமைக்குணம் பிள்ளையவர்களுக்குத் தெரிந்துவிட்டது. ஆஞலும் கப்பல் கம்பெனியை விட்டுவிலகிவிடக் கருதவில்லை. அவர்கள் சொல்வதையெல்லாம் ஒருவாருகச் செய்து வந்தார். இதைக்கண்டு அவர்கள் பிள்ளையவர்களை ஏமாளி என்று கருதி, வேலையை விட்டுவிடும்படி கூறிஞர்கள். சிதம்பரஞர் வேலை வேண்டாம் என்று எழுதித் தந்துவிட்டார்.

சிதம்பரனாரின் ஆருயிர் நண்பராயிருந்து அவருடன் ஒருங்குசேர்ந்து உறுதியுடன் கப்பல் கம்பெனிக்கு வந்த துன்பங்களை யெல்லாம் தாங்கி உழைத்துவந்த சி. த. ஆறுமுகம்பிள்ளை, வியாபாரி அருணசலம் பிள்ளை ஆகிய இருவரும் பங்குதார்கள் கொள்கைக்கு உடன்படாது, சிதம்பரம்பிள்ளை கப்பல் கம்பெனியில் இருந்து வேலைசெய்ய வேண்டுமென்றும், அவர் இல்லாமல் கம்பெனி நன்ருய் நடவாதென்றும் கோபித்தார்கள். பிள்ளையவர்களை வேண்டாமென்றவர்கள், இந்த இருவர் கோபத்துக்கும் ஆளாக விரும்பவில்லை. ஏனென்ருல் இந்த இருவரும் அதிக பணம் உதவியிருக்கிருர்கள். அத்துடன் நிரம்பிய செல்வாக்குக் காரர்கள். ஆகவே இவர்களை உதாசீனம் செய்ய முடியாது. உடனே அவர்கள் தங்கள் செய்கையை மாற்றிக் கொண்டார்கள். "அவரை நாங்கள் நீக்கவில்லை; அவரே வேண்டாம் என்று போய்விட்டார். இப்போதும் அவரை அழைத்துக்கொள்ள நாங்கள் தயார்" என்று கூறினர்கள். சிதம்பரனரை அழைத்து ஏஜண்டாக்கினர்கள். அந்தப் பதவியும் புகழ் உண்டாக்குமென்று கருதி, சூப்பரிண்டெண்ட் என்று கொடுக்க வேண்டுமென்ருர்கள் சிலர். தான் தொடர்ந்து நடத்திய காரியத்தை விடாமல் நடத்தவேண்டுமென்று கருதிய சிதம்பரனர் அந்தப் பெயரிலும் அமர்ந்து வேலை செய்தார்.

சுதேசிக் கப்பல் கம்பெனியைக்கண்டு பரதேசிக் கப்பல் கம்பெனியார் கடுங்கோபங் கொண்டனர். அவர்கள் எப்படியும் இதை அழித்து ஒழித்து விட வேண்டுமென்று ஆசைப்பட்டனர். சிதம்பரனர் நாட்டுமக்களுக்குச்செய்துவரும் வேலைகளையும், அத

ளுல் அரசாங்கத்திற்கு ஏற்படும் தீமைகளையும் விவரமாக எடுத்தெழுதி அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்தனர், அந்தத் தூத்துக்குடி வெள்ளையர்கள். சுதேசிக் கப்பல் கம்பெனிவைத்து, வருமானத்தைப் பலவழிகளில் வளர்த்து, தங்களுக்குத் துன்பம் ஏற்படுத்திய பிள்ளையவர்களின் போக்கு பொல்லாததென்று வெள்ளையர்கள் எடுத்துக் காட்டினர். இப்படியே போய்க்கொண்டிருந்தால் தேச அரசாட்சியும் தேய்ந்து, கறுப்பர் கையில் சேர்ந்துவிடுமென்று எச்சரிக்கை செய்தனர். மேலும், தூத்துக்குடியில் உள்ள வெள்ளையர்கள் ஒன்றுகூடி மந்திராலோசனை செய்து சிதம்பரனுருக்கு இடுக்கண் பல புரிந்து வந்தனர்.

இந்தச் சமயத்தில் தூத்துக்குடியில் உள்ள கோரல் மில்லின் (ஹார்வி மில் என இப்போது வழங்கும்) கூலியாட்கள் வேலைநிறுத்தம் செய்தனர். மில்காரர் கொடுக்கும் கூலி வயிற்றுக்குப் போதவில்லை என்றும், அளவற்ற துன்பங்கள் அதனுல் ஏற்படுகின்றன என்றும், சம்பளம் கூட்டித்தர வேண்டுமென்றும் வேண்டி, கோரிக்கைகள் மில்காரருக்கு விடுத்தனர். அன்னிய ஆதிக்கத்தின் செல்லப்பிள்ளையான மில்காரர்களா கூலியாட்களின் கோரிக்கைக்கு இணங்குவார்கள்? அவர்கள் கோரிக்கையைக் கவனியாததினுலேயே வேலைநிறுத்தம் ஏற்பட்டது. வேலை நிறுத்த சமயத்தில் வேலையாட்கள் செலவிற்குப் பணமில்லாமல் பெரும் வறுமையுற்றனர். இதைக்கண்ட பிள்ளையவர்கள் பலரிடம் சென்று பணம் வசூல் செய்து கூலியாட்களுக்குக் கொடுத்து உதவினுர். இச்செயல் வெள்ளையர்

களுக்கு அறவே பிடிக்கவில்லை. வெள்ளைக்காரர்களின் கப்பலில் விடாமல் தங்கள் சரக்குகளை ஏற்றிவந்த சில வியாபாரிகளும், நாளாவட்டத்தில் சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தேடி வந்தனர். இதுகண்டு ஆங்கிலேயர் ஆர்ப்பரித்தனர். எடுத்ததை விடாமல் சிதம்பரம்பிள்ளை எக்காரியத்தையும் முடித்து விடுவார் என்ற நிச்சயம் அவர்களுக்குத் தெரிந்து விட்டது. ஆகவே அவரை வெளியில் விடாது சிறையினுள் தள்ளிவிட வேண்டுமென்று சூழ்ச்சிகள் செய்யத் துணிந்தனர்.

தெருவில் வெள்ளையர் சென்றால், அவர்கள் பேரில் தீக் கொளுத்தப்படுவதாகக் குற்றம் சாட்டினர்; கடலிலே கிடக்கும் கப்பலைப்போய்ப் பார்க்கும் போது கடலிலே தள்ள எத்தனித்தனர் என்று வெள்ளையர் பொய் மொழி சாற்றினர். அதற்காகப் பயந்து தங்கள் வேலைகளையும் கவனியாது வீணாய் இருக்க வேண்டியிருக்கிறதென்று விளம்பினர். வெளியில் வண்டியிற் சென்றால் வந்தேமாதர கோஷமிட்டு, நையாண்டி செய்வதாய் நவின்றனர். இவ்வகையான ஒப்பாரிகளைத் தூத்துக்குடியிலிருந்த "பிரேக்கன்" என்ற சப்கலெக்டரிடத்தே பாடினர். சப்கலெக்டர் இரக்கம் கொண்டு மேலாவுக்கு எழுதியனுப்பினார். சிதம்பரம்பிள்ளையும், அவர் நண்பர் சுப்பிரமணிய சிவாவும் எந்த விதத்திலும் மறு உத்திரவு வரும் வரை பிரசங்கமோ, வேறு பிரசாரமோ செய்யக்கூடாதென்று தெரிவிக்கப்பட்டனர். இந்த உத்திரவை சந்தி சிரிக்கச் செய்ய வேண்டுமென்று சிதம்பரம்பிள்ளையைச் சேர்ந்தார் கருதினர். பொதுவிடம் ஒன்றில் சிதம்பரனாரைச் சேர்ந்த பத்மநாப அய்யங்கார் என்பவர் பிரசங்கம் புரிவார் என்றும்

சிதம்பரனாரும் சிவாவும் தருமசங்க நெசவுச்சாலையில் சுதேசிக் கைத்தொழிலின் பெருமையைப் பற்றிப் பேசுவார்கள் என்றும், போலீஸ்காரர்கள் அவ்விடத்திற்கு வரக்கூடாது என்றும், தெருவெல்லாம் விளம்பரம் பரப்பினர். தூத்துக்குடி ஆட்சியாளர் கடுகடுத்தனர். திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் விஞ்சு துரைக்கு பலப்பல செய்திகள் தந்தியில் பகர்ந்தனர். சப்கலெக்டர் பிரேக்கன் தன்னை வந்து காணுமாறு பிள்ளையவர்களுக்குச் சொல்லி யனுப்பினார். மாலைக் காலத்தில் பிள்ளையவர்கள் பிரேக்கனோடு பேசிக் கொண்டிருக்கும் போது விஞ்சு துரை வேகமாய் வந்தார். பிள்ளையவர்களை மேலும் கீழும் பார்த்து விளம்பரத்தை எடுத்து நீட்டி, இவ்வித செய்கைகளில் தலையிடக் கூடாதென்று கூறி எச்சரிக்கை செய்தார். "பொதுவிடங்களில் பேசக் கூடாதென்ற உங்கள் முந்திய உத்திரவை இந்த விளம்பரம் எப்படி மீறியதாகும்" என்று பிள்ளை அவர்கள் பணிவுடன் பேசினார். போலீஸ் டிப்டி சூப்பிரண்டெண்ட், "இவர் சொல்வதைக் கவனிக்க வேண்டாம்" என்று கூறினார். "நெசவுச் சாலை எங்கள் சொந்தக் கட்டிடம்; அங்கு போலீஸார் வர வேண்டாம் என்று சொல்லிக் கொண்டது குற்றமாகுமா? போலீஸார் அங்கு வந்தால் கலவரம் வருமென்று நினைத்தோம். சொந்த வீட்டில் பேசுவதும் குற்றமாகும் என்றால் கலெக்டர் முன்பு யாதும் பேச இசையேன்" என்று சிதம்பரம் பிள்ளை பதில் கூறிக்கொண்டு நின்றார். நெசவுச் சாலையில் "போலீஸ் படை தோன்றும், அங்கு நடப்பதைப்பார்ப்போம்" என்று நவின்று நின்றார் சூப்பிரண்டெண்ட். "நடப்பதை நன்றாய்ப் பாருங்கள். சொந்த இடத்தில் போலீஸார் வந்து புகுவது எந்த

அறிவாலோ?" என்று கேட்டார் பிள்ளையவர்கள். இதைக் கேட்ட சூப்பிரண்டெண்ட் முகம் சோர்ந்து தலைதொங்கி விட்டது. விஞ்சுதுரை வேறு பல பேசி அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டு மென்று வேண்டிக் கொண்டு பிரேக்கனோடு பிள்ளை யவர்களை விட்டுச் சென்றார். பிள்ளையவர்களும் வீடு திரும்பினார்.

இந்தியாவைத் துண்டாடிய கைங்கர்யம் வெள் ளையரைச் சேர்ந்தது. பிரித்தாளும் கொள்கையே நெடுங்காலமாக அவர்களிடம் குடிகொண்டிருந்தது. இன்னும் சர்ச்சிலின் டோரிக் கும்பல் விஷமம் செய்துவருவது வெளிப்படையாயிற்றே. ஐதரா பாத் விஷயத்திலும் சர்ச்சில் அங்கலாய்த்தாரே. இந்தியாவை என்றென்றும் அடிமையில் வைத் திருக்க வேண்டுமென்பது சர்ச்சிலின் கோணல் புத் தியின் குருட்டு ஆசை.

வங்காள மாகாணத்தை இருதுண்டாக்க வேண்டுமென்று நினைத்தார், அப்போதிருந்த வெள் ளையரின் பிரதிநிதி வைசிராய். இந்துக்களும் முஸ்லீம் களும் சகோதரர்கள்போல வாழ்ந்து வந்தனர் அங்கு. ஆனால் இந்த ஒற்றுமை ஆளவந்தவர்களுக் குப் பிடிக்கவில்லை. இரு மக்களும ஒற்றுமையாய்த் தங்களை இந்திய நாட்டிலிருந்து விரட்டியடித்துவிடு வார்களோ என்று அச்சம் கொண்டது ஆங்கில வைசிராய் மனது. ஆகவே ஒன்றாய் இருந்த வங்க மாகாணத்தை இந்து வங்காளமென்றும், முஸ்லீம் வங்காளமென்றும் இரு துண்டாகப் பிரிக்க லார்டு கர்சான் என்ற வைசிராய் கருதினார். ஒற்றுமை யைக் குலைத்து வேற்றுமையை ஏற்படுத்துவது அவர்களது தொழிலல்லவா?

ஆட்சிபுரிவோரின் இந்தப் பிரித்தாளும் சூழ்ச்சியை வங்க மக்கள் கண்டுகொண்டார்கள். இந்து வங்காளமென்றும் முஸ்லீம் வங்காளமென்றும் பிரிக்கக்கூடாதென்று இரு மக்களும் சேர்ந்து எதிர்த்துப் போராட்டம் துவக்கினர். வங்காளிகள் நாட்டுப்பற்றை இவ்வளவு அவ்வளவென்று அளவிட்டுச் சொல்லமுடியாது.

வங்கப் பிரிவினையை எதிர்த்த போராட்டம் வங்காளத்தில் மாத்திரம் நடக்கவில்லை; இந்தியாவெங்கும் பரவிற்று. இந்திய மக்கள் வங்காளப் பிரிவினையை எதிர்ப்பதாக அன்னிய ஆடையைத் தீக்கிரையாக்கினர். மக்கள் மனதிலே கொடுந் தீ கொழுந்துவிட்டெரிந்தது. அடிமைத் தளையை அறவே அழித்து ஒதுக்க ஆவல்கொண்டனர். வறுமையும் பஞ்சமும் நாட்டில் தாண்டவமாடினாலும் அந்நிய ஆதிக்கத்தை அறவே அகற்றிவிடவேண்டுமென்று மக்கள் உறுதிகொண்டனர். அன்னிய ஆட்சியை அவமதித்தும் பேசினர்.

நாட்டின் சுதந்திரத்திற்காக எல்லாத் தியாகங்களையும் செய்ய மக்கள் தயாராக இருந்தனர். முடிவில உயிர்த் தியாகமும் செய்ய முடிவு கட்டினர். இந்தச் சமயத்தில், ஏற்கனவே அந்நியரின் கொடுமைகளுக்கு ஆளாயிருந்த பிள்ளையவர்களின் மனதில் சுதந்திரத்தீ கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. வழக்கறிஞராய் வாழ்க்கை நடத்திய சிதம்பரம்பிள்ளை யவர்கள் அரசியல் போரில் புகுந்து ஆண்மையுடன் நடத்த ஆசைப்பட்டார்.

பிள்ளையவர்கள் தம்மிடமிருந்த அன்னிய ஆடைகளையெல்லாம் தீயிட்டுக் கொழுத்தினர். அன்

னிய சாமான் எதுவும் வாங்குவதில்லை என்று உறுதி செய்தார். தமிழ் நாட்டிலே அன்னிய அரசாங்கத்தை எதிர்த்துப் போர்முனை ஒன்று தொடங்க நினைத்தார். அதன்படியே படை ஒன்று திரட்ட முயற்சித்தார். அநேக இடங்களில் கூட்டம் போட்டுப்பேசினார். மக்கள் பலர் அவருக்கு ஆதரவு தந்தனர். தொழிலாளி மக்கள் அவர் படையில் சேர்ந்தனர்.

மக்களுக்காக மனம் சலியாது வேலைசெய்த பிள்ளையவர்கள், அரசியலிலும் கலந்து ஆண்மையுடன் அருஞ் செயலாற்றினார். அதற்காகக் காங்கிரஸ் மகாசபையிலும் சேர்ந்தார். அன்னியன் ஆட்சியில் அல்லலுற்றுக் கிடந்த நாட்டை மீட்டி, குவலயம் புகழும் குடியரசை நாட்ட நாட்டங்கொண்டார். எங்கெங்கு காங்கிரஸ் மகாசபைக் கூட்டம் நடந்ததோ அங்கெல்லாம் பிள்ளையவர்கள் தவறாமல் சென்று வந்தார். ஆனாலும் அவர் கருத்து அங்கெல்லாம் மலரவில்லை; ஏழைகளுக்குத் தொண்டு செய்ய நினைக்கும் அவர் எண்ணம் ஈடேறவில்லை.

அந்தக்காலத்தில் காங்கிரஸ் மகா சபையில் கடும் பணக்காரர்களும் நெடும் பேச்சாளர்களுமே காணப்பட்டனர். ஏழை மக்களின் பிரதிநிதிகள் அங்கு இடம்பெறவில்லை. ஆகையால் அச்சபையில் இருகட்சிகள் தோன்றலாயின. ஒன்று மிதவாதம். மற்றொன்று தீவிரவாதம். மிதவாதிகள் கூட்டம் கூடி தீர்மானம் நிறைவேற்றிவிட்டு, கோட்டையைப்பிடித்துவிட்டதாகக் கொள்கையற்ற நெடும் பேச்சுப்பேசுவது வழக்கமாயிருந்தது. தீவிரவாதிகள் நெருப்புப்பொறி பறக்க நெஞ்சு நிமிர்ந்துபேசி

மக்கள் கருத்தைக்கவர்ந்து, அவசியத்தை உணர்த்தி, ஆவேசத்தை உண்டாக்கி, உடனடியாகக் காரியத்தில் இறங்குவார்கள். இந்தக்கட்சியில் தான் நமது பிள்ளையவர்கள் சேர்ந்தார்கள். இக் கட்சித் தலைவர் திலகர் பெருமான்.

வங்காள மாகாணத்தில் மிகப்பெருந் தலைவராய் வாழ்ந்து, நாட்டு மக்களுக்கு நலம் பலசெய்து, நாட்டு மக்களால் நன்கு மதிக்கப்பட்டு, உடல், பொருள், ஆவி மூன்றையும் நாட்டுக்காகச் செலவிட்டவர் உத்தமர் விபினசந்திர பாலர் ஆவார். அந்த உத்தமரை அன்னிய அரசாங்கம் அடிமையாக்கக் கருதி அல்லல் பல அவருக்கிழைத்தது. சுதந்திர உணர்வு கொண்ட விபின சந்திரபாலர் அவற்றைப் பொருட் படுத்தாது, எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு சேவை செய்து வந்தார். அவர் சேவையைக் கண்டு அஞ்சியது அன்னிய அரசாங்கம். அச் சேவை அன்னிய அரசாங்கத்தை ஆட்டி, நாட்டை விட்டு ஓட்டிவிடுமோ என்ற நிலைக்கு வந்துவிட்டது. உடனே அவரைப் பிடித்துத் தண்டித்துச் சிறையிட்டது அரசாங்கம். தண்டனைக் காலத்தைச் சிறையில் கழித்தார் விபினர். தண்டனைக் காலம் கழிந்தது. வெளிவரும் நாளும் சமீபித்துவிட்டது. நாட்டுமக்கள் உற்சாகங்கொண்டு அவரை வரவேற்க ஆசை கொண்டனர். பலவிடங்களில் வரவேற்புக்குத் திட்டமிட்டனர்.

விபினசந்திரபாலர் விடுதலையாகும் தினத்தை எப்படிக் கொண்டாடுவதென்று தீர்மானிக்கத் தூத்துக்குடியில் சுப்பிரமணிய சிவாவும் சிதம்பரனும்

பல தேசபக்தர்களும் கூடினர். பாலர் விடுதலையாகும் தினத்தில், அவர் படத்தை அலங்கரித்து, பலர் முன் செல்ல, மேளவாத்தியங்களுடன் ஊர்வலம் செல்ல வேண்டும் என்று தீர்மானித்தார்கள். அன்று, தரும வைத்தியசாலை ஒன்று ஆரம்பிக்கத் தீர்மானித்தார்கள். புத்தகசாலை ஒன்று திறக்க முடிவு செய்தார்கள். நண்பர்கள் கூடிப் பேசிப் பழகும் ஒரு இடம் அமைக்கத் தீர்மானித்தார்கள். 'சுயராச்சியம்' என்ற பெயர்கொண்ட ஒரு பத்திரிகை நடத்த முடிவு செய்தார்கள். 'சுயராச்சியம்' என்ற பத்திரிகை ஆரம்பிக்கப் பணம் வேண்டுமே. அதற்குப் பணம் கொடுக்க இசைபவர்கள் தங்கள் வீட்டின்முன் சுயராச்சியக் கொடியை உயர்த்த வேண்டும் என்று தீர்மானம் செய்தார்கள். இந்தத் தீர்மானங்களை வெளிப்படுத்தினார்கள். "விபின சந்திரபாலர் விடுதலையாகும் தினம, இந்த இந்தியாவும் விடுதலையாகும். ஆகையால், அன்று நாம் எல்லோரும் ஒன்றுசேர வேண்டும். அப்படிச்சேர்ந்தோமானால் சுயராச்சியம் அன்றே வந்துவிடும். அன்றே சுயராச்சியக் கொடி தூக்குவோம்" என்று சுப்பிரமணிய சிவா பிரசங்கம் செய்தார். இவற்றையெல்லாம் வெள்ளையர்கள் மேலாவுக்கு எழுதினர். பரலி சு. சண்முகசுந்தரம் பிள்ளையை ஆசிரியராகக் கொண்டு வெளிவரவிருந்த 'சுயராச்சியம்' சர்க்காரால் தடை செய்யப்பட்டு வெளிவரவே இல்லை.

வெள்ளையர்கள் இக்காரியங்களைத் தொலைக்க எண்ணிக்கொண்டிருந்த நாட்களில், ஆஷ் துரை என்பவர் ஜாயிண்டுக்கலெக்டராகத் தூத்துக்குடிக்கு வந்துசேர்ந்தார். வந்ததும் செய்திகளைக் கேட்டார். தன்னை வந்து பார்க்கும்படி பிள்ளையவர்களுக்கு

ஒரு காகிதம் எழுதினார். காகிதம் பிள்ளையவர்களிடம் சேர்ந்தது. பல நண்பர்கள் வந்து ஆஷ் துரையிடம் போகவேண்டாம் என்று பிள்ளையவர்களைக் கேட்டுக்கொண்டனர். ஊழ்வலி யிருந்தால் எதைத்தான் தடுக்கமுடியும் என்றுகூறி நண்பர்களைச் சமாதானம் செய்து பிள்ளையவர்கள் புறப்பட்டார். ஸ்ரீவைகுண்டம் வக்கீல் மகாதேவ அய்யர் பிள்ளையவர்களுடன் துணைக்குச் சென்றார். இருவரும் ஆஷ்துரையைக்கண்டனர். கோரல்மில்தொழிலாளர் போராட்டம் ஏன் உண்டாயிற்று என்று துரை கேட்டார். கூலியாட்கள் இறக்கும்படியான கொடுமைகள் செய்ததால் வேலைநிறுத்தம் அவர்கள், செய்தார்கள் என்று பிள்ளையவர்கள் பதில்கூறினார். மறுநாள் முதல் வேலைக்குத் திரும்பாவிட்டால் போலீஸ்படை வந்து அடித்துத் துன்புறுத்தும் என்று ஆஷ் துரை சொன்னார். படையில்லாதவரிடம் படையின் பலத்தைப் பகர்தல் நல்லவர் பண்பல்ல என்று பிள்ளையவர்கள் பகர்ந்துவிட்டு வீடு திரும்பினார்கள். பின்பு ஒருவித ஒப்பந்தம் நடந்ததன் பேரில் மில்திறக்கப்பட்டது. வேலையாட்கள் வேலைக்குச் சென்றனர்.

கப்பல் கம்பெனிக் கூட்டாளிகள் எல்லாம் கூடினர். சிதம்பரம் பிள்ளை அரசியலில் கலந்து கொள்ளாமல் இருந்தால் அவர்நடத்தட்டும். இல்லாவிட்டால் அவரை நீக்கிவிடவேண்டும் என்று பேசினர். அதைக்கேட்ட நண்பர்கள், அவர் நீங்கினல் கம்பெனி அழிந்துவிடும்;பணமும் போய்விடும். ஆகையால் எல்லாம் ஆலோசித்துச் செய்யவேண்டும் என்று எடுத்துரைத்தார்கள்.

முன் தீர்மானப்படியே விபினசந்திரபாலர் விடுதலையடைந்த தினத்தன்று பெருங் கொண்டாட்டம் நடத்தினர். கலகம் எதுவும் வராமல் போலீசார் பாதுகாத்தனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடிய கூட்டத்தில் சிவாவும் பிள்ளையவர்களும் பேசினர். இவர்கள் பேச்சைக்கேட்டவர்கள் வெள்ளையரைக் கண்டு வெறுத்தனர். அதிகாரிகளைக் கண்டு ஆத்திரப்பட்டனர். அவ்வளவுதூரம் ஆய் விட்டது. இதனால் அதிகாரிகள் அச்சமடைந்தனர். ஆகவே சிதம்பரனாரை எப்படியாவது சிறைசெய்து விடவேண்டும் என்று தீர்மானித்தனர் வெள்ளையர். அப்படிச்செய்தால் தான் தாங்கள் வாழமுடியுமென்றும் நம்பினார்கள். மறுநாள் நெல்லைஜில்லாக்கலெக்டர் விஞ்சு துரையைக் காணவேண்டுமென்று பிள்ளையவர்களுக்கும் சிவாவுக்கும் உத்திரவு வந்தது. அன்றே ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். பள்ளிவாசற் பேட்டையில் கூட்டம் என்று அறிவித்தார்கள். அநேகம்பேர் வந்து சேர்ந்தனர். விபின சந்திர பாலர் விடுதலை விழா நடத்தியது இராஜத்துவேசம் என்றும், அதற்கு ஜாமீன் தரவேண்டும் என்றும், அதற்காக மறுநாள் ஆஜராக வேண்டும் என்றும் கலெக்டர் உத்திரவிட்டிருக்கிறார் என்று சிவா பிரசங்கத்தில் கூறினார். பொதுமக்களுக்கு உணர்ச்சி வந்துவிட்டது. பொதுமக்கள் பொங்கி எழுந்ததால் பெரிய இன்ஸ்பெக்டரும் கிராமமுன்சீப் முத்துக்கிருஷ்ண நாயுடுவும் ஓட்டம் பிடிக்கவேண்டியதாயிற்று. அச்சமயத்தில் சிதம்பரனார் எழுந்து, "நாளைக்குக் கலெக்டரிடம் செல்கிறோம். நாளைக் கழிந்தமறுதினம் இங்குகூடி என்ன செய்யவேண்டும்

என்று தீர்மானிப்போம்" என்று சொன்னார். அது கேட்ட பொதுமக்கள் ஆறுதல் அடைந்தனர்.

திருநெல்வேலியில் கலெக்டர் ஆபீஸ் கொக்கர குளத்தில் இருக்கிறது. கலெக்டர் உத்திரவுப்படி அவரைக்காண 9-3-1908 தேதி சிவாவுடனும் பத்ம நாப அய்யருடனும் பிள்ளையவர்கள் ஆஜரானார்கள். கலெக்டர் மாலையில் வழக்கை எடுப்பதாக வாயிதாப் போட்டார். மாலையில் வழக்கு எடுக்கப் பட்டது. "திருநெல்வேலி நகரத்திற்கு வருவதில்லை என்று நீர் கூறினால், உம்மை விடுதலை செய்கிறேன்" என்று கலெக்டர் பிள்ளையவர்களிடம் கூறினார். சிதம்பரனார் முதலிய மூவருக்காக வக்கீல் சாது கணபதி பந்துலு, வக்கீல் மகாதேவன், வக்கீல் சிவராமகிருஷ்ணன் ஆகியவர்கள் ஆஜராயிருந்தனர். அவர்கள் பிள்ளை யவர்கள் முகத்தைப் பார்த்தனர். பிள்ளையவர்கள், "மனைவியையும் மக்களையும் மறந்து விடு" என்று சொன்னால் எப்படியிருக்குமோ அப்படியிருக்கிறது என்னைத் திருநெல்வேலிக்கு வராதே என்பது" என்று சொன்னார்; அதை அப்படியே வக்கீல்கள் கலெக்டருக்குச் சொன்னார்கள். கலெக்டர் மறுநாள் வாயிதாப் போட்டார். பிள்ளையவர்கள் தூத்துக் குடிக்குவந்து சேர்ந்தார். பெரியோர் பலர் ரயில்வே நிலையத்தில் பிள்ளையவர்களைச் சந்திக்க வந்திருந் தனர்.

கூடியிருந்த பெரியோர்களை ஒரு வெள்ளையர் அகம்பாவத்தோடு தள்ளினார். தள்ளிய வெள்ளை யரை எதிர்க்கப் பலர் ஆரவாரம் செய்தனர். இன்ஸ் பெக்டர் சாயுபு பிள்ளையவர்களைப்பார்த்துப் பார்வை யாலேயே கெஞ்சினார். மக்களைச் சமாதானம் செய் தார் பிள்ளையவர்கள். தன்னுடைய தவறுக்காகத்

தன்னை மன்னிக்கும்படி வெள்ளையர் பிள்ளையவர்களை வேண்டிக் கொண்டார். அந்த வெள்ளையரை இருக்கும்படி சொல்லிவிட்டு பிள்ளையவர்கள் வீட்டை நோக்கி நடந்தார். பலர் தொடர்ந்தார். எல்லோருக்கும் பதில்கூறிவிட்டு, பிள்ளை வீட்டையடைந்தார். தன்னை வீட்டிலேயே விட்டு விட்டுப் போய் விட்டதாகப் பிள்ளையவர்களின் மூத்த புதல்வன் கோபித்துக் கொண்டான். பொறுத்துக் கொள்ள வேண்டினர் பிள்ளை. மறுநாள் போகும் போது அழைத்துப் போவதாக வாக்களிக்க வேண்டும் என்று புதல்வன் கேட்டான். சரி என்று பிள்ளையின் பேரில் பாசத்தைக் கொண்ட பிள்ளையவர்கள் கூறினர். மறுநாள் மகனை விட்டு விட்டு திருநெல்வேலி சென்று கலெக்டர் முன்பு ஆஜரானர். கலெக்டர் 'நாளைவாயிதா' என்ருர். மறுபடியும் தூத்துக்குடி வந்து வீட்டை அடைந்தார் பிள்ளை. பையன் கோபித்துக்கொண்டு அழுதான். அவனை ஆதரவுடன் எடுத்து ஆறுதல் கூறினர் பிள்ளையவர்கள். மறுநாள் அந்தப்பையனுடன் கோர்டுக்குப் போனர். கலெக்டர் உட்கார்ந்திருந்தார். கலெக்டருக்கு எதிரில் 'வந்தேமாதரம்' என்று எழுதியிருந்தது. கண்டார் கலெக்டர், கொண்டார் கோபம். 'யாரிது எழுதியது' என்ருர். அழிக்கும்படி ஆர்டர் செய்தார். மறுநாள் வாயிதா என்று சொல்லிவிட்டு எழுந்து போய்விட்டார். பிள்ளையவர்கள் வெளியே வந்து, பல நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்து விட்டு, வக்கீல் சாது கணபதிபந்துலு வீட்டையடைந்தார். அன்புடனே பந்துலு அன்னம் அளிக்க, மகனுடனே அருந்திவிட்டு, அடுத்த மாடியில் படுத்து உறங்கினர் பிள்ளையவர்கள். மறுநாள் பகல்

பன்னிரண்டு மணிக்கு சிவா, பத்மநாப ஐய்யங்கார், பிள்ளையவர்கள் ஆகிய மூவரும், பந்துலு, மகாதேவன், சிவராமகிருஷ்ணன் ஆகிய மூன்று வக்கீல்களுடன் கலெக்டர் விஞ்சு துரை முன் ஆஜ ரானார்கள்.

"நீங்கள் மூவரும் செய்த செயல் தேசத்தின் நல்ல நிலைமையைக் கெடுக்கும்படியாக விருக்கிறது. அதனால் நாட்டிற்குத் தீங்குவருவதாக எனக்குத் தெரிகிறது. நீங்கள் மூவரும் நல்ல நடவடிக்கைக்கு ஜாமீன் தரவேண்டும்" என்று கலெக்டர் விஞ்சு துரை கூறினார். அகம்பாவமும் அதிகாரமும் இருக் கும்போது இம்மாதிரியெல்லாம் ஏன் செய்யமாட் டார்கள் வெள்ளையர்கள்!

"ஐயா! எங்கள் பேரில் நல்ல எண்ணம் இல்லா மல், இன்று எங்களைச் சிறையில் தள்ள வேண்டும் என்று நினைக்கிறீர்கள். அதற்காகவே இப்படிப் பட்ட வார்த்தைகளைச் சொல்லுகிறீர்கள். ஆகை யால் எல்லாக்காரியங்களையும் செய்யவல்ல செல்வத் திலும் உயர்ந்த ஜாமீனைக் கொடுக்கச் சம்மதிக் கிறோம். ஆனால் எங்கள் வழக்கை இந்தக் கோர்ட்டில் விசாரிப்பதைக் காட்டிலும் வேறு கோர்ட்டில்விசா ரித்தால் நல்லது என்று கருதுகிறோம். அதனால் வழக்கை அடுத்த கோர்ட்டுக்கு மாற்றும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்" என்று எழுதி சிதம்பரனார் கலெக் டரிடம் கொடுத்தார்.

"வழக்கு முடியும் வரை காத்திராமல் அரை குறையாகவிருக்கும்போதே சிறையிடலாம் என்று சட்டம் இருப்பதால் சிறையில் நீங்கள் இருங்கள். வாயிதாப் போட்டிருக்கிறேன்" என்று கலெக்டர் சொன்னார்.

"ஐயா! நாங்கள் கொடுத்த ஜாமீனை ஏற்றுக் கொள்ளவில்லையா" என்று கேட்டார் பிள்ளையவர்கள்.

"நீங்கள் எழுதிக்கொடுத்தது உங்கள் குற்றத்தை ஒப்புக் கொள்ளாததுடன் மறுப்பதாகவிருக்கிறது. ஆகையால் ஜாமீனை ஏற்கமுடியாது. சீக்கிரமாகச் சிறைக்குச் செல்லுங்கள்" என்று கலெக்டர் சொன்னார்.

நிபந்தனை ஏதும் இல்லாது ஜாமீன் தருவதாய்த் தாமதமில்லாமல் எழுதிக் கலெக்டர் கையில் கொடுத்தார் பிள்ளையவர்கள். இதற்கிடையில் அநேகம் போலீசார் மேடைக்குவந்தனர். பதில் கூறும்படி கலெக்டரைச் சிதம்பரனார் கேட்டார். கலெக்டர் பதில்கூறமுடியாது தத்தளித்தார். போலீஸ் இன்ஸ்பெக்டர் 'செல்லுக பேசாது' என்று உத்திரவிட்டார்.

"நாங்கள் கலெக்டரிடம் மனுக்கொடுத்தோம். அதற்குப் பதில் கலெக்டர் இன்னும் கூறவில்லை. அதற்குள் போலீசார்வந்து, 'செல்லுங்கள் சிறைக்கு' என்றனர். ஆகையால் போகிறோம்" என்று அங்கு உட்கார்ந்திருந்த பெரியவர்களைப் பார்த்துப் பிள்ளையவர்கள் சொன்னார்கள். பெரியவர்கள் கூட்டத்திலிருந்த சுந்தரராஜன் என்பவர் பக்கத்திலிருந்தவர்களிடம், 'சிதம்பரம பிள்ளை முகத்தின் தேஜஸைப் பாருங்கள்' என்று சொன்னார். தன்னிடமுள்ள மூத்தபுதல்வனை, அவன் தாயிடம் சேர்க்கும்படி சிதம்பரனார் சொல்லிவிட்டுத் தெற்குவழியில் இறங்கித்தெருவை அடைந்தார். கலெக்டர் கூப்பிட்ட

தாகச் செய்திவந்தது. திரும்பி மேடைக்குவந்தனர் மூவரும். "நீங்கள் மனுக்கொடுத்தது வாயிதாப் போட்டபின்பே. ஆகையால் உங்கள் ஜாமீனை அங்கிகரிக்கமுடியாது" என்று கலெக்டர் சொன்னார்.

மூவரும் வெளியில் வந்தார்கள். போலீசார் வந்தனர். 'சிறைக்குச் செல்லலாமா' என்று கேட்டார்கள். 'சரி' என்றார்கள் மூவரும். வண்டியில் ஏறினார்கள். மக்களில் பலபேர் வந்து கூடினர். அவர்களையெல்லாம் இருக்கும்படி கேட்டுக்கொண்டார் பிள்ளையவர்கள். பாளையங்கோட்டைச் சிறையில் வண்டி சென்று நின்றது. மார்ச்சு 12உ சிறைக்குள் புகுந்தன மூன்று சிங்கங்கள்.

---

7. கொந்தளிப்பும் அந்தமான் தண்டனையும்

சிறையுள்ளே சென்றதும் பரிசோதனை நடந்தது. "நீங்கள் மூவர் வந்திருக்கிறீர்கள். நீங்கள் மூவரும் நல்லமுறையில் நடந்துகொள்ள வேண்டும்" என்று ஜெயிலர் அறிவுரை கூறினார். 'நல்லது' எங்கள் மூவருக்கும் சொந்த உணவு வேண்டும். அனுமதியுங்கள், என்று கேட்டார் பிள்ளையவர்கள். சிறை சூப்பிரண்டெண்டைக் கேட்டுக்கொள்ளும்படி ஜெயிலர் சொல்லிவிட்டார். சூப்பிரண்டெண்டைப் பார்க்கப் பிள்ளையவர்கள் சென்றார். அவரைக்கண்டதும், 'நீர் கைதியாகக் காணப்படவில்லை' என்று சூப்பிரண்டெண்டு சொன்னார். 'ஆம் உண்மை' என்றார் பிள்ளை. 'சொந்த உணவுவேண்டும்'

என்றார்பிள்ளை. மிகுந்தகோபத்தோடு ஏறவும்இறங் கவும் பார்த்தார் சூப்பிரண்டெண்டு. பிள்ளையவர் களும் அஞ்சாது அப்படியே பார்த்து, 'சொந்தஉண வுக்கு என்ன சொல்லுகிறீர்கள்' என்றார். 'சரி, போம்' என்றார் சூப்பிரண்டெண்டு. சொந்த உணவு சிறைக்குள் வந்தது. பிள்ளையவர்கள் நன்றாய் உண் டார். சிவா சிறிது உண்டார். பத்மநாப அய்யங்கார் உண்ணவில்லை.

தேசபக்தர்கள் மூவரும் சிறையில் அடைக்கப் பட்ட செய்தி காட்டுத்தீபோல் கடும்விசையில் திரு நெல்வேலி எங்கும் பரவிற்று. மக்கள் பொங்கி எழுந்தனர். சர்க்கார் காரியாலயங்கள் எல்லாவற் றையும் மக்கள் புகுந்து தீவைத்துக் கொளுத்தினர். இதையறிந்த கலெக்டரும் போலீஸ்சூப்பிரண்டெண் டும் விரைந்து சென்றனர். போலீஸ் ஸ்டேஷன் ஒன்று கொளுத்தப்பட்ட செய்தியறிந்து கடும் கோபம் கொண்டனர். கலெக்டர் தம் கைத்துப்பாக் கியால் சுட்டார். நால்வர் இறந்தனர். மூவர்படு காயப்பட்டனர். வலம்புலியம்மன் கோவில்பையன் ஒருவன் வீதியில் வந்தான். கையிலிருந்த தேங்காய் தவறி வீழ்ந்தது. அதை எடுக்கக் குனிந்தான். அவ் வளவுதான். பையன் மாண்டான், கலெக்டரின் கைத் துப்பாக்கியின் குண்டால். ரொட்டிக் கடைப் பையன் ஒருவன் கடையைப் பூட்டிச் சாவியுடன் கிளம்பினான். கலெக்டரால் சுட்டுக் கொல்லப் பட்டான்.

மூன்று நாள் குழப்பம் தொடர்ந்து நடந்தது. கல்லடிபட்டு இன்ஸ்பெக்டர் மண்டை காயத்தை ஏற்றது. கலெக்டருக்கும் சிறிது காயம் ஏற்பட்டது. வீதிவிளக்குகள் எல்லாம் சின்னாபின்னப் பட்டுக்

கிடந்தன. பலகட்டிடங்கள் பழுதுபட்டன. சர்ச் மிஷன் கல்லூரிக்குள் ஒருகூட்டம் புகுந்தது. தலைமையாசிரியரை 'வந்தேமாதரம்' என்று சொல்லும்படி வற்புறுத்தியது. தலைமையாசிரியர் பெயர் ரெவரெண்டு ஷாப்டர் என்பதாகும். அவரும் மூன்று முறை 'வந்தேமாதரம்' என்று சொன்னார். நகரம் முழுதும் கடைகள் அடைக்கப்பட்டன. தேசபக்தர்கள் ஊர்வலங்கள் வந்தனர். பொதுக் கூட்டங்கள் நடத்தினர். தொழிலாளர்கள் ஊர்வலம் வந்தனர். 'அன்பர்கள் சிறைக்குள்ளே அடைபட்டுக்கிடக்கின்றனர். ஆகவே கடைகளை அடையுங்கள்' என்று சொல்லி மாணவர்கள் ஒன்று திரண்டு மிகவும் பலத்தோடு ஊர்வலம் வந்தனர். பொதுக் கூட்டங்கள் நடத்தினர்.

தூத்துக்குடியிலும் செய்தி தெரிந்தவுடன் கலகம் உண்டாயிற்று. மக்கள் மனம் கொந்தளித்தது. ஆஷ்துரை மக்களைத் தடியால் அடிக்கும்படி செய்தார். வெடியாலும் சுட்டார். குதிரையால் மிதிக்கச்செய்தார். குதிரையைத் தள்ளிவிட்டார்கள் மக்கள். அப்போது ஆசுதுரை ஓட்டம்பிடித்தார். சப்இன்ஸ்பெக்டர்கள் அட்டகாசம் புரிந்தனர். மக்கள் பொங்கி எழுந்து அடித்தார்கள், மிதித்தார்கள். சுட்டவெடிகளைத் தூளாக்கிக் குவித்தனர். தூத்துக்குடியில் வாழ்ந்த வெள்ளையர்கள் அஞ்சி ஒடுங்கி அறைக்குள் கிடந்தனர். இந்தச் செய்திகள் எல்லாம் சிறையில் இருந்த மூவருக்கும் தெரிந்தது. எல்லாம் கடவுள் செயல் என்று மூவரும் இருந்தனர்.

ஒருநாள் மாலை சிப்பாய்கள் மூவரின் உடலையும் பாதுகாப்பதற்காகச் சிறைக்குள்ளே போயினர். 'நீங்கள் மூவரும் சர்க்காரைக் கவிழ்க்கச் சதிசெய்கிறீர்கள் என்று சென்னைக் கவர்னருக்குத் தந்தி போயிருக்கிறது. சிலநாளில் நீங்கள் நாடுகடத்தப் படுவீர்கள்' என்று அவர்கள் கூறினர். செய்தி சொன்னதற்காக வந்தனம் கூறி மூவரும் இருந்தனர். ஒருநாள் திடீரென்று ஜெயிலரும் பன்னிரு வார்டரும் சிதம்பரனார் அறையினுள்ளே நுழைந்தனர். நாலாபக்கமும் பலவற்றையும் பார்த்தனர். பிள்ளையவர்கள் ஒரு திண்ணையில் உட்கார்ந்திருந்தார். 'நாங்கள் கீழே நிற்க நீர் திண்ணையில் எப்படி உட்கார்ந்திருக்கலாம்' என்று கேட்டார் ஜெயிலர். 'இங்கிருந்து போக உத்திரவு வரவில்லை. ஆகையால் உட்கார்ந்திருக்கிறேன்' என்றார் பிள்ளை. கோபத்தோடு ஜெயிலர் சென்றார். சிரித்தார் பிள்ளை. நின்றார் ஜெயிலர்; கண்விழித்துப்பார்த்தார்; கருத தெரிய நினைத்தார்; கடும்வேகத்துடன் போயினார். பின்பு மனம்மாறி, அறைக்கு வந்து வேண்டிய உதவிகளை எல்லாம் மூவருக்கும் செய்து கொண்டு வந்தார் ஜெயிலர்.

சிறையிலிருந்த மூவருக்கும் அரிகரபுத்திரன் என்பவர் உணவு கொடுத்து வந்தார். அம்மாதிரி உணவு கொடுத்தற்காக அவருக்குச் சிறைத் தண்டனை கிடைத்தது. அதன் பின்பு சிதம்பரம்பிள்ளையவர்களின் குடும்பத்தார் அங்கு வந்திருந்து சிறைக்குஉணவு கொடுத்தனுப்பினர். அத்துடன் வாரம் ஒருமுறை குடும்பத்தார்கள் சிறைக்குவந்து

கண்டுபேசிப் போயினர். பிள்ளையவர்களின் மகன் உலகநாதன் என்பவர் ஐந்து வயதினராயிருக்கும் போது பல பாலகரைக் கூட்டி வைத்துக்கொண்டு, 'இது நமது தேசம், இதிலுள்ள பொருள்கள் எல்லாம் நம்முடையன. வெள்ளையரை வெளியேறச் செய்யுங் கள்' என்று பிரசங்கம் செய்வதைக் கண்டவர்கள் 'புலிக்குப் பூனைபிறக்குமா' என்று சொல்லி அதி சயப்பட்டுச் சென்றனர்.

சிறையிலுள்ள கன்விக்ட்டு வார்டரும் கன் விக்ட்டு ஓவர்சீயரும் தண்டனையடைந்த கைதிகளைக் கடுமையாக அடித்தனர். அச்செயலைக் கண்டித்துக் கூறினர் மூவரும். அதிலிருந்து அச் செயலை நிறுத் தினர். தூத்துக்குடியில் பலர் கலகம் செய்தனர் என்று சிலரைத் தண்டித்தும் வாயிதாப் போட்டும் ஜெயிலுக்குள்ளே அனுப்பினர். தச்சநல்லூரில் தீ வைத்தனர் என்று அநேகம் பேரைச் சிறை யினுள்ளே தள்ளினர். கலகக்காரர்கள் என்று சிறையினுள்ளே தள்ளப்பட்டவர்கள் சிதம்பரம் பிள்ளையவர்களைக் கண்டு சிறையில் இருப்பதாகக் கூடக் கருதாமல் மகிழ்ச்சியுடன் இருந்தனர்.

கலெக்டர் விஞ்சுதுரை மூவருக்கும் ஜாமீன் தர மறுத்ததை ஜில்லா ஜட்ஜியிடம் கேட்க வக்கீல் சாது கணபதிபந்துலு ஆஜரானர். ஜில்லா ஜட்ஜும் ஜாமீன் தர மறுத்துவிட்டார். அச்செய்தியைச் சிறை யிலிருந்த மூவருக்கும் தெரிவித்தார். அதன் பின்பு அந்த வக்கீல்பந்துலு சென்னைசென்று ஐக்கோர்ட்

டில் பேசத்தகுந்த ஒரு பெரிய வக்கீலை அமர்த்தி ஜாமீனுக்கு முயற்சிசெய்தார். சென்னையிலுள்ள பல நண்பர்கள அதற்கு உதவி செய்தனர். ஐக்கோர்ட்டு வக்கீல் வெள்ளிக்கிழமை விரிவாகப் பேசினார். தெளிவடைந்த அறிவுடைய ஐக்கோர்ட்டு ஜட்ஜி ஜாமீன் தந்தார். ஆர்டர் திருநெல்வேலிக்கு அனுப்பப்பட்டது. திங்கட்கிழமை ஜில்லா ஜட்ஜி முன் வக்கீல் ஐக்கோர்ட்டு ஆடரைக் குறிப்பிட்டார். அந்த உத்திரவுப்படி உடனே மூவரையும் விடுதலை செய்யும்படி உத்திரவிட்டார் ஜில்லா ஜட்ஜ். உத்திரவு சிறைக்கு வந்துசேர்ந்தது.

சென்னை உத்திரவு வந்து ஜில்லா ஜட்ஜி விடுதலை செய்யும்படி உத்திரவிட்டதைச் சிறையதிகாரிகள் மறுநாள்வரை மறைத்து வைத்திருந்தனர். இதற்கிடையில், ஜில்லாக்கலெக்டர் கவர்னருக்குத் தந்தியனுப்பினார். "சிவாவும் சிதம்பரமும் இருக்கும் வரை ஆங்கிலேயர் அரசாங்கம் நடவாது. இவர்களை எப்படியாவது ஒழித்துக்கட்ட வேண்டும். இவர்கள் இருவரும் திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் பேசியது இராஜத்துவேசம் என்று வழக்குத்தொடுக்கிறேன். அனுமதி தரவேண்டும்''—என்பது தந்தியின் சாரம். சென்னை உத்திரவுப்படி ஜில்லாஜட்ஜி விடுதலைசெய்யும்படி திங்கட்கிழமை உதகிரவிட்டார். அன்றே இராஜநிந்தனைப் பிராது கொடுக்கப்பட்டது. வாரண்டு உடனே வெளியாயிற்று. வாரண்டுடன் போலீசார் சிறைக்கு வந்தனர். மூவரையும் பார்த்து, "ஜாமீனில் விடும்படி இன்னும் உத்திரவு

வரவில்லை. காலை வரலாம் என்று கருதுகிறேன். வந்ததும் நீங்கள் போகலாம்" என்று சிறையதிகாரி பிள்ளையிடம் சொன்னார். போலீசார் போயினர். மறுநாள் செவ்வாய்க்கிழமை மூவரையும் விடுதலை செய்தார். வெளியில் வரவேற்கச் சிறப்புக்கள் நின்றன.

கதியுடன் ஓடும் குதிரைகள் பூட்டிய இருவண்டிகள் சிறைவாசலில் காத்து நின்றன. வாரண்டைக் காட்டி வண்டியில் ஏறச் சொன்னார்கள் போலீசார். சிதம்பரம் பிள்ளையவர்கள் ஒரு வண்டியில் ஏறினர். சிவா மற்றொரு வண்டியில் ஏறினர். பத்மநாம ஐயங்கார் பேரில் வாரண்டு இல்லாததால் அவர் வீடு சென்றார். உடற் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் நால்வர் பக்கத்திலே இருந்தனர். முன்னாலே இரண்டு டிப்டிசூப்பரிண்டெண்டுகள். பின்னாலே ஆறு இன்ஸ்பெக்டர்கள் சைக்கிள் வண்டியில் வந்தனர். வலதுபக்கம் ஆறு ஏட்டுகள். இடதுபக்கம் ஆறு ஏட்டுகள் நடந்து வந்தனர். எட்டு ரிவால்வர் நாலைந்து துப்பாக்கிகள் ஆகிய அலங்காரத்துடன் வண்டிகள் நகர்ந்தன. சிறிது தூரம் சென்றதும் நண்பர்கள் வந்து மொய்த்தனர். அவர்களைவிலக்கிக் கொண்டு போலீசார் சென்றனர். பன்னிருபோலீஸ் காரர்களும் ஒருஏட்டும் தெருவில் நின்று சலியூட்டுச் செய்தனர். அரசத்துவேசம் பேசினாரைக் கொஞ்ச நேரம் அரசராய் வைத்து மரியாதை செய்வது அரசாங்கத்தின் நியதி போலும் என்று பிள்ளையவர்கள் நினைத்தார்கள். எப்படியிருந்தாலும் அன்று அரசராய் இருந்ததற்காக அகமகிழ்ந்தார் பிள்ளை

யவர்கள். பல பல இடங்களிலும் இந்த சலியூட்டு நடந்தது. இந்த ஆடம்பரங்களுடன் கோர்ட்டை அடைந்தனர் இருவரும்.

கோர்ட்டில் அநேகர் கூடியிருந்தனர். அநேக போலீசார் அங்குமிங்கும் உலவிய வண்ணமிருந் தனர். வண்டியை விட்டு இறங்கியதும் பிள்ளை யவர்கள் முன்னால் போலீசார் நடந்தனர். ஜில்லாக் கலெக்டர் விஞ்சுதுரை முன்பு போய்ச்சேர்ந் தனர். கேசை எடுத்து வாயிதாப்போட்டார் கலெக் டர்துரை. திரும்பவும் அந்த ஆடம்பரங்களுடன் சிறைக்குப் போயினர். மறுநாள் விஞ்சுதுரை முன்பு சென்றனர். "வாலேஸ் துரை என்பவர் ஜில்லா உதவி மாஜிஸ்திரேட்டாக வந்திருக்கிறார். அவரிடம் இக்கேசை நடத்திக்கொள்க" என்று விஞ்சுதுரை சொன்னார். பிள்ளையவர்களுக்காக் வக்கீல் கணபதிபந்துலு, வக்கீல் மகாதேவன், வக் கீல் சிவராமகிருஷ்ணன் மூவரும் ஆஜராயிருந்தனர். சர்க்கார்தரப்புக்கு வக்கீல் பவுல் எனபவரும வககீல் ரிச்மண்டு என்பவரும் சென்னையிலிருந்து வந்து ஆஜராயிருந்தனர். இதற்கிடையில், பிள்ளையவர்கள் மூவருக்கும் சிறை கொடுத்தது தவறு என்றும் அதற்கு அதிகாரமில்லை என்றும் ஐக்கோர்ட்டி லிருந்து உத்திரவு வந்தது. ஜாமீன்கேசு தொலைந் தது. நிந்தனைக்கேசு நின்றது.

வாலேஸ் துரை நிந்தனைக்கேசைத் தொடர்ந்து பலநாள்விசாரித்து கமிட்செய்தார். அதாவது மேல் கோர்ட்டு விசாரித்து முடிவுசெய்யவேண்டும் என் பது அது. ஃபின்ஹே (Phinhey) என்பவர் அடி ஷனல் செஷன்ஸ் ஜட்ஜாக வந்தார். அவர் கேசை

விசாரிக்க வேண்டியவரானார். பிள்ளையவர்களுக்கு வக்கீல்கள் சடகோபாசாரியார், நரசிம்மாசாரியார், வெங்கடாசாரியார் என்ற மூவரும் ஆஜரானார்கள். சிவாவுக்காக கௌடல் என்ற வக்கீல், கணபதி பந்துலு, பீட்டர் என்ற மூவரும் ஆஜராயினர். சர்க்கார் தரப்பிற்கு பவுல், ரிச்மண்டு என்ற இரு பாரிஸ்டர்களும் ஆஜராயினர். கேசு நியாயமாக நடத்தப்படவில்லை. இந்தக் கேசில் வாதி சர்க்கார். வழக்கை விசாரிப்பவரும் சர்க்கார். எப்படி நீதியாக விசாரிக்க முடியும்? சொல்லுவதை எப்படி நியாய மாகக் கேட்க முடியும்? அதனால், நியாயமாகவும் எழுதப்படவில்லை. நியாயமற்றதை ஏன் செய் கிறீர்கள் என்று யார் கேட்பது? பல சாட்சிகள் உண்டாகப்பட்டு வந்து, சாட்சிகூறினர். வழக்கை விசாரித்தபின்பு ஜூலை மாதம் 7-ந்தேதி தீர்ப்புக் கூறுவதாக நீதிபதி ஃபின்ஹே கூறினார்.

ஜூலை மாதம் 7-ந்தேதி காலையில் சிதம்பர னாரின் மைத்துனர் பிச்சையாபிள்ளை சிறைக்கு வந்தார். அவருடன் பிள்ளையவர்களின் மூத்தமகனை யும் அழைத்து வந்திருந்தார். மகனைக் கண்டவுடன் பிள்ளையவர்கள் எடுத்து மடியில் வைத்துக் கொண் டார். இருவரும் உரையாடினர்.

"ஐயா! இன்று அம்மை அழுகிறாள்" என்று சொன்னான் சிறுவன்.

"ஐயா, நீயும் அழுதாயா?" என்று கேட்டார் சிதம்பரனார்.

"அழவில்லை. அயலூருக்கு இன்று உங்களைக் கொண்டு போகப் போவதாக மாமா சொன்னார். அது உண்மை தானா?" என்று கேட்டான் பையன்.

"நீ அழுகிறாயா இல்லையா என்று பார்ப்பதற்காக மாமா சொன்னார். அது இருக்கட்டும், நான் அயலூர் சென்றால் நீ அறிவோடு தைரியமாய் இருப்பாயா" என்று கேட்டார் சிதம்பரனார்.

"ஐயா! அழ மாட்டேன். ஆனால் நீங்கள் என்னை விட்டுப் பிரிந்து போவீர்களா?" என்று வினவினான் சிறுவன்.

இதைக் கேட்டதும் பிள்ளையவர்களுக்குக் கண்ணீர் பெருகியது. பையன் கேட்ட கேள்வி புத்திரவாஞ்சையை ஊடுருவிப் பாயச் செய்து விட்டது. சிறிது நேரம் வீரசிதம்பரனார் அழுதார். கண்ணீர் வடிந்தது. பையன் கைக்குட்டை கொண்டு துடைத்தான். கண்ணீரைத் துடைத்துக் கொண்டே பையனும் அழுதான். பையனுக்கும் கண்ணீர் தாரை தாரையாக ஓடிற்று. பிள்ளையவர்கள் தேறி, கைக்குட்டையை எடுத்துப் பையன் கண்ணீரைத் துடைத்தார். நெஞ்சோடு அவனைச் சேர்த்து, "யார் அழுதாலும் நீ அழாதே" என்று சொன்னார். "நான் அழமாட்டேன்" என்றான் பையன். சிறிது நேரம் கழித்து இருவரும் பிரிந்தனர். பையனை எடுத்துக் கொண்டு பிச்சையாபிள்ளை சிறையை விட்டுப் போனார்.

மணியாயிற்று. வழக்கப்படி இரு வண்டிகள் வந்து நின்றன. இருவரும் வழக்கப்படி ஏறினர். வண்டிகள் நகர்ந்தன. கோர்ட்டை அடைந்தன.

இருவரும் இறங்கினர். நீதிபதி ஃபின்ஹே முன் போயினர். அவர் பற்பல நாளாக எழுதிய தீர்ப்பைச் சில மணி நேரம் படித்தார். அவர் தீர்ப்பின் சாரம்:-

"சிதம்பரம்பிள்ளை தொழில் அபிவிருத்திக்குப் பாடு படுபவரல்ல; அவர் அப்படி நடிக்கிறார்; ஆங்கிலேயருக்கும் இந்தியருக்கும் சாதிப் பகையை உண்டாக்குகிறார் என்பதை மறுக்கமுடியாது; சிதம்பரம் பிள்ளை பெரிய இராஜத் துரோகி; அவருடைய ஒவ்வொரு எலும்பும் இராஜத்துவேசம் செய்வன; சிவா அவரது கைப்பொம்மை; திருநெல்வேலிக் கலகத்திற்கு இவர்கள் தான் முக்கிய பொறுப்பாளிகள்.

"ஆங்கிலேயர்கள் இந்தியாவில் இருக்கக் கூடாது என்பது தான் சிதம்பரம் பிள்ளையின் எண்ணம். ஆகவே தேச விடுதலைக்கு மக்களைத் தயார் செய்கிறார். ஆங்கிலேயர்களை வெறுக்க மக்களுக்குப் பல வழிகள் கற்பிக்கிறார். கோரல்மில் வேலை நிறுத்தத்தை உண்டாக்கியவரும் இவரே.

"இந்தியருக்கு வாக்குரிமை இல்லாததால் இந்தியாவில் அரசியல் பேசக்கூடாது. சர்க்கார் சட்டம் இயற்றினால், அதை மாற்றவோ திருத்தவோ மக்களுக்கு அதிகாரமில்லை. ஏனெனில் வாக்குரிமையில்லை. ஆனால் இந்தியர்கள் கூடி சர்க்காருக்கு வேண்டுகோள் அனுப்பலாம். அதைக் கவனிக்க வேண்டும் என்பது நியதியில்லை. அதிகாரிகள் விரும்பினால் கவனிக்கலாம். விரும்பா விட்டால் கவனிக்க வேண்டியதில்லை.

"இங்கிலாந்தில் அரசியல் பேசுகிறவன் மக்களைப் பார்த்துப் பேசுகிறான். மக்களுக்கு வாக்

குரிமை உண்டு. தேர்தலில் தன்னை ஆதரிக்கும்படி பேசுவான். அவர்கள் விரும்பினால் ஆதரிப்பார்கள். இந்திய மக்களுக்கு வாக்குரிமையில்லை. திருநெல் வேலியிலும் தூத்துக்குடியிலும் பேசப்பட்டது எதற் காக? வாக்குரிமை பெறுவதற்காக அல்ல. மக்கள் சக்தியை உபயோகிக்கத்தான். மக்களுக்குள்ள உடற்பலத்தைப் பயன் படுத்தத் தூண்டுவது மகா அபாயம்.

"அன்னிய சாமான்களை வாங்கக் கூடாது என்று மக்களிடம் பேசலாம். ஆனால் சாதாரண மக் களிடம் இதைக் கூறினால் அவர்கள் அத்துடன் நிற் பார்களா? குழப்பமும் கலகமும் செய்வார்களல் லவா? அரசாங்கத்துடன் ஒத்துழைக்கக் கூடாது என்று பேசப்பட்டது. இது அபாயம். இது இராஜத் துரோகம்.

"ஆகவே, சிவா அரசியல் துவேஷ பிரசங்கம் செய்ததற்காக பத்து வருடம் சிறைத் தண்டனை கொடுக்கிறேன். அந்தப் பத்து வருடத்தையும் அந்தமான் தீவில் கழிக்க வேண்டும். சிதம்பரம் பிள்ளை சிவாவுக்கு உதவி செய்தது தவறு. பேசு வதைக் காட்டிலும் பேசுவதற்கு உதவி செய்வது பெருந் தவறு. ஆகையால் இருபது வருடம் அவருக் குச் சிறைத்தண்டனை விதிக்கிறேன். திருநெல்வேலி யில் சிதம்பரம்பிள்ளை ஒரு பிரசங்கம் செய்தார். அதற்காக இருபது வருடம் சிறைத்தண்டனை விதிக் கிறேன். தண்டனையை அந்தமான் தீவில் அனுப விக்க வேண்டும்."

இதுதான் தீர்ப்பு. இக்கொடிய தீர்ப்பைக் கேட் டவுடன் கற்றவர்களும் கலங்கினார்கள். மற்றவர்களை

என்ன சொல்வது. ஆனால் சிதம்பரம்பிள்ளை நகைத்தார். நகை நான்கு வகைப்படும். பிறரை இகழ்ந்து நகைப்பது; பிறர் இளமையைக் கண்டு நகைப்பது; பிறர் பேதைமையைக் கண்டு நகைப்பது; பிறர் மடமையைக் கண்டு நகைப்பது. என்று உண்டு இங்கே சிதம்பரம் பிள்ளையவர்கள் அரசியலாரின் மடமையைக் கண்டு இகழ்ந்து நகைத்தார்.

தென்னிந்தியாவில் சிதம்பரனார் தண்டிக்கப் பட்டார். அதே சமயத்தில் வடஇந்தியாவில் திலகர் தண்டிக்கப் பட்டார். 'கேசரி' என்ற பத்திரிகையில் அரசியல் துவேஷமான கட்டுரையொன்று திலகர் எழுதினார் என்று ஆறு வருடம் சிறைத்தண்டனையும் அதை அந்தமானில் அனுபவிக்க வேண்டும் என்றும் பத்தாயிரம் ரூபாய் அபராதம் கட்ட வேண்டும் என்றும் தீர்ப்புக் கூறப்பட்டது.

தமிழ் நாட்டிலே சிதம்பரம்பிள்ளை தண்டனையடைந்தார். வடநாட்டிலே லோகமான்ய பாலகங்காதர திலகர் தண்டனை யடைந்தார். இருபெருங் கொடுந் தண்டனையால் தமிழ்நாடு மட்டுமல்ல, தென்நாடு மட்டுமல்ல, வடநாடு மட்டுமல்ல, இந்தியாவே துக்கத்தில் மூழ்கியது. இந்தியா பேரதிர்ச்சியடைந்தது.

போலீசார் வந்தனர். சிறை வாரண்டைப்பெற்றனர். இருவரையும் அழைத்துக் கொண்டு சிறைக்குச் சென்றனர்.

8. சிறை

அஞ்சா நெஞ்சம் படைத்த அண்ணல் சிதம்பரனார் கொஞ்சமும் வருந்தாமல் சிறைக்குச் சென்றார். வழியில் தந்தையைக் கண்டார். 'கவலை கொள்ளாதீர்கள்' என்று கூறினார். 'நீயும் கவலை கொள்ளாதே. கடவுள் இருக்கிறார்" என்று தந்தை தைரியம் கூறினார். சிறையினுள்ளே இருவரும் சென்றனர். டிப்டிஜெயிலரும் மற்றுமுள்ளாரும் வந்து அழுதனர். எல்லோருக்கும் தேறுதல் சொன்னார் பிள்ளையவர்கள்.

சிறையைப் பற்றிச் சில பொதுச் செய்திகள் இங்கே கூறுவோம்:-

தண்டித்த அதிகாரிகள் வாரண்டைக்கொடுத்து கைதிகளைப் போலீசாரிடம் ஒப்படைத்து விடுவார்கள். போலீசார் கைதிகளைச் சிறைக்கு அழைத்துக் கொண்டு போவார்கள். அங்குப் போனவுடன் எங்குப் பார்த்தாலும் கதவு பூட்டப் பட்டிருக்கும். ஒவ்வொரு கதவுக்குப் பக்கத்திலும் ஒவ்வொரு மனிதன் நிறுத்தப்பட்டிருப்பான். யார் வந்தாலும் போனாலும் சிறைக் கதவு திறந்து விடப்படும்; போகும் போதும் வரும் போதும் எண்ணிக் கொள்ளவும் படும். ஒருவரோ ஒரு கூட்டத்தாரோ வந்தவுடனே அல்லது போனவுடனே கதவு மூடி விடப் படும். அடுத்தவர் தயாராக இருந்தாலும் கதவு மூடித்தான் பின்பு திறந்து எண்ணிக்கொண்டு அனுப்பப் படும். இந்தக்காட்சிகளை முதன் முதலில் சிறைக்குப் போகிறவர் கவனிக்கவேண்டியது வந்துவிடும். இது சிறை நிர்வாகத்தில் மாறாத வேலை; இதில் சலிப்போ சோம்பலோ கூடாது; நடக்கவும் நடவாது.

சிறையில் ஒரு கைதியைப் புகுத்துவதற்கு முன் அங்க அடையாளங்கள் முதலியவைகளைக் குறித்துக் கொண்டு, வாரண்டை வாங்கிக்கொண்டு, உணவுக்கு உள்ளே உத்திரவு அனுப்பிவிட்டு, 'அவுட் குவாரண்டின்' என்ற அனுபோகப்படுத்தும் சிறைக்கு அனுப்புவார்கள். ஒரு கைதி, சிறையில் அனுபோகப்படுவதற்கு முன்மாதிரியான இடம் அது. ஒரு வாரம் அந்த 'அவுட் குவாரண்டினில்' ஒரு கைதி அனுபோகப்பட வேண்டும். அதன் பின்பு அவன் 'கமான்' எடுக்கப்படுவான் அல்லது உள்ளே சிறையின் பிளாக்குகளுக்கு மாற்றப் படுவான். 'கமான்' என்பது ஒரு சிறையிலிருந்து மற்றொரு சிறைக்கு கைதிகளை மாற்றுவது. அந்த மாற்றலைத் தான் சிறையில் 'கமான்' என்று கூறுவார்கள்.

சிறையில் நுழைந்தவுடன் கைதி சிரை மயிர் வைத்துக் கொள்ள முடியாது. மழுங்கச் சிரைத்து விடவேண்டும். இது சிறைச்சாலையின் சட்டம். 'அவுட் குவாரிண்டினில்' தனி அறைகள் அநேகம் இருக்கும். ஒவ்வொன்றிலும் இருவர், மூவரை இட்டுப் பூட்டி வைப்பார்கள். உணவு உண்ணத் தட்டு ஒன்றும் தண்ணீர் பருகக் குவளை ஒன்றும் தரப்படும்.

உள்ளே 'பிளாக்கு' களில் வசிக்கும் முறைகளைக் கவனிப்போம். ஒரு 'பிளாக்கில்' 50, 60 பேர் இருக்க இடம் உண்டு. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திண்ணை செமண்டினால் கட்டப்பட்டிருக்கும். குவளையும் தட்டும் கைதிகளின் உடமை. திண்ணையில் விரித்துக் கொள்ள சாக்குப்பாய் ஒன்றும் போர்த்திக் கொள்ள கம்பளிப் போர்வை ஒன்றும்

வழங்கப்படும். இவற்றை உபயோகிப்பதற்கு முழுச் சுதந்திரம் உண்டு. வேஷ்டிகளை கட்டிக் கொள்ளவும் சட்டைகள் அணிந்து கொள்ளவும் அங்கு உரிமையில்லை. ஆனல், பாதிக் காற் சட்டை இரண்டும் பனியன் இரண்டும் தொப்பி இரண்டும் துண்டுகள் இரண்டும் கொடுக்கப்படும். தொப்பி அணிந்தால் குரங்கு போல் தோற்றமளிக்கும்.

காலை சரியாக 6 மணிக்கு 'லாகப்' திறக்கப்படும். கைதிகளை இரவு முழுவதும் பூட்டி வைத்திருந்து காலையில் திறந்து விடுவதைத்தான் 'லாகப்' என்று கூறுகிருர்கள். 'லாகப்' திறந்தவுடன் இருவர் அல்லது நால்வர் சேர்ந்து நிற்க வேணடும். அப்படியே வரிசையாக மலங்கழிக்குமிடம் போக வேண்டும். அங்கு நடத்திச் செல்வது ஒரு "கன்விக்ட்" வார்டர். அவர் ஆயுள் தண்டனை அடைந்தவராகவோ அல்லது அதற்குக் குறையாக அதிக வருடம் தண்டனை அடைந்தவராகவோ இருப்பார். அவர் சிறைக்கு வந்து அனுபோகமடைந்து நல்லவர் என்று பெயரெடுத்துவிட்டால், அவரைச் சிறையதிகாரிகள் வார்டராக நியமிப்பார்கள். அவர்களுக்கு மாதத்தில் அணு 8 சம்பளம் கொடுக்கப்படும். அவர் விடுதலை அடையும்போது சேர்ந்த தொகையை அவருக்குக் கொடுத்தனுப்புவார்கள். மாதா மாதம் சம்பளம் பெறும் தண்டனையடையாத வார்டர்களிலிருந்து நீக்க, அவர்களைக் 'கன்விக்ட்' வார்டர் என்று கூறுவார்கள். அவர்களுக்குவெள்ளையுடை கொடுத்திருப்பார்கள். சாதாரண வார்டர்கள் போலீஸ் உடைபோன்ற உடை அணிந்திருப்பார்கள்.

இந்த 'கன்விக்ட்' வார்டர்கள் கம்பொன்றைக் கையிலே பிடித்து, கைதிகளை நடத்திச் செல்லும் காட்சி, ஆடு மாடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்லும் இடையன் கோலத்தை ஒத்திருக்கும். கிருஷ்ண பரந்தாமன் பசுக்களை மேய்த்து, அவற்றைப் பாதுகாத்துவந்த காரணத்தால், கோபாலன் என்று உயரிய பெயரெடுக்கவில்லையா? அது போல, கைதிகளை நடத்தி, மேய்த்து நல்ல பெயர் எடுத்துக்கொள்பவர், 'கன்விக்ட்' வார்டர் என்று பெயரெடுப்பார்.

தண்ணீர்த் தொட்டியிருக்குமிடத்தில் பல்லைத் துலக்கி விட்டுத் தட்டுகளைத் தேய்த்துக் கொண்டு மிக அவசர அவசரமாகத் திரும்பிவிட வேண்டும். ஏனென்றால் 7 மணிக்கெல்லாம் காலை ஆகாரம் தயாராக இருக்கும். எட்டு மணிக்கு எழுந்து கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கும் கனவானாயிருந்தாலும் சரி, சிறைச்சாலையில் ஆறு மணிக்கே எழுந்து காலைக் கடனைக் கழித்து ஏழு மணிக்கு ஆகாரத்தை அருந்திவிட்டு வேலை தொடங்கி விடவேண்டும். "இல்லிக்கு இராஜாவாயிருந்தாலும் பள்ளிக்குப் பிள்ளைதான்" என்று ஒரு தொடர்மொழி கூறுவார்கள். அதுபோல, காலையில் காப்பி குடிக்கும் கனவானாயிருந்தாலும் சிறையில் இதர கைதியைப் போலவே கருதப்படுவார்.

சிறையுணவு எப்படிப்பட்டது? காலை 7 மணிக்கு உணவு கொடுக்கப்படும். மதியம் 11 மணிக்கு ஒரு தடவை உணவளிக்கப்படும். மாலை 5 மணிககு இரவுச் சாப்பாடு. உணவில் இருவிதம் உண்டு. ஒன்று அரிசி உணவு. மற்றொன்று கேப்பை உணவு.

கேப்பை உணவுக்காரர்களுக்குக் காலையில் கூழ் உண்டு. மதியம் களி. அரிசி உணவாளர்களுக்குக் காலை கஞ்சி. மதியம் அளவு சோறு. இரவு இருவர் களுக்கும் சோறு தான். காலைக் கூழுக்கும் கஞ்சிக் கும் ஒரு துவையல் கொடுக்கப்படும். மதியம் கேழ் வரக்கும் சோறுக்கும் ஒரு குழம்பு. அதாவது சாம் பார் போன்றது. அதுவும் அளவாகத்தான் கொடுக் கப்படும்.

சிறைஉணவு தேவாமிர்தமாக இருக்கும் என்று கருதினால் எல்லோரும் சிறைக்கே சென்று விடு வார்கள். சிறைக்குச் செல்லுவது என்பது மிக வும் மனக்கசப்பாக இருக்கும். ஏனென்றால் முதலில் உணவு போதாது. இரண்டாவது கேவலமானதா யிருக்கும். மூன்றாவது உணவு ஆரம்பத்தில் மண மற்று இருக்கும்.

சோற்றையும் களியையும் அளவு கட்டியாக அடித்து, சிறை 'ட்ரே'யில் வைத்து இருவர் எடுத்து வருவார்கள். பத்தடி தூரத்திலிருக்கும் போதே முதன்முதலில் வீச ஆரம்பித்து விடும். கைதிக்கு மன விருப்பமில்லா விட்டாலும் பசியின் கொடுமைக்கு ஆளாகிய உடம்பு அதை வாங்கத் தூண்டும். முதல் நான்கு நாளுக்கு அந்த உணவு பிடிக்காது. அடுத் தவருக்குக் கொடுப்பது சட்ட விரோதம். தானே சாப்பிட முடியாது. ஆகையால் சாக்கடைக்கு சர்வ சாதாரணமாகத் தத்தம் செய்து விடுவார் கைதி. ஒரு வாரம் கழித்து அந்த உணவு அவருக்குத் அமிர்தமாகிவிடும். சிறைக்குள்ளே தின்பதற்கு வேறு ஒன்றும் கிடையாது. கிடைத்தால் தவறு

வழியில் கிடைக்கும். சிறைக்குள்ளே நிற்கும் புளிய மரங்கள் கைதிகளைக்கண்டு மனமிரங்கியளிக்கும் கனிவகைகளும் உண்டு.

காலை உணவு முடிந்தவுடன் வேலைசெய்யப் போய்விடவேண்டும். மாலை 2-30 அல்லது 3மணிக்குத் தண்ணீர்த் தொட்டிக்குச் சென்று குளிக்க அனுமதிப்பார்கள். அப்படிப் போகும்போதும் இருவரோ நால்வரோ சேர்ந்துதான் போகவேண்டும். 'கன்விக்ட்' வார்டர் அழைத்துச்செல்வார். குளித்துத்திரும்பிவந்து சேர நான்குமணியாகலாம். மாலை 5 மணிக்கு இரவுச்சாப்பாடு.

மாலைக் குழம்பில் ஒன்று சொல்லவேண்டும். முழுத் துவரையைக் குழம்பில் போட்டிருப்பார்கள். சிலவற்றில் புழுக்கள் இருக்கும். துவரையைக்கழுவுவதோ கற்கள் பார்ப்பதோ கிடையாது. கொதிக்கும் குழம்பில் புழுத்த துவரையை அப்படியே கொட்டிவிடுவார்கள். புழுக்கள் குழம்பில் கலந்துவிடும். அல்லது துவரையுள்ளேயே யிருந்து மடிந்துவிடும். சிறையில் தாளிப்பு என்பது கிடையாது. ஆனால் ஒன்றுநடக்கும். நல்ல எண்ணெயைக் குழம்பில் கொதிக்கும்போது ஊற்றிவிடுவார்கள். நல்ல எண்ணெய் சிறையிலிருந்து வெளிவருவது மிகப் பிரசித்தமடைந்தது என்று எல்லோருக்கும் தெரியும். அந்த எண்ணெய் புழுவுடன் கூடிய துவரையில்கலந்து உள்ளேயும் புகுந்துகொள்ளும். அந்தத் துவரையையென்றால், நெய்கலந்த உணவின் ருசியைத் தோற்கடித்துவிடும்.

இரவு உணவு முடிந்ததும், மாலை 6 மணிக்கு 'லாகப்' உண்டு. கைதிகள் எல்லோரையும் பிளாக்கு களிலோ தனியறைகளிலோ விட்டுப் பூட்டிவிடுவார் கள். இரவு 9 மணிவரை கைதிகள் பாடலாம், ஆட லாம். இரவு 9 மணிக்குமேல் சப்தம் ஒன்றும் இருக் கக்கூடாது. சிறைச் சட்டத்தை மீறுகிறவர்களுக்குக் கடும் தண்டனைகள் கைமேல் கிடைக்கும்.

ஏதாவது சிறிய குற்றம் தெரிந்தோ தெரியா மலோ செய்துவிட்டால், 'கன்விக்ட்' வார்டரோ, வார்டரோ கடுமையாக அடிப்பார். யாரும் 'ஏன்?' என்று கேட்கமாட்டார்கள். ஒரு கைதி பேரில் அதிகாரிகளுக்கு வெறுப்பு ஏற்பட்டால் போதும், அந்தக் கைதி செக்கிழுத்துச் சாகவேண்டியது தான். தனியறை, இருட்டறை, கால் விலங்கு, கசையடி முதலியன சிறைத் தண்டனைகள்,

அதிகாரிகளின் கோபத்துக்கு ஆளானவர்கள் செக்கிழுப்பார்கள். ஏழு எட்டுபேர் சேர்ந்து மாடு போல் செக்கிழுத்துச் சுற்றுவார்கள். செக்கில் எள் இட்டு எண்ணெய் எடுக்கும்வரை செக்கைச் சுற்றியலைய வேண்டும். வேலை தொடங்கிவிட்டால் கடும் வெயிலாக இருந்தாலும், மழை பெய் தாலும், அந்த வெயிலிலும் மழையிலும் கூட வேலையை விட்டுவிட முடியாது. வெயிலிலும் மழை யிலும் வேலை செய்துதான் தீரவேண்டும். நெற்றி வேர்வையும் உடம்பு வேர்வையும் சாரை சாரையா கச் சென்று நிலத்தில் வழிந்தோடும். களைப்பு உடம்பைக் கட்டி யணைக்கும. சோர்வு துள்ளிவந்து

பிடிக்கும். செக்கிழுத்துச் செல்வதில் ஏதாவது தாமதம் ஏற்பட்டாலோ திட்டுதலோ அடியோ திட்டமாகக் கிடைக்கும்.

இன்று உள்ளதுபோல் அரசியற் கைதிகள் மற்ற கைதிகள் என்னும் பிரிவினை அன்று இல்லை. இப்போது அரசியற் கைதிகளுக்கு மரியாதையுண்டு. அப்போது திருடி, மூட்டையடித்து, 'பிக்பாக்கெட்' அடித்துவந்த பேர்வளிகளுடன் சேர்த்தே சிதம்பரம் பிள்ளையையும் நடத்தினர் சிறை அதிகாரிகள். இப்போது 'ஏ' வகுப்பு, 'பி' வகுப்பு, 'சி' வகுப்பு என்ற மூன்று பிரிவுகள் உண்டு. 'ஏ' 'பி' வகுப்புகள் என்றாலும் சிறைதான். 'சி' வகுப்பில்தான், கொலை திருட்டு முதலிய பாதகத் தொழில் புரிந்த காதகர்களைச் சிறையிடுவார்கள். அதே சிறையில்தான், அன்னிய ஆதிக்கமும் சுரண்டலும் கொடுமையும் மடியவேண்டுமென்று அல்லும் பகலும் உழைத்த தேசபக்தர்களை இடுவது அன்னியக் கொடுங்கோலின் ஆட்சியா யிருந்தது.

சிறைச்சாலையில் புகுந்துவிட்டால் ஓரிருநாள் கழித்து சிறை டாக்டர் வந்து கைதியை நிறுத்து எடையை ஒரு அட்டையில் குறித்துவைப்பார். இப்படி எடைபோடுவது சிறையில் அடிக்கடி நடக்கும். சிதம்பரம்பிள்ளை கோயம்புத்தூர், கண்ணனூர் சிறைகளில் தனது தண்டனையைக் கழித்தார். அவர் சிறையில் புகுந்ததும் நிறுத்தார்கள். பின்பு அவர் சிறையில் பல அல்லல்களுக்கு ஆளானார். ஆறுமாதம் கழித்து நிறுத்ததில், முதலில் நிறுத்ததில் ஐந்தில் ஒருபங்கு எடை இருந்தார். அவருக்கு ஆரம்பத்தில் கேப்பைப் படிதான் போட்டார்கள்.

நல்ல உணவுண்டு நாளும் மகிழ்ந்த சிதம்பரம் பிள்ளை கேப்பை உணவுண்டு தன் உடம்பைக் கேட்டிலே மாட்டி விட்டார். கல்லும் மண்ணும் கலந்த அந்தப் பொல்லா உணவு கண்டவர் கதி கலங்கும் படி சிதம்பரம்பிள்ளையைச் சிறுத்து விட்டது.

திங்கட் கிழமைதோறும் கைதிகளைக் காலையில் வரிசையாக நிறுத்தி, சிறையின் மேலதிகாரிகள் பார்வையிடுவார்கள். அதில் சிறையதிகாரிகள் எல்லோரும் வருவதுடன் ஜில்லா மெடிக்கல் ஆபீசரும் வருவார். அவர்களைப் பின்தொடர்ந்து சிறைப் பட்டாளங்கள் வரும். அது கைதிகளின் மேல் படை எடுப்பை நடத்துவது போலிருக்கும். பார்ப்பதற்கு முதன் முதல் பயமாயிருக்கும். பழகப் பழகச் சரியாய்ப் போய்விடும். ஆனாலும் ஏதாவது வாய்திறந்து கேட்பதற்கு அப்போது எவருக்கும் துணிவேற்படாது. அந்தவேளையில் தான் கைதிகள் தங்கள் குறைகளைக்கூறித் தேவைகளைக் கேட்டுக் கொள்ள வேண்டும். வரிசையில் நின்று தொங்கவிட்டிருந்த கைகளை அதிகாரிகளும் படைகளும் பக்கத்தில் வந்தவுடன் டாணுப் பட வலது கையை மாத்திரம் நிமிர்த்திப்பிடிக்க வேண்டும். அதிகாரிகளும் படைகளும் நிற்பார்கள். என்ன வேண்டுமென்று ஆங்கிலத்தில் அதிகாரத்துடன் கேட்பார்கள். உடனே ஒருவர் மொழி பெயர்த்துக் கூறுவார். அதிகார மமதை பிடிதத சிறையதிகாரிகள் 'கொடுக்க முடியாது' என்று தான் கூறுவார்கள். இந்த வரிசையைப் 'பைல்' என்பர்.

இந்தப் 'பைலில்' தான் சிதம்பரம்பிள்ளை இளைத்த உடலுடன் நின்று கைநீட்டி தன் தேவை

களைக் கூறினர். சிறையதிகாரி 'கொடுக்கமுடியாது' என்ற பல்லவியைப் பாடினர். ஜில்லா மெடிகல் ஆபீசர் இவரைக்கவனித்து அரிசி உணவு அளிக்கும் படி சிறை டாக்டருக்கு உத்திரவிட்டார். ஐந்தில் ஒரு பங்கு குறைந்திருப்பதைக் கண்ட சிறை டாக்டர் அரிசி உணவை அருந்தும்படி பிள்ளைக்கு ஆதரவு தந்தார். சிதம்பரம் பிள்ளை சிறையில்பட்ட துன் பங்கள் கொஞ்சமன்று. அவர் அனுபவித்த அல்லல்களைக் கேட்ட கல்லும் கசிந்துருகிக் கண் ணீர் வடிக்கும்.

செக்கிலே பூட்டிய மாடுகள் நைந்துபோகும். நல்ல மாடுகளைச் செக்கிழுக்கக் கொடுக்க மாட்டார் கள். மாடுகளுக்கே இந்தக் கதிஎன்றால் மனிதன் செக்கிழுத்தால என்ன ஆவான்? கருணை என்பது மருந்துக்குக்கூட மனதில் இல்லாத சிறையதிகாரி கள், கல்லும் மண்ணும் கலந்த பொல்லா உணவைச் செல்லா உடலுட் செலுத்தி, உடலும் உயிரும் ஒருங்கே குன்றியிருந்த சிதம்பரம் பிள்ளைக்குக் கடு மையான வேலைகளைச் செய்யக் கட்டளையிட்டிருந் தனர். செக்கிழுக்க அவருக்குக் கட்டளை இட் டிருந்தனர் என்றால் வேறு செப்புவது என்? செக் கிழுத்தார் பிள்ளை. மாடாகச் செக்கிழுத்தார். ஒருநாள் செக்கிழுக்கும்போது கடும் வெயிலாகை யால் களைப்படைந்து கண் பஞ்சடைத்து மூர்ச் சித்து விழுந்துவிட்டார்.

இப்படிப்பட்ட கொடிய துன்பங்களைப் பிள்ளை யவர்கள் அனுபவித்தார். தன் சுயநலத்திற்காகவா? பெண்டு பிள்ளைகளை முன்னேற்றுவதற்காகவா? உற்றார் உறவினரை மற்றார் மதிக்கும் நிலையில்

வைக்கும் தொண்டுக்காகவா? இல்லை, இல்லை, நாட்டிற்காக, தேசத்திற்காக. உலகிலுள்ள எல்லா இன்பங்களையும் துய்ப்பதற்குச் சாதனமாயிருப்பது சுதந்திரம். அந்தச் சுதந்திரத்தைப்பெற்று நாட்டிற்கு நல்க நாட்டங்கொண்டார் சிதம்பரனார். சிறையிலே பட்ட துன்பங்களுக்கு அஞ்சினரோ பிள்ளை? இல்லை. நெஞ்சில் வலி கொண்டார்; உரம் கொண்டார். "எண்ணரிய துன்பங்கள் என்னை எய்திடினும் நான் அஞ்சேன். கொஞ்சமும் இரக்கமற்று வெஞ்சிறையில் என்னைப் போட்டாலும் அஞ்சேன்" என்று கூறியிருக்கிறார். ஆகவே தான் வீரசிதம்பரனார் ஆனார்.

சுதந்திரத்துக்காக வீடுவாசலைத் துறந்து, சிறைக்குச்சென்று அவதிப்படலாம்; பட்டம் பதவியை துறக்கலாம்; பணத்தைச் செலவிடலாம்; பழி பாவங்களைச் சுமத்தினாலும் பொறுக்கலாம்; கோடி கோடி இன்னல்கள் கூடிவந்து வாழ்க்கையைத் துன்பமயமாக்கினாலும் பொறுத்திருக்கலாம். சுதந்திரமில்லாமல் இருக்கமுடியாது. சுதந்திரம் மனிதனுக்கு அவ்வளவு இன்றியமையாத—மேலான—பாக்கியம். அதை அடைந்தே தீரவேண்டும் என்று சிதம்பரனார் அஞ்சாமல் பாடுபட்டார்.

9. கோயமுத்தூர்ச் சிறை

பாளையங்கோட்டைச் சிறையில் ஒருநாள் மாலை ஒருசெய்தி பிள்ளையவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதாவது அவர் கோயமுத்தூர்ச் சிறைக்கு மாற்றப்பட்டிருக்கிறார் என்பதுதான். ஆகவே

அவர் சிவ்ராவை வணங்கி, பிரியா விடை வேண்டினார். சிவ்ராவும் 'செல்க' என்றார். பிள்ளையவர்கள் வண்டியிலேறி ரயிலடிக்கு வந்தார். வெங்குவையர் முதலியோர் அங்கு வந்துசேர்ந்து, "விரைவில் உங்களை மீட்டுவோம்" என்று கூறினார்கள். இரயில்வே ஸ்டேஷனில் கூட்டம் அதிகம் வந்து, பிள்ளையவர்களைப்பார்த்து வணங்கி, வேறிடம் மாற்றப்பட்டிருப்பதற்கு வருந்தினர். எல்லோருக்கும் ஆறுதல் கூறினார் பிள்ளையவர்கள். இரயில் வந்ததும் ஏறி உட்கார்ந்துகொண்டு எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டார். போலீஸ் பந்தோபஸ்தும் இருந்தது.

கங்கைகொண்டானை வண்டி யடைந்தது. நண்பர் பலர் வந்து தங் கை குவித்தனர். பிள்ளையவர்களும் வணங்கினர். மணியாச்சி வந்தது. பலர் வந்து பணிந்தனர்; மிகவும் வருந்தினர். 'வருந்துதல்விட்டுத் திருந்திய செயல்கள் எந்நாளும் செய்க' என்று பிள்ளையவர்கள் உள்ளக்கருத்தை உரைத்தார். மதுரை வந்தது. அநேகர் வந்து கண்டனர்; கண்ணீர் வடித்தனர். "வருந்தாதென்னை வாழ்த்துக" என்றார். திருச்சி சந்திப்பைச் சேர்ந்தது வண்டி. அநேக மாணவர் வந்து கண்டனர். அன்போடு பேசினர். வேறொரு வண்டியில் ஏறி ஈரோட்டை அடைந்து, காலைக் கடன் முடித்துப் போத்தனூர் புகுந்தார் பிள்ளையவர்கள். அங்கே சிற்றுண்டிகள் அருந்தினர். பின்பு கோயமுத்தூரை அடைந்தார். சிதம்பரனார் வருகிறார் என்று தெரிந்து அநேகர் கூடியிருந்தனர் காண்பதற்காக.

ஆனால், கூடவந்த பொல்லாதவர்கள் வேறு வழி ஒன்றில் இறக்கி, வண்டியில் ஏற்றி சென்டரல் சிறைக்குக் கொண்டே சென்றனர்.

கோயமுத்தூர்ச் சிறை சென்றதும், அச்சிறையின் டிப்டி ஜெயிலர் வந்தார். பாளையங்கோட்டைச் சிறையின் உடைகளை வாங்கிக்கொண்டார். கோயமுத்தூர்ச் சிறையின் உடையை வழங்கினார். பனியன் இரண்டு, காற்சட்டை இரண்டு, குல்லா ஒன்று, கயிற்றுப் பாய் ஒன்று, கம்பளி இரண்டு - இவை டிப்டி ஜெயிலர் கொடுத்தவை. டிப்டி ஜெயிலர் பிள்ளையவர்களை அழைத்துக்கொண்டு நான்காம் பிளாக்குக்குச் சென்றார். கோணையன் என்ற கோணக்கால் வார்டரிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றார். கோணையன் பிள்ளையவர்களைச் சணல் கிழிக்க வேண்டுமென்றும் இயந்திரம் சுற்றவேண்டும் என்றும் சொன்னான். அப்படியே பிள்ளையவர்களும் செய்தார்கள். அவரது கைத்தோல்கள் உரிந்து இரத்தம் கசிந்து வந்தது. ஆம், இரத்தம் கசிந்தது. வெள்ளையர் வெளியேறுவாரா? என்று எட்டிப்பார்த்தது வீரரின் இரத்தம். இந்திய நாட்டுக்கு விடுதலை கிடைக்குமா? என்று எட்டிப் பார்த்தது தியாகியின் இரத்தம். தென்னாட்டு /மக்கள் திறமையுடன் போரிடுவாரா? என்று எட்டிப் பார்த்தது தமிழனின் இரத்தம்.

உணவுண்ணக் கலம் வந்தது. கேப்பை ரொட்டியும், கோதுமை ரொட்டியும், குழம்பும் தந்தனர். கோதுமை ரொட்டியைப் பிள்ளையவர்கள் உண்டார்; உறங்கினார். நடுநிசியில் பலர் வந்து எழுப்பினர். பார்த்தார். வணங்கினர். வடை பழம்

வழங்கினர். "ஐயா! தங்கள் ஆட்கள் இங்கும் உள்ளோம். வருந்தாதிருங்கள். தினம் தினம் இரவில் வருவோம்; தின்பன கொடுப்போம்; காண்போம். காலையில் இரவை உப்புமாவும் மாலையில் இரவைத் தோசையும் அனுப்புகிறோம். உண்ணுங்கள்" என்று சொல்லி வணங்கிப்போயினர். அவர்கள் யார்? இராமநாதபுரம் ஜில்லா சிவகாசியில் பெரும் கொள்ளை ஒன்று நடந்ததே, அந்தக் கொள்ளைக்குக் காரணம் என்று கருதி தண்டிக்கப்பட்ட சிவகாசி ஆறுமுகம் பிள்ளையவர்களும், வடுகுராமத் தேவர் என்பவரும், இன்னும் சிலருமாவர்.

ஒருநாள் பிள்ளையவர்களின் கைத்தோல் உரிந்ததை ஜெயிலர் கண்டார். எண்ணெய் ஆட்டும் செக்குத் தள்ளக் கட்டளையிட்டார். சிலநாள் பிள்ளையவர்கள் செக்குத்தள்ளினர். உடனிருந்தவர்கள் உயர்ந்த வக்கிலாயிருந்த பிள்ளையவர்களின உடல் நிலைமையையும், வெயிலிலே செக்குத் தள்ளப் போதிய பலமில்லாததையும், தள்ளினல் தளர்வு ஏற்படுவதையும் கண்டு இரங்கி, "நாங்கள் தள்ளுகிறோம்; நீங்கள் நிழலில் இருங்கள்" என்று வேண்டிக் கொண்டார்கள. வேண்டுகோளுக் கிணங்கினர் பிள்ளையவர்கள். இருப்பினும் செக்கிழுக்கவும் செய்தார்.

நீதிபதி ஃபின்ஹே கூறிய தீர்ப்பு நீதியற்றது என்று சிதம்பரனர் சென்னை ஐக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்திருந்தார். அது சென்னை ஐக்கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. கோயமுத்தூர்ச் சிறையில் ஒருநாள் ஜெயிலர் சில

கைதிகளுடன் பிள்ளையவர்களை டாக்டரிடம் போய் வரும்படி புகன்றார். அப்படியே பிள்ளையவர்களும் சென்றார். "ஏன் சிரிக்கிறாய்"? என்று கேட்டார் டாக்டர். "அழகச் சொல்லுகிறீர்களா? அது என்னால் செய்ய வியலாது" என்று பதில் கொடுத்தார் சிதம்பரனார். இவ்வாறு பேசியது தவறு என்று டாக்டர் எழுதி அனுப்பினார். இருவாரம் அபராதம் கிடைத்தது. இந்தச் சமயத்தில் ஹைக்கோர்ட்டு ஜட்ஜ் சங்கரநாயர் ஃபின்ஹே தீர்ப்பை சஸ்பெண்டு செய்தனுப்பினார். ஆகையால் பிள்ளையவர்கள் வேலை செய்ய வேண்டியதில்லாமற் போயிற்று.

தண்டனை சஸ்பெண்டு செய்யப் பட்டதால் பிள்ளையவர்களுக்குச் சொந்த உணவு, சொந்த உடை, சொந்தப் படுக்கை முதலியன வந்தன. பிள்ளையவர்கள் விசாரணைக் கைதிகள் இருக்கும் இடத்திற்கு மாற்றப் பட்டார். ஒருநாள் ஜெயிலர் அங்கு வந்து, "உங்கள் உடல் நிலைக்குக் கொஞ்சம் வேலை செய்வது நல்லது. வேலை செய்கிறீர்களா?" என்று பிள்ளையவர்களைப் பார்த்துக் கேட்டார். "ஐயா! வேலை செய்ய யான் இங்கு வர வில்லை" என்று பதிலிறுத்தார் பிள்ளை. கோபங் கொண்டு பிள்ளையவர்களின் அறையைப் பூட்டிவிட்டு ஜெயிலர் போய் விட்டார். ஜெயிலர் செய்கையை ஒரு திங்கட் கிழமை பெரிய டாகடரிடம் பிள்ளையவர்கள் சொன்னார்கள். பிள்ளை யறையைப் பூட்டக்கூடாதென்றும், தினமும் காலையும் மாலையும் உலவி வர அனுமதிக்க வேண்டும் என்றும் உத்திரவிட்டார் பெரிய டாக்டர். அந்த நாட்களில் "மனம் போல வாழ்வு" என்ற நூலை எழுதிமுடித்தார் சிதம்பரனார்.

சிதம்பரனார் ஒரு நாள் காலை சிறைக்காரியாலயம் என்று சொல்லப்படும் டவருக்குச் சென்றார் சிவகாசி வடுகுராமத்தேவர் வணங்கினார். இதை ஜெயிலர் கண்டு கடுங்கோபங் கொண்டு வடுகுராமத் தேவரைக் கூப்பிட்டு, "யாரை வணங்கினாய்" என்று கேட்டார். யாரையும் வணங்கவில்லைஎன்றார் அவர். உடனே ஜெயிலர் பிள்ளையவர்களைக் கூப்பிட்டு, "இவன் உங்களை வணங்கினானா?" என்று கேட்டார். "எல்லோரும் என்னை என்றும் வணங்குகின்றனர். இன்று இவர் என்னை வணங்கினாரா? இல்லையா? என்று சொல்ல முடியாது" என்று சாமர்த்தியமாகப் பதில் சொன்னார். சிதம்பரனாரை அறைக்குப் போகச் சொல்லிவிட்டு, வடுகுராமத் தேவரை அழைத்து, "சிதம்பரம் பிள்ளையை எந்தக் கைதியும் மதிக்கக் கூடாதென்று தனி அறையில் வைத்திருக்கிறேன். அவரை அடுத்து வணங்குதல் கூடாது. இனிமேல் அவ்வாறு வணங்கினால் கசையடி கிடைக்கும்" என்று எச்சரித்து அனுப்பினார் ஜெயிலர். வடுகுராமத் தேவர் சிவகாசிக் கொள்ளையில் அநேகரை தேவலோகத்துக்கு அனுப்பி வைத்தவர் என்ற செய்தி ஜெயிலருக்குத் தெரியாது போலும்! பாவம்! இதைக் கேட்டு மனம் வருந்தி, கோபங் கொண்டு சென்றார் வடுகுராமத்தேவர்.

வடுகுராமத்தேவருக்கு உள்ளத்தில் கோபக் கனல் பொங்கி எழுந்தது. கைதிகளில் திறமையுள்ள மூவரை அழைத்தார். நடந்ததைக் கூறினார். ஜெயில் சூப்பிரண்டெண்டு, டாக்டர், ஜெயிலர் மூவரையும் கொன்றுவிட வேண்டும் என்று மூன்று அரிவாளும் தயார் செய்துகொடுத்தார். மூவரும் சரி என்றிருந்

தனர். அன்றிரவு சிவகாசி ஆறுமுகம்பிள்ளைக்குஇச் செய்தி தெரிந்தது. உடனே வடுகுராமத்தேவரைக் கூப்பிட்டு, "சிதம்பரம்பிள்ளையைக் கலக்காமல் ஒன்றும் செய்யக் கூடாது" என்றுகண்டிப்புச் செய்து விட்டார். கொலை செய்ய ஏற்றுக் கொண்ட மூவரும் சிதம்பரம் பிள்ளையைக் கண்டு செய்தியைச் சொல்லி, "அனுமதி தருக" என்று வேண்டினர். "கொலை கூடாது" என்று பிள்ளையவர்கள் கூறி விட்டார்கள். மூவரும் போய் விட்டார்கள்.

ஒரு ஞாயிறன்று அபாய ஊதலும் அபாயமணியும் ஒலித்தன. கைதிகள் பூட்டை உடைத்து வெளிச் சென்றனர். ஏன்? ஜெயிலர் குத்தப்பட்டார். வெளிக்கிளம்பிய கைதிகள் சுவர் ஏறிக் குதித்தனர். உடனே போலீசார் வந்தனர். சுட்டனர். ஒருவன் உயிர் துறந்தான். பலர் சிறைக்குள் தள்ளப்பட்டனர். பிரேதம் போல ஜெயிலர் தூக்கப் பட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப் பட்டார். அன்று இரவு எல்லாக் கைதிகளுக்கும் கற்கண்டும் பழமும் வழங்கப்பட்டன. கன்விக்டு வாடர்கள் மகிழ்ந்தார்கள். எல்லோரும் இன்புற்றிருந்தனர். பிள்ளையவர்கள் கொலை கூடாது என்றார். கொலை கூடாது; மற்றொன்று செய்யலாம் என்று பொருள் பண்ணிக்கொண்டனர் போலும்! கொள்ளையடிக்கும் படியான வைரம் பாய்திருந்த வடுகுராமன் நெஞ்சு, கேவலம் ஜெயிலருக்குப் பயந்து, அவர் வடுவுள்ள வார்த்தைகளை ஏற்குமா?

நீதிபதி ஃபின்ஹே தீர்ப்பின்மேல் சென்னை ஐக்கோர்ட்டில் சிதம்பரனர் அப்பீல் செய்திருந்தா ரல்லவா! அந்த அப்பீலை இரு வெள்ளைக்கார

ஜட்ஜுகள் கவனித்தார்கள். அவர்கள் இருவரும் தண்டனையை ஊர்ஜிதம் செய்து வருடத்தைக் குறைத்தார்கள். பிரசங்கம் செய்யச் சிவாவைத் தூண்டியதற்காக ஆறுவருடம் அந்தமான் என்றும், சிதம்பரம்பிள்ளை தானே பிரசங்கம் செய்ததற்கு நான்கு வருடம் அந்தமான் என்றும். இருதண்டனையையும் ஒன்றன்பின் ஒன்ருக அனுபவியாமல் இரண்டையும் சேர்த்தே அனுபவிக்கலாம் என்றும் தீர்ப்புக் கூறினர்கள். சிதம்பரனரின் நண்பர்கள் பிரிவுகவுன்சிலுக்கு அப்பீல் செய்தார்கள். அங்குத் தீவாந்திரத் தண்டனை ரத்தாகிவிட்டது; கடுங்காவல் தண்டனை இருந்தது. அந்த உத்திரவுகள் சிறைக்கு வந்தவுடன், குத்துப்பட்டு நலம்பெற்றுத் திரும்பி வந்த ஜெயிலர் பிள்ளையவர்களைச் செக்கிழுக்கப் போட்டார். பிள்ளையவர்கள் சிலநாள் செக்கிழுத்தார். செக்கா இழுத்தார்? தென்னுட்டைச் சுதந்திர வழிக்கு இழுத்துக்கொண்டு போனர்.

ஜெயிலரைக்குத்திய மூவரையும் அன்றே போலீசார் கைதிசெய்தனர். வெளிக் கோர்ட்டிலே விசாரணை நடந்தது. வழக்கு ஜில்லா நீதிபதிக் கோர்ட்டுக்கு விசாரணைக்கு அனுப்பப் பட்டது. பிள்ளையவர்கள் வக்கீல் சீனிவாசனுக்குச் செய்தி சொல்லி அனுப்பினர். அவரும் மூவருக்காக ஆஜரானர். சிதம்பரனர் சாட்சியாக விசாரிக்கப்பட்டார். "சிறைசூப்பிரண்டெண்டு படம்பிடித்துக்கொண்டே திரிவார். தினமும் ஜெயிலர்தான் ஜெயிலை ஆளுவது. புழுத்தகாய்தான் கிடைக்கும். வெந்நீர்தான் குழம்பு. கைதிகள் கால்களில் கம்பால் அடிக்கிருர். அவர் செய்யும் அநியாயத்தைச் சொல்லிவிட முடியாது.

அதனால்தான் கலகம் உண்டாயிற்று"—என்பவை சிதம்பரனாரின் சாட்சியம். சர்க்கார் தரப்பு வக்கீல், "உங்களுக்குச் சிறை எப்படி இருக்கிறது" என்று குறும்பாகக் கேட்டார். "நீங்கள் சென்று சிலநாள் அங்குத் தங்கியிருந்தால் எல்லா நலத்தையும் காணலாம்" என்று பிள்ளையவர்கள் துடுக்காய்ப் பதிலிறுத்தார். அங்கிருந்த எல்லோரும் 'கொல்' என்று சிரித்தனர். சிதம்பரம்பிள்ளை சிறைக்குச் சென்றதும் தனியறை கொடுக்கப்பட்டது. செக்கிழுக்கும் வேலை நின்றது. நூல் முறுக்கும் வேலை கொடுக்கப்பட்டது, மூன்று நூல்களைச் சேர்த்து முறுக்கிக் கொடுத்தார் பிள்ளையவர்கள். அந்தத் தனியறையில் இருந்த காலத்தில் பல தமிழ் நூல்களையும் ஆங்கில நூல்களையும் பிள்ளையவர்கள் வாசித்து முடித்தார்கள்.

ஒரு நாள் பிள்ளையவர்களுக்காக ஒரு 'ஹிந்து' பத்திரிகையும், அவர் மனைவியின் கடிதமும், இனிய தின்பண்டங்களும் ஒரு வார்டர் கொண்டு வந்தார். அதைப் பிடித்து ஜெயிலர் சூப்பிரண்டெண்டிடம் கொடுத்து விட்டார். சூப்பிரண்டெண்டு பிள்ளையவர்களைக் கூப்பிட்டு மனைவி கடிதத்தைக் கொடுத்தார். "இது உங்கள் மனைவியின் கடிதம். இதில் உங்கள் கடிதம் வந்ததாக எழுதி யிருக்கிறது. எனக்குத் தெரியாமல் இங்கிருந்து எப்படிக் கடிதம் எழுதலாம்?" என்று சூப்பிரண்டெண்டு கேட்டார். "நல்லது நீங்கள் சொல்வது! என்னுடைய கடிதம் கிடைத்ததாக எனது மனைவியின் பெயரால் யாரும் கடிதம் எழுதலாமே. இதற்கு யான் எப்படிக் குற்றவாளியாக முடியும். யோசித்துப் பதில் சொல்லும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று சொன்

னார் பிள்ளையவர்கள். "இக்கடிதமும் இப்படி எதிர்த்துப் பேசுவதும் போதுமே, உங்களைத் தூக்கிடுவதற்கு" என்றார் சூப்பிரண்டெண்டு. "நல்லவேளை. தூக்கிவிட நீங்கள் ஜட்ஜாக இல்லை" என்று துடுக்காகப் பதிலிறுத்தார் பிள்ளை. "ஹிந்து" கொண்டு வந்த வார்டருக்கு வேலை போயிற்று. மூன்று மாதம் சிறை கிடைத்தது. வார்டர் வெளியேறியதும் ஒரு பெருந்தொகை பிள்ளையவர்கள் கொடுக்கச் செய்தார்கள். கடை வைத்துப் பிழைத்தார் வார்டர்.

ஜெயில் இன்ஸ்பெக்டர் ஜெனரல் சிறையைப் பார்வையிட வந்தார். ஜெயிலரைக் குத்தியதையும் ஜெயிலை உடைத்ததையும் விசாரித்தார். சிதம்பரம் பிள்ளைக்குச் சிறுமை செய்ததால்தான் ஜெயிலில் குழப்பம் விளைந்ததென்று அவர்கண்டார். ஆகவே அவர் இரு ஜெயிலதிகாரிகளையும் (சூப்பிரண்டெண்டு, ஜெயிலர்) கூப்பிட்டு, "ராஜீயக் கைதிகளை நன்றாய் நடத்தவேண்டும். அவ்வாறு நடத்தினால் அவர்களும் நம்மோடு நன்றாய் நடப்பார்கள். அவர்களைச் சிறுமையாய் நடத்தினால் நமக்குச் சிறுமை தருவர். அப்போது நம்மால் ஜெயிலை நடத்த முடியாது. ஆதலால் அப்படிபட்டவர்களை அன்பாய் நடத்த வேண்டும். வேலை என்ற பேருக்கு அச்செழுத்துககளைக் 'கம்போஸ்'செய்யச்சொல்லலாம்" என்று அறிவுரை கூறிச்சென்றார். நூல் முறுக்கும் வேலையை நீக்கி அச்சுக் கோக்கும வேலையைப் பிள்ளையவர்களுக்குக் கொடுத்தார்கள்.

ஒருநாட் காலையில் ஜெயில் சூப்பிரண்டெண்டு பிள்ளையவர்களைக் கூப்பிட்டு, "நீங்கள் கன்விக்டர் பீசர் வேலைபார்த்தால் வருடம் ஒன்றுக்கு மூன்று

மாதம் கழியும். உங்கள் சுற்றத்தாரைப் பார்க்கலாம், கடிதம் எழுதலாம். மாதம் ஒருமுறை வேலை இல்லை. நல்ல உணவு கிடைக்கும். நல்ல உடை கிடைக்கும். வேலைபார்க்க விருப்பமா?'' என்று கேட்டார். "ஐயா! நீங்கள் சொன்னதற்காக வந்தனம். சிறையை நடத்துவதற்கு உதவிசெய்ய நான் இங்குவரவில்லை. எனக்கு அந்த உத்தியோகம் வேண்டாம்'' என்று பதில் சொன்னார் பிள்ளை. ஜெயில் சூப்பிரண்டெண்டு போய்விட்டார். கண்ணனூர்ச்சிறைக்கு பிள்ளையவர்களை மாற்றியிருப்பதாக உத்திரவு வந்தது. ஜெயிலரைக் குத்தியவர்கள் 'இவர்கள் தான்' என்று சொல்லச் சாட்சி இல்லாததால் குத்துக்கேசு விடுதலையாயிற்று. மூவரும் ஜெயிலிலிருந்தனர். இப்படி இரண்டரையாண்டுகள் கோவைச்சிறையில் கைதியாயிருந்து காலங்கடத்தினர், சுதந்திரத்திற்குக் காலம் பார்த்திருந்த தென்னாட்டுத்திலகர்.

---

10. கண்ணனூர்ச் சிறை

ஒரு வெள்ளைக்கார இன்ஸ்பெக்டர் இருபோலீசார் கோவைச்சிறைக்கு வந்தனர், காலை வேளையில். ஜெயிலர் பிள்ளையவர்களை அழைத்தார். பிள்ளையவர்களும் வந்தார். "உங்களுக்கு ஜெயில் மாற்றம் இருக்கிறதல்லவா. கண்ணனூர்ச் சிறைக்குச் செல்லலாம். கூட்டிப்போக இவர்கள் வந்திருக்கின்றனர்'' என்றார் ஜெயிலர். போலீசார் பிள்ளையவர்களின் கையில் விலங்கைப் பூட்டினர். இரயிலடி சேர்ந்து மாலை கண்ணனூர்ச் சிறையை நண்ணினர்கள்.

பிள்ளையவர்களுக்கு கோரன்டைன் பிளாக்கில் ஒரு அறை அளிக்கப்பட்டது. அந்த கோரன்டைன் பிளாக் மிக அழகாக இருந்தது. நடுவில் ஒரு தோட்டம், அதன் நான்கு பக்கமும் மரங்கள் இருந்தன. ஒவ்வொரு பக்கத்துக்கும் ஒரு டஜன் வீதம் சொல்லலாம். அவற்றின்முன் விராந்தா இருந்தது. முன்புறம் இருந்த விராந்தாவைப்போல பின்புறமும் இருந்தது. நாலுபக்கமும் காலி நிலமும் இருந்தது. ஒரு மூலையில் ஒரு கிணறு இருந்தது. மற்றொரு மூலையில் வழி இருந்தது. காலிநிலத்தில் கக்கூஸ்கள் பலவிருந்தன. வேம்புமரங்கள் பல இருந்தன. அவை வேலைசெய்யும் கைதிகளுக்கு நிழலைத் தந்து கொண்டிருந்தன. தோட்டத்தின் நடுவில் குரோட்டன்ஸ் இருந்தன. முல்லை, பிச்சி, மல்லிகை, ரோஜா முதலிய மலர்ச்செடிகள் அங்கே இருந்தன. அவை நல்ல மணத்தை இரவென்றும் பகலென்றும் பாராமல் வீசின. இந்த இயற்கை அழகு பிள்ளையவர்களுக்குப் பெரிதும் பிடித்திருந்தது. சிறையில் இந்த அழகை, மனமகிழ்ச்சியை உதவும்சாதனத்தைப் பிள்ளையவர்கள் எதிர்பார்க்கவில்லை. இம்மாதிரி ஒரு இடம் கிடைத்ததும் பிள்ளையவர்கள் பெரிதும் மகிழ்ந்தார்கள்.

திருநெல்வேலியில் தீயிட்ட கேசில் சிலபேர் தண்டிக்கப்பட்டனர். அவர்கள் கண்ணனூர்ச்சிறையில் புகுந்த தினத்தில் அச்சப்படுத்துவதற்காக சிறையின் டிப்டி ஜெயிலர் சில கைதிகளைக்கொண்டு அவர்களைக் கம்பால் அடிக்கச் செய்தார் என்ற செய்தி பிள்ளையவர்கள் காதில்பட்டதும் வருந்தினர். அந்தச் சிறையின் ஜெயிலர் மாட்டுத் தும்பு

செய்யும் வேலையைச் சிதம்பரனாருக்குக் கொடுத்தார். அந்த வேலையைத் தனது அறையிலிருந்து கொண்டே சிதம்பரனார் செய்துகொண்டு வந்தார்.

சிலநாள் சென்றன. பல வார்டர்களும் டவர் ஆபீசரும் பிள்ளையவர்களுக்குப் பழக்கமாயினர். வேண்டிய சாமான்களைக் கொடுத்தார்கள். மரியாதையும் செய்தார்கள். தும்பு வேலை தொலைந்தது அச்சுக்கோக்கும் வேலை வந்தது. ஒருநாள் இரவு பிள்ளையவர்கள் அயர்ந்து நித்திரை செய்தார். இரவு மணி பதினொன்று அல்லது பன்னிரண்டு இருக்கும். பிள்ளையவர்களின் அறைக்கு வந்தார் ஒருவர். 'மிஸ்டர் சிதம்பரம்பிள்ளை' என்று பலதடவை கூப்பிட்டார். சத்தங்கேட்டு திடீரென்று விழித்தார் பிள்ளை. சிறையின் ஜூனியர் சப் அஸிஸ்டெண்டு சர்ஜன் நின்றுகொண்டிருந்தார்.

"சௌக்கியந்தானா" என்று விசாரித்தார்.

'ஆம்' என்றார் பிள்ளை.

'ஆஷ் துரையைத் தெரியுமா?' என்றார் சர்ஜன்.

'ஆம்' நன்றாய்த்தெரியும்' என்றார் பிள்ளை.

'எப்படி.' என்றார் சர்ஜன்.

'யான் சிறைக்கு வந்ததற்கு அவரே காரணம்' என்றார் பிள்ளை.

'ஆஷ் துரை ஆஷ் ஆனார்' என்றார் சர்ஜன்.

'என்ன' என்றார் பிள்ளை.

'ஆஷ் என்றால் சாம்பல். அவர் சாம்பலானார் என்றேன்' என்றார் சர்ஜன்.

'ஏன்' என்று வினவினார் பிள்ளை.

'யாரோ ஒருவன் ஆஷ்துரை இரயிலில் வந்து கொண்டிருக்கும்போது நேற்று மணியாச்சியில் சுட்டான். ஆஷ்துரை இறந்து போனார். தன்னையும் அவன் சுட்டுக்கொண்டான். அவனும் இறந்து போனான்' என்று சொன்னார் சர்ஜன்.

'அப்படியா' என்றார் பிள்ளை.

'ஆம்' என்று சொல்லிப் போனார் சர்ஜன்.

ஆஷ்துரை கோடைக்கானலுக்குப் போய்க் கொண்டிருந்தாரென்றும், இரயில் வண்டி மணியாச்சி சந்திப்பை அடைந்ததும் ஒரு வாலிபர் கைத்துப்பாக்கிகொண்டு துரையைச் சுட்டு வீழ்த்தினாரென்றும், பின்பு அவர் கக்கூஸில் சென்று தன்னைத்தானே சுட்டுக்கொண்டு மாண்டாரென்றும், அவ்வாலிபர் செங்கோட்டை இரகுபதி அய்யரின் திருக்குமாரர் வாஞ்சிநாத அய்யர் என்றும் பின்பு சிதம்பரனாருக்குத் தெரிய வந்தது.

சிதம்பரம்பிள்ளை ஒருகோடி ரூபாய் திரட்டி வைத்திருக்கிறார் என்று யாரோ ஒருவர் டவர் ஆபீசரிடம் கூறிவிட்டார். அதைக் கேட்ட டவர் ஆபீசர் பணம்பறிக்க ஆசைகொண்டார். ஆகவே, தினமும் பிள்ளையவர்களிடம் வந்து வேண்டுவன கொடுத்துச் சிரித்துப்பேசினார். பெருந்தொகையை விரும்பிய அவர் பயமுறுத்திப் பணம்பறிக்கக் கருதி ஜெயிலரிடம் கோள்கள் பல கூறி, வார்டர்களையும் பிள்ளையிடம் போகாமற் செய்தார். இப்படியே பல துன்பங்கள் செய்தார். சிறை இன்ஸ்பெக்டர்

ஜெனரல் சிறையைப் பார்க்க வந்தார். அப்போது அவரிடம் பிள்ளையவர்கள் கைதிகளின் துன்பங்களை எடுத்துரைத்தார். அதனால் சில துன்பங்கள் நீங்கின.

சிறையில் துன்பங்களைச் சொன்னால் அடிவிழும்; அடியும் வெறும் அடியல்ல; கம்பளம் போர்த்த கசையடி. மிதியும் உண்டு. அடிப்பவர் கைதிகள். அடிக்கச் சொல்பவர் ஜெயிலர் முதலியோர். இந்திய நாட்டின் சிறைகளின் இயல்பு இது. ஆயிரம் பேர் மத்தியில் அடித்தாலும், ஒருவரும் சாட்சி சொல்ல மாட்டார். இராஜீயக் கைதிகளைப் பகைவர் என்று ஜெயிலர் கருதுவர். அதனால் வெறுப்பர். சிறைச் சூப்பிரண்டெண்டும் டாக்டரும் ஜெயிலரின் கைப் பொம்மைகள். இவை தான் எங்கும் நடக்கும்.

சிறை இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் குறைகளைக் கூறியதற்காக பிள்ளையவர்களை ஜெயிலர் மூன்றாம் பிளாக்கிற்கு மாற்றி விட்டார். பிள்ளையவர்களுக்கு ஒரு திண்ணையும் கொடுக்கப்பட்டது. ஜெயிலர் முதலியோர் சொற்கேட்டு பல கைதிகளை அடித்தவனும், அநேக கொலைகள் செய்து ஆயுள் தீவாந்திரத் தண்டனை பெற்றவனும், ஜெயில் ஓவர்சீயராகி மிருகம் போல் திரிபவனுமாகிய மாப்பிள்ளை ஒருவனை, பிள்ளையவர்கள் திண்ணைக்குப் பக்கத்துத் திண்ணையில் படுக்கச் செய்தார் ஜெயிலர். அஞ்சா நெஞ்சம் படைத்த சிதம்பரனாரும் அப்போது அஞ்சினார். கம்படி கொடுப்பானோ, கால்மிதி கொடுப்பானோ, குத்திக் கொல்வானோ, கொடுந் துன்பம் செய்வானோ, எதைச் செய்வானோ என்று கலங்கினார். சிலநாள் கழிந்த பின்பு எப்படியோ அந்த மாப்பிள்ளை சிதம்பரனாரின் வசமானான். சொல்லியதைக் கேட்டான்.

பணிகள் பல புரிந்தான். சிறையதிகாரிகளும் அன்பாயிருந்தார்கள். அரிசி உணவு கிடைத்தது. தமிழ் நூல்கள்படிக்க அனுமதி கிடைத்தது. அச்சமயத்தில் சிதம்பரனார் பல நூல்களையும் படித்தார். பல நூல்களை எழுதினார். உடல் நலமும் நன்றாயிருந்தது.

திருநெல்வேலி தீ வைத்த கேசில் தண்டனையடைந்து வந்திருந்தவர்களை தண்டனை ரத்துப்பிரகடனப்படி விடுதலைசெய்யாமல் வைத்திருந்தார்கள். இதையறிந்த பிள்ளையவர்கள் 'ஹிந்து' பேப்பருக்கு மறைவாக எழுதி யனுப்பினார். அது தகவலை வெளியிட்டது. அதைக் கண்டு அவர்களை விடுதலை செய்தனர். விடுதலை யடைந்தவர்கள் திருநெல்வேலி யடைந்தனர்.

ஒருநாள் காலை ஒன்பதுமணிக்கு சிதம்பரனார் கடவுளை மனதிலே நினைத்து மகிழ்ந்து பாடிக்கொண்டு உலாவிக்கொண்டிருந்தார். அப்போது அவரது இருப்பிடத்துக்கு சூப்பிரண்டெண்டும், ஜெயிலரும், சில வார்டர்களும் வந்தனர். பிள்ளையவர்களின் செயலைக்கண்டு நின்று கொண்டிருந்தனர். பின்பு பிள்ளையவர்களைக் கால்மணி நேரம் கூப்பிட்டார்கள். கடவுளின் இனிய காட்சியிலே ஆழ்ந்து, உடலையும் உளத்தையும் பறிகொடுத்து, அவனோடு இரண்டறக் கலந்து நிற்கும் நிலையில் இருந்தார் சிதம்பரனார். அதனால் அவர்கள் அங்கு வந்ததும், அவரைக் கூப்பிட்டதும், பிள்ளையவர்கள் கண்டிலர், கேட்டிலர். சிறிதுநேரம் சென்று அவர்களின் பேச்சைக்கேட்டு அவர்களிடம் சென்றார் பிள்ளை. 'என்ன செய்கிறீர்கள்' என்று சூப்பிரண்டெண்டு விசாரித்தார். 'கடவுளை வணங்கிக்

கொண்டிருந்தேன்' என்றார் பிள்ளை. 'வேலையைச் செய்யவேண்டிய காலத்திலே கடவுளை வணங்கிக் கொண்டிருப்பது ஏன்' என்று கேட்டார் சூப்பிரண் டெண்டு. 'பொறுத்தருள்க' என்றார் பிள்ளை. மறுத்துவிட்டு அவர் போனார். அரிசி உணவு அன்றே நின்றது.

தன்னுடைய தண்டனை காலமாகிய ஆறு வருடத்தில் தண்டனை ரத்துப் பிரகடனத்தின்படி ஒன்றரை ஆண்டு போய்விடுமென்றும், பாக்கியுள்ள நாலரை ஆண்டில் கழிந்தது போக மீதியுள்ளவை சில நாட்கள்தான் என்றும் பிள்ளையவர்களுக்குத் தெரிந்தது. அந்தச் சிலநாளும் அரிசி உணவு உண்டே விடுதலையாகவேண்டும் என்று கருதினார். உணவை நிறுத்தி விளக்கெண்ணெய் உட்கொண்டார். நிறுவையில் எடை குறைந்தது. அதைக் கண்டு அரிசி உணவும் பாலும் அளித்தனர். உண்டார் உளமகிழ. மெய்ப்பொருள் கண்டார். தொழுதார். தனது விடுதலைகாலம் நெருங்கிவிட்டதென்று வீட்டிற்கெழுதினார். சுற்றமும் நண்பரும் சூழ வீட்டார் கண்ணனூர் வந்திருந்தனர்.

1912 டிசம்பர் மாதம் ஒருநாள் மாலை சிதம்பரனார் உடலில் எண்ணெய் தேய்த்துக்கொண்டு குளிக்க நிற்கும்போது ஜெயிலர் கூப்பிடுவதாக ஒருவன் கூப்பிட்டான். குளித்துவிட்டு சிறையின் உடையை அணிந்துகொண்டு சிதம்பரனார் சென்றார். "விடுதலை ஆர்டர் வந்தது. நீங்கள் வீட்டிற்குப் போகலாம்" என்றார் ஜெயிலர். விடுதலையாகி வெளிவந்தார் வீர சிதம்பரனார். அன்று அவர்

விடுதலை யடைந்தார். இன்று இந்நாடு விடுதலை யடைந்தது. எந்த லட்சியத்திற்காக அன்று பாடு பட்டாரோ அந்த லட்சியம் இன்று நிறைவேறிற்று. அன்று "வெள்ளையரே வெளியேறுங்கள்" என்றார். இன்று வெள்ளையர் வெளியேறிப் போய்விட்டனர்.

---

11. விடுதலையும் கருத்து வேறுபாடும்

சிதம்பரம்பிள்ளையவர்கள் பல இன்னல் இழப்புகளுக்குப் பின் ஜெயிலிலிருந்து விடுதலையடைந்தார். அவரை வரவேற்று உபசரிப்பாரைக் காணோம். "அடிமைத்தனம் மிகுந்து விலங்கினங்கள் வசிக்கும் காடாந்தகாரமாக இருந்த தமிழ் நாட்டில் கல்லையும் முள்ளையும் களைந்து, படாத துன்பங்களைப் பட்டுப் பண்படுத்தி, தேசாபிமானம் என்ற விதையைப் போட்டுப் பயிர்செய்து பாதுகாத்த ஆதிவேளாளனாகிய சிதம்பரம்பிள்ளை துன்பம் நிறைந்த சிறைவாசத்தையும் கழித்து வெளியே வந்தபோது தமிழ் நாடு அவரைத் தக்கபடி வரவேற்று ஆதரிக்கத் தவறிவிட்டது" என்கிறார் நாமக்கல் கவிஞர். பிள்ளையவர்கள் விடுதலையடைந்ததும், முன்பே விடுதலையடைந்திருந்த சிவா ஒருவர் தான் அவரை வரவேற்றார். சிதம்பரம் பிள்ளை சென்னையில் பல ஆண்டுகள் பல பகுதிகளில் வசித்துவந்தார்.

அரசாங்கத்தை எதிர்த்து ஆயுள்தண்டனை யடைந்ததால் பிள்ளையவர்கள் 'வக்கீல் சன்னத்து' பறிபோயிற்று. அரசாங்கம் அதைப்பிடுங்கிக்கொண்

டது. வாழ்வுக்கு வழி வேண்டியிருந்தது. தாராள வருவாய் இல்லாவிட்டால் வறுமை மனிதனைப் பிடித்து வாட்டும். மந்திர தந்திரங்களால் நெருப்பினுள்ளே படுத்துறங்கி எழலாம். ஆனால் எந்த மந்திர தந்திரங்களாலும் வறுமையின் மத்தியில் கண்மூடியிருக்க முடியாது. பிள்ளையவர்களை வறுமை வாட்டிற்று. இருந்தாலும் மனத்தளர்ச்சி யடைந்து விடவில்லை. வருந்தி முயன்று சம்பாதித்தார். "சுப்பிரமணிய பாரதியார் சோறின்றி வாடிக்கொண்டே பாடிக்கொண்டு மறைந்தார். சுப்பிரமணியசிவா ஊரூராகச் சென்று பிச்சைக்காரனைப் போல பிழைத்து மாண்டார். தமிழ்நாட்டுத் தியாகிகளுள் தலைவரான சிதம்பரம்பிள்ளை வறுமையில் வாடியும் ஓசையில்லாமல் தமது கடைசி நாட்களைக் கழித்து ஒழித்தார்" என்கிறார் நாமக்கல் கவிஞர்.

பிள்ளையவர்கள் இக் கடுவாழ்விலும் நடுவாழ்வு வாழ்ந்து பொதுப்பணி புரிந்தார். சென்னையிலுள்ளபோது பெரம்பூர் இரயில்வேத் தொழிலாளர் சங்கத்தின் உபதலைவராகவிருந்து தொண்டாற்றினார். தொழிலாளர் நலனைக்கோரி அல்லும் பகலும் பாடுபட்டார். 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்' பண்புகள் பிள்ளையவர்களிடம் என்றும் நிலைத்திருந்தன. ஆகவே, அவர் சும்மாயிருந்தாலும் அவர் மனம் சும்மாயிராது. பிறர்க்குதவி செய்யத் தூண்டும் உயர்ந்த குணம் அவருக்கிருந்ததால், வாடும் மக்களுக்கு வலியச்சென்று உதவி புரிந்தார். பிறர்துன்பம் துடைத்தால் தன் துன்பம் தானே துடைக்கப்பெறும் என்று ஆன்றோர் கூறுவர். அதுபோல, பறிக்கப்பட்ட வக்கீல் சன்னது வாலஸ் என்ற நீதிபதியால் திரும்பி வந்து சேர்ந்தது. பிள்ளை

யவர்கள் பிறர்க்குதவி செய்யும் பேராண்மையைக் கண்டு நீதிபதி வாலஸ் இறும்பூது எய்தினர். பெருங்குணப் பேரறிவாளரை மதித்துப் பேருதவி செய்யத் தூண்டும் அருங்குணம் நீதிபதி வாலஸிடம் அமைந்திருந்தது. ஆகவே தான் பிள்ளையவர்களின் வக்கீல் சன்னதை வாங்கி யீந்தார். வக்கீல் சன்னதைப் பெற்ற பிள்ளையவர்கள் வாலஸ்துரையின் பேருதவியைப் பாராட்டி நன்றி பல நவின்று, சென்னையை விட்டுப் புறப்பட்டு கோவில்பட்டி சேர்ந்து, தனது வக்கீல் தொழிலை நடத்தினர். கோவில்பட்டியிலுள்ள எட்டயபுரம் கணக்கப்பிள்ளையவர்கள் பங்களாவை வாடகைக்கு எடுத்துக்கொண்டார். கோவில்பட்டிக் கோர்ட்டுகளில் கேசு அதிகமில்லாமலிருந்தன. அதனால் பிள்ளையவர்களுக்குப் பெரும்வருவாயில்லை. பங்களா வாடகை மாதாமாதம் சரிவரப்போய் அடையவில்லை. எட்டயபுரம் கணக்கப் பிள்ளை வீட்டார் பங்களா வாடகையைக் கேட்டனர். பெரும் வருவாய் வந்தவுடன் வாடகையைப் பாக்கியின்றித் தீர்த்துவிடுவதாகப் பிள்ளையவர்கள் பதில் கூறினர்கள். வறுமையால் வாடும் சிதம்பரம் பிள்ளையை வாடகைப் பாக்கிக்காக மேலும் வருத்துதல் கூடாதென்று எட்டயபுரம் கணக்கப்பிள்ளை வீட்டார் தீர்மானித்து விட்டனர். எப்போது சிதம்பரம்பிள்ளையால் வாடகையைக் கொடுக்கமுடியுமோ அப்போது கொடுக்கட்டும் என்று கணக்கப்பிள்ளை வீட்டார் தயாள குணம் காட்டிவிட்டனர். 'சொல்லப் பயன்படுவர் சான்றோர்' அல்லவா?

வருவாயற்று வறுமையால் பெரிதும் வாடிய பிள்ளையவர்களின் துன்பங்களைக் கண்ட நண்பர்கள் திரும்பவும் தூத்துக்குடிக்கு வந்துவிடும்படி

வருந்தியழைத்தனர். நண்பர்களது வேண்டுகோளை மறுக்க மனமற்று கோவில்பட்டியைவிட்டு மீண்டும் தூத்துக்குடியைச் சேர்ந்தார் பிள்ளையவர்கள்.

தென்னுப்பிரிக்காவிலிருந்து மகாத்மா காந்தியடிகள் இந்தியா வந்து சேர்ந்து அரசியலில் நுழைந்தார். அவர் பஞ்சாப் படுகொலை முதலிய கொடிய செயல்களை எதிர்த்து பிரிட்டிஷ் சர்க்காருடன் போர் தொடங்கவேண்டுமென்று கருதினர். அதற்குத் திட்டம் வகுத்தார். வெள்ளை சர்க்காருடன் ஒத்துழைக்காததே அது. சட்டசபை, நீதிசபை முதலியவற்றைப் பகிஷ்கரிப்பதே அத்திட்டத்தின் நோக்கம். இக் கொள்கை பிள்ளையவர்களுக்குப் பிடிக்கவில்லை. கிடைத்த நன்மைகளைப் பெற்று கிடையாதவற்றிற்குச் சண்டை போட வேண்டுமென்பது பிள்ளையவர்கள் கொள்கை. ஒத்துழையாமைத் திட்டத்தைப் பரிசீலனைசெய்ய கல்கத்தாநகரில் ஒருவிசேஷ காங்கிரஸ் மகாசபை கூடிற்று. "திலகர் பெருமான் இருந்தால் இத்தீர்மானமும் வருமா?" என்று கூறி ஒத்துழையாமைத் திட்டத்தை எதிர்க்க பிள்ளையவர்கள் கல்கத்தா சென்றார். அத்திட்டத்துக்குப்பலமான எதிர்ப்பிருந்தது. ஆனாலும் அது நிறைவேறிற்று. பிள்ளையவர்கள் சென்னை திரும்பினர். தனது கொள்கையை விளக்கிப் பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டார். "அரசாங்கத்தை எதிர்ப்பது கூடாது; உரிமைகள் தந்தாலும், தராவிட்டாலும் தேச நிர்வாகத்தில் ஒத்துழைத்தல் வேண்டும் என்பது மிதவாதிகள் கொள்கை. ஆனால் உரிமைகள் பெறும்வரை அரசாங்கத்துடன் ஒத்துழைக்கக் கூடாது என்பது தற்காலத் தலைவர்கள் கொள்கை. இந்த இரண்டு கொள்கைகளும் தவறு. உரிமை

களை மறுத்தபிறகும் உடன்திரிந்து உலாவுவது அடிமைகளின் செயலாகும். சில உரிமைகளைத் தந்தாலும் அவற்றை மறுப்பது, தின்பண்டம் பெறும் குழந்தைகள் தமக்குக் கிடைத்ததைப்பெறமறுத்து முழுமைக்கும் பெற்ரோரிடம் அழும் செயல்போன்றதாகும்'' என்ற கருத்துப்பட எழுதி, உரிமைகள் கிடைத்தபோது உவந்தேற்பதுடன் கிடையாத் உரிமைகளுக்குச் சண்டைபோடவேண்டும் என்றும் பிள்ளையவர்கள் தெளிவாக்கினார்கள்.

அரசியல் போக்குகள் தன் கருத்துக்கு ஒத்து வராததால் பிள்ளையவர்கள் அரசியல் உலகிலிருந்து விலகியிருந்தார். அரசியல் பிரிவு ஒரே பெரும்பிரிவாகிவிட்டது. தம் முடிவுநாள் வரை அவர் அரசியல் அரங்கத்துக்கு வரவேயில்லை.

---

12. மறைந்தார் சிதம்பரனார்

சிதம்பரனார் நோய்வாய்ப்பட்டு ஒருமாதத்திற்கு மேலாகப் படுக்கையிற் கிடந்தார். மனைவி, மக்கள், உற்ரூர், உறவினர், நண்பர்கள் முதலிய அனைவரும் பக்கத்திலிருந்து பணிபுரிய அவர் 1936 நவம்பர் 18-ந் தேதி இயற்கையுடன் கலந்தார்.

அன்னிய வெள்ளையர் ஆடம்பரத்துடன் திரிய, இந் நாட்டுமக்கள் இன்னலுடன் திரியப் பார்த்துச் சகியாக் கண்கள் தாமே மூடிக்கொண்டன.

ஆங்கிலத்தில் பேசுவதே பெருமை;செந்தமிழ்ப் பேசுவது சிறுமை என்று எண்ணிய காலத்தில்,

தமிழ்மக்களைக் கூட்டிவைத்து நல்ல தமிழில் பேசி விடுதலைப்போரின் விதையை ஊன்றித் தமிழ் நாட்டைத்தட்டி எழுப்பிய வாய் பேசமறுத்தது.

இந்தியநாட்டின் விடுதலைக்கே அல்லும் பகலும் உழைத்து, பொல்லாத் துன்பங்களையும் சகித்து, கல்லுடைத்து, செக்கிழுத்து வைரமேறியிருந்த உடல் ஒடுங்கிற்று.

"அரசாங்கத்தை எதிர்த்து அல்லலுறுவதை விட்டு வக்கீல் தொழிலை நடத்திப் பணந்திரட்டி பாரில் மகிழ்ந்திருப்பதே மேல்" என்று நண்பர் சிலர் கூற, "சுய ஆட்சியை தவிர அன்னிய ஆட்சியை ஆசைப் படுகிறவர்கள் இந்நாட்டில் இருக்கக்கூடாது; துன்பம் வருவதெல்லாம் வரட்டும்; அதற்கு நாம் அஞ்ச வேண்டியதில்லை" என்று உரைத்த அஞ்சா வீரரும் துஞ்சினார்.

சுதேசிக் கப்பல் கம்பெனியை விட்டு விலகிக் கொண்டால் ஒருலட்ச ரூபாய் தருகிறோம் என்ற வெள்ளையரின் லஞ்ச ஆசையை முறியடித்த தியாக மூர்த்தி தீர்ந்து போனார்.

இந்திய யூனியனின் தலைவர் பாபு இராஜேந்திரப் பிரசாத் அவர்கள் 1935-ம் ஆண்டு தென்னாட்டுச் சுற்றுப்பிரயாணத்தின்போது; தூத்துக்குடி சென்று சிதம்பரனாரின் வீட்டில் புகுந்து; உடல் நலத்தைப்பற்றி உசாவிவிட்டு, "தேசபக்தர் சிதம்பரம்பிள்ளை வாழும் தூத்துக்குடிக்கு வந்ததும் அவரைக் கண்டதும் நான் செய்த தவமாகும்" என்று வாய் விட்டுக் கூறும்படி வாழ்ந்த தென்னாட்டின் தேசத்தந்தை மாண்டுபோனார்.

"கூடிய விரைவில் இரண்டாவது உலகப்போர் வரும்; அதன்மூலம் இந்தியநாடு விடுதலை பெறும்; இது உறுதி" என்று சிதம்பரம்பிள்ளையவர்கள் 1936-ல் தீர்க்க தரிசனம் கூறினார். அந்தத்தீர்க்க தரிசி இம்மண்ணுலகை விட்டுப் பொன்னுலகு போனார்.

சூரத் காங்கிரஸ் பிரதிநிதிகள் கூடியிருந்த கூட்டத்திலே அரவிந்தர் வந்து, தம் அருமைப் பிள்ளையைக் காணாது, அங்கு கூடியிருந்தாரிடம், 'எனது பிள்ளையை எங்கே' என்று வினவ, இருந்தாரெல்லாம் விழிக்க, 'தென்னாட்டுத்திலகர், தேசபக்தர், தூத்துக்குடி வீரர், வெள்ளையரை விரட்ட அல்லும் பகலும் உழைக்கும் சிதம்பரம்பிள்ளையைத் தான் கேட்கிறேன்' என்றபோது எல்லோரும் திடுக்கிட, அப்போது பிள்ளையும் வர, அவரை அரவிந்தர் மார்போடு அணைத்துக் கொண்டார் என்ப. அந்தப் பிள்ளை அமரரானார்.

'வறுமையை விரட்டு; உரிமைக்குப் போரிடு; சிறுமைச் சிறைக்கு அஞ்சாதே' என்று கூறி, உற்றார் உறவினர், பெற்றோர், பிள்ளைகள், வீட்டினர், நாட்டினர் முதலியோர் பேரில் அன்பும், ஏழை, எளியவர், தொழிலாளி முதலியோர்பேரில் அருளும், அடிமைநாட்டை மீட்ட என்றும் உழைப்பும், வெள்ளையர்செய்யும் பொல்லாச் சூழ்ச்சியால் விளையும் இடுக்கண் கண்டு அழியாத ஊக்கமும், நாட்டுச் சேவையால் நலிந்து வறுமை யுற்றாருக்கு உதவும் கொடையும் முதலிய குணங்களைக் கொண்டிருந்த குணக்குன்று நாட்டை விட்டு மறைந்தது.

நண்பர் ஒருவர், தம் பிள்ளைக்கு மணவிழா வைத்து விட்டதாகவும் ஒரு ஆயிரம் ரூபாய் கொடுத்துதவ வேண்டும் என்றும் கவி மூலம் வேண்டிய அவருக்குத் தன் வசமிருந்த ஒரு ஆயிரத்தையும் ஆலோசியாது கொடுத்துதவிய கற்பகத்தரு வானுலகு போய்விட்டது.

ஒத்துழையாமைக் காலத்தில் இராஜத்துவேச வழக்கில் மாட்டிக் கொண்ட சென்னை திரு. எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் முதலியோரை வழக்காடி மீட்டித் தந்த பிள்ளையைத் தமிழ்நாடு இழந்து தவிக்கிறது.

தமிழ்நாட்டின் தனிப்பெருந்தலைவர், தங்கள் தலைவர், தமிழ்த் தலைவர், இறந்தார் என்று கேட்டு, நெல்லை ஜில்லா மக்கள் பெரிதும் வருந்தினர். தலைவரின் இல்லத்திலே கூடி கடைசி வணக்கத்தைச் செலுத்திக் கொண்டார்கள். வீர சிதம்பரனார் பருவுடல் நீத்து நுண்ணுடல் பெற்றார்; பூதவுடல் நீக்கிப் புகழுடம்பு அடைந்தார்.

---

13. சான்றாண்மை

"சிதம்பரம் பிள்ளையவர்களை நினைக்கும்போது லோகமான்ய பால கங்காதர திலகர்பெருமான், அரவிந்தகோஷ், சுப்பிரமணியசிவா, சுப்பிரமணிய பாரதி, வ. வெ. சுப்பிரமணிய ஐயர், விபின சந்திர பாலர், லஜபதிராய் முதலான பெரும் பெயர்கள் ஒருங்கே நம் மனதில் ஓடிவரும். இவர்கள் அனைவரும் அரசியல் அபிப்பிராயத்தில் ஒரே இனத்தைச்

சேர்ந்தவர்கள். ஒன்றாய்ச் சேர்ந்து உழைத்தவர்கள். இவர்கள் அனைவரையும் ஒரு குடும்பம் என்று கூசாமற் சொல்லலாம்.”

“தமிழ்நாட்டில் தேசிய உணர்ச்சியை ஊட்டி வளர்த்த தந்தை திரு. சிதம்பரம் பிள்ளை என்பதும் கூட அவருடைய புகழுக்குப் போதாது. வடநாட்டுக்குத் திலகர் என்றால் தென்னாட்டிற்குச் சிதம்பரம் பிள்ளை தான்”—என்று நாமக்கல் கவிஞர் கூறுகிறார்.

காங்கிரஸ் மகாசபை 1907-ம் ஆண்டில் சூரத்தில் நடந்தது. மிதவாதக்கட்சி, தீவிரக்கட்சி என்று அப்போது காங்கிரஸில் இருந்தது. மிதவாதக் கட்சியில் மேத்தா—கோகலே முதலியவர்கள் இருந்தனர். தீவிரக்கட்சி என்பது திலகர்கட்சி. மிதவாதத் தலைவர்களுள் ஒருவரான ஸ்ரீராஷ்பிகாரி கோஷ் தலைமைப்பிரசங்கத்தை அங்கு நடத்தினர். அப் பிரசங்கம் மிதவாதத்தன்மை யுள்ளதாயிருந்தது. தீவிரக்கட்சியார் எதிர்த்தனர். முடிவில் பிரசங்கம் நடவாமலே போய் விட்டது. தீவிரக் கட்சிக்காரருக்கு வெற்றி கிடைத்தது. அந்த வெற்றிக்கு திலகருக்குத் துணையாயிருந்தவர் நம் சிதம்பரம் பிள்ளையவர்கள். இதனால் இவர் தீவிரப் போக்கும் எடுத்த காரியத்தில் வெற்றியடையும் தன்மையும் நமக்கு நன்கு விளங்கும்.

“சிதம்பரம் பிள்ளை ஒரு சிறந்த தேசபக்தர்; தியாகமூர்த்தி திலகர் பிரானுடைய பிரதம சிஷ்யர்களுள் சிறப்புற்ற ஒருவர்; அன்னைபாரததேவியின் விடுதலைக்காக மிகவும் கொடுமைகள்நிறைந்த சிறைவாசம் செய்து அருந்தவமாற்றிய அண்ணல்; ஆழ்ந்த தமிழ் ஆராய்ச்சியுள்ள அறிஞர்.”

"வயதிலும், கல்வியறிவிலும், அனுபவத்திலும், தேச பக்தியிலும், தியாகத்திலும் எவ்வளவோ பெரியவர். பிள்ளை கள்ளமற்ற உள்ளங் கொண்டவர்."

"வெள்ளைக்காரருடைய அதிகாரக் கோட்டையை இடித்தெறியப் படையெடுத்துவிட்ட சேனைக் குத்தலைவன் போல சிதம்பரம்பிள்ளை காரியங்களை நடத்தினர்."

இப்படியெல்லாம் கப்பலைக் கடலில் விட்டு நடத்திய ஒப்பில்லாத் தமிழனைப் புகழ்கிறார் புலவர் நாமக்கல்லார்.

சுதேசிக் கப்பல் கம்பெனி வளர்ச்சிக்கு நாள் தோறும் நலியாது உதவிய தூத்துக்குடி ஆறுமுகம் பிள்ளையை மறவாதிருக்க வேண்டுமென்ற கருத்துக் கொண்டு, தனது பிள்ளைகளில் ஒருவனுக்கு ஆறுமுகம் என்று பெயர் வைத்துக் கூப்பிட்டார் சிதம்பரனர். கேட்டாரையும் திடுக்கிடச்செய்யும் சிறைத் துன்பங்களைக் கோவையிலும், கண்ணனூரிலும் பல ஆண்டுகள் கழித்துவிட்டுத் திரும்பி வந்ததும், வாழ்க்கை வாழ்வதற்குத் தனது வக்கீல் சன்னதை வாங்கி ஈந்த வாலஸ்துரையின் திருநாமத்தை மறவாதிருக்கும்பொருட்டு தனது மற்றொரு மகனுக்கு வாலீஸ்வரன் என்று வைத்து அழைத்தார். வேண்டியபோது வேண்டியாங்கு பொருளுதவி புரிந்து வந்த வேதியப்பிள்ளையை ஞாபகப்படுத்திக் கொள்ளும் வண்ணம் தனது மகளுக்கு வேதவல்லி என்று பெயர் சூட்டினர். இவற்றல் சிதம்பரனரின் நன்றி மறவாத் தன்மை நன்கு விளங்கும்.

"பிள்ளையின் பிரசங்கத்தைக் கேட்டால் தூங்கியிருந்தார் துள்ளி எழுவர்; பாரதியாரின் பாட்டைக் கேட்டால் செத்த பிணம் உயிர்த்தெழும்; பிரசங்கத்தையும் பாட்டையும் கேட்டதேசம் அடிமைப்பட்டிருந்தால் ஐந்துநிமிடத்தில் விடுதலையடையும்; புரட்சி பொங்கி எழும்" என்று நீதிபதி ஃபின்ஹே கூறியிருக்கிறார்.

"சிதம்பரம் பிள்ளை தூயதமிழர். தமிழுக்குரிய அஞ்சாத நெஞ்சமும் ஆற்றலும் ஒரு உருவம் எடுத்துக் கண்ணுக்குத் தோன்றுவதானால், அது சிதம்பரம்பிள்ளையைப் போலவேதான் தோன்றும். நான் இங்கிலாந்தில் வாழ்ந்தபோது அரசியலில் புரட்சிக்காரனாக இருந்தேன. அதற்குக் காரணம் சிதம்பரம் பிள்ளை நடத்திய தூத்துக்குடிப் புரட்சியே யாகும். ஆகவே, சிதம்பரம்பிள்ளை எனது முதல் அரசியல் குரு. அதைச் சொல்லிக்கொள்ள நான் பெருமைப்படுகிறேன். சிதம்பரம்பிள்ளை நம் கண்ணிலிருந்து மறைந்திருந்தாலும் அவருடைய ஆவி நம்மைச் சுற்றி உலவுகிறது"—இப்படியாக தற்போது சென்னை மாகாண மந்திரியாயுள்ள திரு. டி. எஸ். எஸ். இராஜன் அவர்கள் கூறியுள்ளார்.

"நான் சிதம்பரம்பிள்ளையை நன்கு அறிவேன். மாசுமறுவற்ற தேசபக்தர். கள்ளங் கபடமற்ற மனமுடையவர். அவருடைய வீரப்புரட்சிகளை இப்போது நினைத்தாலும்கூட எனக்கு உணர்ச்சி மேலிடுகிறது" என்பது சேலம் திரு. சி. விஜயராகவாச்சாரியர் செய்தி.

"பேச்சுக்குச் சிதம்பரம்பிள்ளை, பாட்டுக்குப் பாரதியார், எழுத்துக்கு வ. வே. சு. ஐயர். இம்மூவரும்

தமிழ்நாட்டின் மும்மணிகள்; பாரதமாதாவின் வீரத் திரிசூலங்கள். இவர்களைத் தமிழர் மறக்கமுடியாது. உலகமே மறக்கமுடியாது"—என்பது சுவாமி சுத்தானந்த பாரதியாரின் கருத்து.

தென்னாட்டின் தலைவராயிருந்து, உத்தமர் காந்தியடிகளின் உறவினராய்த் திகழ்ந்து, வங்கக் கவர்னராய் வாழ்ந்து, இந்தியாவின் கவர்னர் ஜெனரலாய்க் காலங்கழித்த சக்கிரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் சிலகாலம் சிதம்பரனரிடம் திருக்குறள் கற்றுக்கொண்டார் என்ப. சிதம்பரனர் சிறை எய்தியதும் சுதேசிக் கப்பல் கம்பெனி சின்னபின்னப் பட்டது. இந்தியா விடுதலையடைந்ததும கப்பல் விட்ட பிள்ளையை ஞாபகப்படுத்த வி. ஒ. 'சிதம்பரம்' என்று பெயர் வைத்துக் கப்பல் ஒன்று விட்டனர். இராஜாஜி விழா நடத்தினர். 1000 டன் நிறையுள்ள அக் கபபலை 9-2-1949 தேதி கவனர் ஜெனரல் இராஜாஜி தூத்துக்குடியில் மிதக்க விட்டபோது 50000 மக்கள் கண்டு களிபேறுவகை கொண்டனர். அப்போது இராஜாஜி பேசியது:- "நம் நாட்டார் அலைமீது சாவாரி செயவர்; ஆங்கில நாட்டாருக்குக் குறைந்தவரல்லர்; கடற்கலை, விஞ்ஞானக்கருவிகள் இயற்றுவதாகிய பல துறைகளிலும் நம் இளைஞர்கள் திறமை பெற்றுள்ளார்கள். ஆகவே நம அருமைச் சிதம்பரம் பிள்ளை முதலியோர் ஆசைக் கனவுகள் நமது காலத்திலேயே நிறைவேறும் என்பது உறுதி.

"இந்தியாவில் தென் இந்தியர் தான் தம் சொந்தக் கப்பலை முதலில் கடலில் செலுத்த முயன்றனர். அச்செய்தியில் நாம் பெரிதும் பெருமை கொள்ளலாம். அம்முயற்சியில் சிதம்பரம்பிள்ளை அரும்

பாடு பட்டார். ஹார்வி கம்பெனியாரும் பிரிட்டிஷ் இந்திய கப்பல் கம்பெனியாரும் சிதம்பரம்பிள்ளையைத் தம் ஜென்ம விரோதியாகக் கருதினர். அவர்கள் இப்போது சிதம்பரம்பிள்ளை பெயரைத் தாங்கி நிற்கும் இக்கப்பலுக்கு உதவியாக இருக்கிறார்கள். பிரிட்டிஷ் இந்திய கப்பல் கம்பெனியார் தங்களுடைய கப்பல் சர்வீசை இந்த மார்க்கத்திலிருந்து வாபஸ் பெற்றுக் கொண்டார்கள்.

"காலஞ்சென்ற சிதம்பரம்பிள்ளையுடன் நெருங்கிப் பழகும் பேறும், அதனால் மகிழ்ச்சியும் எனக்குக் கிட்டியதுண்டு. அவர் ஆன்மா இப்புனித முயற்சியை ஆசீர்வதிக்குமாக. இக்கப்பல் அவரது திருப்பெயரைச் சூடிக்கொள்ளுமாக. இந்த விழாவையும் என்னையும் அவர் பார்த்துக் கொண்டிருப்பதாகவும், அவர் தனது பெருங் கண்களால் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து ஆசீர்வதிப்பதாகவும் பாவனை செய்து பார்த்துக் கொள்ள இயலும்.

"இக்கப்பலுக்குக் காலஞ்சென்ற தீரமிக்க வீரன் சிதம்பரம் பிள்ளையின் பெயரை இடுவதில் நான் பெருமிதம் கொள்ளுகிறேன்" என்றார் இராஜாஜி.

"ஜலப்பிரபா" என்ற கப்பலைக் கடலில் மிதக்க விட்டபோது, விழா நடத்திய இந்தியாவின் உதவிப் பிரதமர் சர்தார் வல்லபாய்ப் படேல் அவர்கள் தென்னாட்டில் முதன் முதல் கப்பலோட்டிய வீர சிதம்பரனாரை வாயாரப் பாராட்டிப் பேசினார்.

"சிதம்பரம்பிள்ளை மிகவும் இனிமையான சல்லாபி. புதிதாக யாரைச் சந்தித்தாலும் அவர்களுடைய ஊர், பேர், தொழில், குடும்ப நிலை முதலான க்ஷேம லாபங்களைப்பற்றிக் கொஞ்சமாவது பேசி

விட்டுத்தான் பிறகு வந்த காரியத்தை வாதிப்பார். வாதிப்பதில் மிக்க வல்லவர். பலமான எதிர்வாதம் ஏற்பட்டுக் கடுமையான பதங்களைப் பிரயோகித்து விட்டாலும் கோபங் கொள்ளாமல் முறைதவறிப் பேசாமல் நிதானமாக நியாயங்களை விளக்குவார். தாம் ஒரு தலைவன், படிப்பில் பட்டம் பெற்றவன், தேசத்திற்காகக் கடுமையான சிறைவாசம் செய்து அரிய பெரிய தியாகங்களைச் செய்தவன், மற்ற மனிதர்களிடத்தில் இல்லாத பல சிறப்புகள் தம்மிடத்தில் உண்டு என்பதான அகந்தை எண்ணங்கள் ஒரு சிறிதும் இல்லாத சிலருள் ஒருவர் சிதம்பரம்பிள்ளை. குழந்தையைப்போலக் குழைந்து பேசிக்குலவுவார். அவருடைய வாதங்கள் மிகவும் திறமை வாய்ந்தவை. எதிரியை எளிதில் மடக்கி விடக் கூடிய ஆற்றல் அவரிடம் அதிகம் இருந்தது" என்பன கவிஞர் நாமக்கல்லார் கருத்து.

பிள்ளையவர்கள் கல்கத்தா காங்கிரஸுக்குச் செல்லும் போது நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையவர்களைக் கண்டு காந்தியடிகளின் ஒத்துழையாமைத் திட்டத்தை எதிர்த்து ஓட்டுப் போட வேண்டுமென்று வேண்ட, அவர் நாமக்கல்லிலிருந்து மூவர் கல்கத்தா செல்வதாகவும், மூவரும் காந்தியின் தீர்மானத்தை ஆதரிக்க அனுப்பப் பட்டவர்கள் என்றும், அத தீர்மானத்துக்கே ஓட் போடுவதாக வாக்களித்துப் புறப்பட்டவர்களென்றும், அதற்கு விரோதமாகத் துரோகம் செய்ய அஞ்சுவதாகச் சொன்னபோது, "சபாஷ் புலவரே, உங்கள் உண்மைத் தன்மையை நான் மிகவும் மெச்சுகிறேன். மனமார வாழ்த்துகிறேன். நீங்கள் உங்களை அனுப்பியவர்களுடைய நம்பிக்கைக்குத் துரோகம் செய்

யக் கூடாது என்று நினைப்பது மிகவும் உயர்வான நோக்கம். அப்படியே செய்யுங்கள். அதுதான் சரி" என்று கூறினாராம். இது பிள்ளையவர்களின் நேர்மைக் குணத்தை எடுத்து காட்டும்.

"இந்த நிகழ்ச்சி சிதம்பரம் பிள்ளையாகிய இந்தக் கப்பலோட்டிய தமிழனுடைய நேர்மைக் குணத்தின் சிறப்பை என் நினைவில் பதிய வைத்தது" என்று கூறுகிறார் சென்னை மாகாண தமிழ் ஆஸ்தான வித்வான் இராமலிங்கம்பிள்ளையவர்கள்.

சிதம்பரனார் கல்வித்திறமையுள்ளவர். வாதிப்பதில் வல்லமை பொருந்தியவர். சமத்துவ எண்ணத்தைக் கைக்கொண்டவர். நேர்மையைப் பாராட்டுபவர். திடச்சித்தமுடையவர்.

"வெள்ளைக்காரரை இந்தியாவைவிட்டு விரட்ட வேண்டும் என்பதில் வெகு பிடிவாத குணமுள்ளவர் என்றாலும் சிதம்பரம் பிள்ளை மிகவும் இளகிய மனமும் இனிய குணமும் உள்ளவர். நண்பர்களிடத்தில் வெகு நயமாகவும் நாகரீகமாகவும் நடந்து கொள்வார். அவருடைய வாதங்களில் அற்பத்தனமோ கண்ணியக் குறைவோ காண முடியாது. சிதம்பரம் பிள்ளையவர்கள் நல்ல தமிழன். தமிழன் என்றால் தமிழ்ப்பண்புகள் நிறைந்தவர். தமிழ்ப் பண்பு என்றால் தமிழ் நாட்டின் வழக்க ஒழுக்கங்களிலும் தமிழ்மொழி இலக்கியங்களிலும் தமிழன் எந்தெந்த நோக்கங்களைச் சிறந்தன வென்று பின்பற்றி வாழ்ந்து வந்திருக்கிறானோ அந்தக் குணச் சிறப்புகள் நிறைந்தவர். தமிழ் இலக்கிய நூல்களில் ஆழ்ந்த அறிவுடையவர்— இவை இராமலிங்கனார் கருத்துக்கள்.

சிதம்பரனார் தமிழ் மொழியின்பேரில் பேரன்பு பூண்டவர். ஒழிந்த நேரங்களில் தமிழ் இலக்கியங்களைக் கற்று வந்தார். சங்க இலக்கியங்களில் ஈடுபாடுடையவர். பிறநாட்டு நல்லறிஞர் நூல்களை தமிழில் ஆக்கவேண்டும் என்று, அவ்வாறே செய்தார். பிள்ளை மதுரைத் தமிழ்ச் சங்கப்புலவர் சோழவந்தான் அரசன் - சண்முகம் பிள்ளையைப் பாராட்டும் மதி நுட்பம் படைத்தவர். சிதம்பரனார் திருக்குறள் அறத்துப்பாலுக்கு ஒரு உரை இயற்றியுள்ளார். அது ஆராய்ச்சி யறிவைத் தூண்டும் தூண்டு கோலாக இருக்கிறது. தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை (இளம் பூரணர் உரை) அச்சிட்டிருக்கிறார். தமிழ் நாட்டிற்கு அது ஒரு தமிழ்த் தொண்டாகும். பிள்ளையவர்களால் கவியியற்ற முடியும். சுருங்கக் கூறின் சிதம்பரனார் தமிழில் வல்லவர்.

"உறக்கம், காதல், கானம், சித்திரம், சிற்பம் இவற்றிலுள்ள சுகத்தைக் காட்டிலும் உயர்ந்த இலக்கியங்களிலுள்ள சுகம் பெரியது, அரியது. மற்றச் சுகங்கள் ஓர் அளவுக்கு மிஞ்சினால் தெவிட்டிப் போகும். நூற்சுவையை எப்போதும் அனுபவிக்கலாம். நவில்தோறும் செவ்விய நூல்களின் நலம் வளர்ந்துகொண்டே போகும். நூல்களை அளவுக்கு மிஞ்சிப் படித்துக் கெட்டவரை நாம் கண்டதில்லை"— என்பது வா. வே. சு. அய்யர் கருத்து. சிதம்பரனாரின் கருத்தும் அஃதே.

வாழ்க சிதம்பரனார் புகழ்.

விவேகானந்தா அச்சகம், மதுரை:—50.